உ

கணபதி துணை.

# பாலபாடம்

## மூன்றாம்புத்தகம்.

இது

யாழ்ப்பாணத்து நல்லூர்

**ஆறுமுகநாவலரவர்கள்**

சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகராயிருந்த

**பொன்னம்பலபிள்ளையால்**

செய்து,

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

கக-ம் பதிப்பு.

பிரமாதி௵ ஆடிமீ.

1939.

அரசினரால் அங்கீகரிக்கப்பட்டது.

(Copyright Registered.)

MADRAS-1

# சூசிபத்திரம்.


| | பக்கம். |
|---|---|
| இந்தியா ... ... ... | ௨௮ |
| இலங்கை ... ... ... | ௪௪ |
| ஈகை ... ... ... ... | ௪௨ |
| உண்மையின் பயன் ... | ௨௫ |
| உயிர்களுக்கு இதஞ்செய்தல் | ௧௧ |
| உலோகங்கள் ... ... | ௯௭ |
| ஒட்டகம் ... ... ... | ௯௦ |
| கடவுளுதவி ... ... ... | ௧௩ |
| கல்வி ... ... ... ... | ௧௯ |
| கல்வியின் பயன் ... ... | ௯௨ |
| காகிதம் ... ... ... | ௯௪ |
| காலம் ... ... ... ... | ௨௪ |
| குதிரை ... ... ... ... | ௯௯ |
| கேள்வி ... ... ... ... | ௧௮ |
| சகோதரசகோதரிகள் ... | ௮ |
| சரீரசௌக்கியம் ... ... | ௫௫ |
| சற்புத்திரர்களே ஆபரணம் | ௭ |
| சற்புத்திரர் ... ... ... | ௫௬ |
| சிங்கம் ... ... ... ... | ௫௧ |
| சிநேகம் ... ... ... | ௪௧ |
| செய்ந்நன்றி கொன்றவர் கெடுவர் ... | ௯௧ |
| செல்வம் ... ... ... | ௧௭ |
| தாவரம் ... ... ... | ௪௬ |
| துர்வார்த்தை ... ... | ௬ |

| | பக்கம். |
|---|---|
| சென்னை ... ... ... | ௫௪ |
| நம்மை ஆளும் அரசர் ... | ௩௦ |
| நன்மாணாக்கன் ... ... | ௧ |
| நாணகம் ... ... ... | ௪௦ |
| நித்தியகருமம் ... ... | ௪ |
| நித்திரை ... ... ... | ௩ |
| பரிகாசம் ... ... ... | ௨௭ |
| புத்தகம் ... ... ... | ௩௯ |
| புறங்கூறல் ... ... ... | ௩௪ |
| பெண்கல்வி ... ... .. | ௨௧ |
| பெரியோரைவழிபடல் ... | ௯ |
| பெற்றோரைப்பேணல் ... | ௧௨ |
| பேராசைபெருந்துயர் ... | ௪௯ |
| பொய்வேடம் ... ... | ௫௨ |
| மழை ... ... ... ... | ௯௫ |
| மாணிக்கவாசகசுவாமிகள் | ௭௩ |
| மிருகம் ... ... ... .. | ௩௨ |
| முயற்சி ... ... ... .. | ௨௦ |
| யாக்கைநிலையாமை ... | ௫௭ |
| யுத்தியுள்ள தீர்ப்பு ... ... | ௧௫ |
| வித்தியாசாலை ... ... | ௩௫ |
| வீடு ... ... ... ... | ௪௭ |
| வேளாண்மை ... ... | ௩௭ |
| நீதிவெண்பாவுரை ... ... | ௮௧ |

கணபதி துணை.

# பாலபாடம்

## மூன்றாம்புத்தகம்.

### ௧. நன்மாணாக்கன்.

நல்ல மாணாக்கன் அதிகாலையில் நித்திரைவிட்டெழும்புவான். அவன் கல்வியில் விருப்பமும், ஊக்கமும் உடையவனாயிருப்பான். வித்தியாசாலைக்கு ஒழுங்காகப் போவான். உபாத்தியாயரிடத்து அன்பும் பணிவும் உடையவனாய், அவருடைய சொல்லுக்கு அடங்கி நடப்பான். அவர் சொல்லும் பாடங்களை வேறு சிந்தனையின்றிக் கேட்டுக் கேட்ட பாடங்களைப் பலதரஞ் சிந்தித்துத், தனக்குச் சந்தேகமான பொருள்களைத் தன்வகுப்பு மாணாக்கர்களை வினாவியறிவான். அவர்கள் சந்தேகமுற்று வினாவியவைகளுக்குத் தான் உத்தரஞ் சொல்லுவான். அவர்களிடத்து அன்புஞ் சிநேகமும் உடையவனாயிருப்பான்.

அவன், தான் நோயாயிருக்குங்காலமும் தன் பிதா மாதா முதலிய பெரியோர்கள் முக்கிய கருமங்களுக்காகத் தடை செய்த காலமும் அல்லாத மற்றை எப்பொழுதாவது, பள்ளிக்கூடத்துக்குப் போகாமலிருக்கமாட்டான். போகாதபொழுதும், தான் வித்தியாசாலைக்கு வரமுடியாமைக்குக் காரணத்தைத் தன் உபாத்தியாயருக்குத் தெரிவித்து அவர் அநுமதி பெற்றுக்கொள்வான். வராத நாளிற் பாடத்தைத் தவறாமல்

படித்து அதன் பொருளைக் கேட்டுத் தெரிந்து கொள்வான். தன் பாடத்தைக் கவனித்தலை விட்டுக் கெட்ட பிள்ளைகளு டைய வீண் பேச்சுக்களுக்கு ஒருபோதுஞ் செவிகொடுக்க மாட்டான்; அவர்களோடு கூட வீண்விளையாட்டுக்களுக்குப் போகமாட்டான்; ஒருவேளை தான் செய்யுங் குற்றத்துக்காக உபாத்தியாயர் தன்னைத் தண்டித்தாராயினும், அவர் தன்மேல் வைத்த நேசத்தினால் அது செய்தார் என்று நினைத்து, தான் அவர்மேல் வைத்த அன்பை ஒருபோதும் மறக்கமாட்டான். ஒவ்வொரு வேளைகளில், தான் வாசிக்கும் பாடங்கள் கடினமா யிருந்தாலும், அதற்காகப் பயந்து அவைகளைப் படிக்காமல் விட்டுவிடமாட்டான்; அவைகளை நாளுக்குநாட் படித்துப் பொருள் தெரிந்துகொள்ளுவான். பழம் பாடங்களை நாடோ றும் சிறிது சிறிதாகப் படித்துப் போற்றிக்கொள்வான். இன் னும், கல்விக்குப் பயன் அறிவும் அறிவுக்குப் பயன் அறிந்த படி நடத்தலுமே, எனத்தெளிந்து, தான் படித்த பாடங்க ளிற் சொல்லியபடி நடக்கப் பழகிக்கொள்வான்.

இப்படி வித்தையை விரும்பிக் கற்பதும் நற்பழக்கமும் அவனை அகலாமல் இருக்கும்பொழுது அந்த நன்மாணாக்க னுக்கு வித்தியாசாலைக்குப் போகாமற் கழிக்கிற ஒரு நாள் ஒரு யுகம்போலக் கவலைக்கிடமாய்க் கழியும். இந்த நன்மாணாக் கன், கல்வியையும் அதன் பயனாகிய அறிவையும் அவ்வறி வின் பயனாகிய ஒழுக்கத்தையும் உடையவனாய், அறிவுடை யோர்களால் நன்கு மதிக்கப்பட்டுப், பொருளையும் புகழையும் இன்பத்தையும் அடைகிறான்.

கல்வியை விரும்பிக் கற்கும் மாணாக்கர்கள் இந்த நல்ல மாணாக்கனைப் போலப் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகப்போய், உபாத்தியாயருடைய சொல்லுக்கு அடங்கி நடந்து, பாலிய வயசிலே கல்வியை அவமதியாது கற்றுக்கொள்ளக்கடவர்கள். இப்பொழுது புதுப்புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினவை

யால், சிறிது கஷ்டமாகவும் இருக்கும். அதைப்பற்றி அதைரியப்பட்டு விட்டுவிடாமல், முயற்சியோடு படித்தால், முன் வாசித்தறிந்த முதலாம் இரண்டாம் பாலபாட புத்தகங்கள் போல இதையும் இலேசாகப் படித்து அறிந்துகொள்ளலாம். "சிறுமையிற் கல்வி சிலையிலெழுத்து" "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினுங் கற்கைநன்றே" "கேடில் விழுச் செல்வங் கல்வி" "அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்" என்னும் பெரியோர் வாக்குக்களை மாணாக்கர்கள் எப்பொழுதும் சிந்தித்தல் வேண்டும்.

---

## உ. நித்திரை.

நம்முடைய மனமும் உடம்பும் நாடோறுஞ் சற்றுநேரம் இளைப்பாறிச் சௌக்கியமாயிருக்கும்படி கடவுள் நித்திரையை நமக்கு ஒரு இயற்கையாகிய குணமாகத் தந்திருக்கிறார். நாம் செய்யும் எவ்வித தொழின் முயற்சிகளினாலும் நம்முடைய மனத்துக்கும் உடம்புக்கும் உண்டாகுந் துர்ப்பலத்தை நீக்கி, நித்திரை நல்ல பலத்தையும், ஆரோக்கியத்தையும் கொடுக்கின்றது. இதனால், நித்திரை எல்லாருக்கும் இன்றியமையாதது. அஃது அளவிற் கூடினாலும் குறைந்தாலும், மனசுக்குச் சோம்பலையும், உடம்புக்கு நோயையுஞ்செய்யும். நித்திரை செய்தற்குரிய காலம் பகற்காலமன்று இராக்காலமேயாம். பகற்காலத்திலே நித்திரை செய்தால், வியாதி வரும்; மூதேவி குடிகொள்வள்; செய்யவேண்டிய தொழில்கள் செய்யாமையாற் கெடும். இவைகளன்றி, இராநித்திரை குழம்பி, துர்ச்சொப்பனங்கள் காணுதற்கு ஏதுவாய், இன்னும் அநேக கெடுதிகளை உண்டாக்கும். ஆதலால், பகற்காலத்திலே ஒருபோதும் நித்திரை செய்யலாகாது.

இரவிலும், ஒருநாளைக்கு ஆறுமணி நேரத்துக்குமேலே நித்திரை பண்ணலாகாது. பகற்கால நித்திரையும், அளவிற்

கூடின நித்திரையும், சிறு குழந்தைகளுக்கு மாத்திரம் தேக வளர்ச்சியையும், சுகத்தையுங் கொடுக்கும். இரவிலே எட்டு ஒன்பது மணியளவில் நித்திரைக்குப் போதல் வேண்டும். போசனஞ் செய்தபின் குறுநடையாக உலாவி, சிறிது நேரஞ் சென்றபின்பு படுக்கைக்குப் போதல்வேண்டும். கை கால்களிலுள்ள ஈரத்துடன் சயனிக்கலாகாது. சீரணமாகாத கடின பதார்த்தங்களை இரவிலே புசிக்கலாகாது.

படுக்குமிடம் நல்ல காற்று உலாவத் தக்கதும் பலர் நெருக்கமாகப் படுத்திருத்தல் சஞ்சரித்தல் இல்லாததுமாய் இருத்தல்வேண்டும். தரைமட்டத்துக்கு உயர்வாகக் கட்டில் முதலியவைகளிலே நித்திரை செய்வது உத்தமம். தலையணையிலே தலைவைத்துக்கொண்டு சயனித்தல் வேண்டும். வடக்குத் திக்கிலே தலைவைத்துச் சயனித்தலாகாது. அப்படிச் செய்யின் ஆயுசு குறையுமென்று பெரியோர்கள் சொல்வார்கள். பெரும்பாலும் வலப்பக்கம் மேலே இருக்கும்படி சயனித்தல்வேண்டும். விடியற்காலத்திலே விழித்த பின்பு மீண்டும் நித்திரை பண்ணலாகாது.

உரியகாலத்திலே நித்திரை வாராதொழிந்தால், பாடம் படித்தல் கடவுளைத் தியானித்தல் தோத்திரஞ்செய்தல் முதலாகிய நல்ல விஷயங்களிலே மனதைச் செலுத்திக்கொண்டிருந்து, நித்திரை வரும்போது சயனித்தல்வேண்டும். நித்திரையைப் பங்கஞ்செய்யத்தக்க விஷயங்களில் மனதைச் செலுத்தலாகாது.

## ௩. நித்தியகருமம்.

சூரியன் உதிக்க இரண்டு மணிநேரத்துக்கு முன்னே நித்திரைவிட்டெழுந்து கைகால் முதலியன கழுவி இயன்றவரையிற் சுத்தனாய், கடவுளைத் தியானித்துத் தோத்திரம் பண்ணி, அதன்பின் பாடங்களைப் படித்து மனனஞ்செய்தல்

வேண்டும். சிறுபிராயத்திலே கற்கின்ற கல்வி மனசிலே நன்ருகப் பதிதல்போல, யாவருக்கும் விடியற்காலத்திலே படிக்கும் வித்தை மனசிலே நன்ருகப்பதியும். ஆதலால், கல்வியை விரும்பிக்கற்கும் மாணக்கர்கள் விடியற்காலத்திலே படிப்பது உத்தமம்.

விடியற்காலத்திலே பாடங்களைப் படித்து ஹரப்பண்ணிக் கொண்டபின்பு, விதிப்படி மலமோசனுதிகள் செய்து இயல்பாகிய துவருள்ள பற்கொம்பினுலே தந்தசுத்தி செய்து, வாய் கொப்பளித்து முகத்தையும் கைகளையும் கால்களையும் கழுவி, ஸ்நானஞ்செய்தல்வேண்டும்.

ஸ்நானஞ் செய்யுமுன் உடுத்த வஸ்திரமுதலியவற்றைத் தோய்த்து அலம்பி அரையிலே தரித்துக்கொண்டு, உடம்பை நன்ருகத் தேய்த்து ஸ்நானஞ்செய்தல் வேண்டும். சலத்திலே நெடுநேரம் ஈரம் ஊறும்படி நிற்கலாகாது. ஸ்நானஞ்செய்த உடனே உடம்பிலுள்ள ஈரத்தைத் துவட்டி, தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துக்கொண்டு, அநுட்டானஞ் செய்தல்வேண்டும். ஸ்நானஞ்செய்தற்கு மத்தியானகாலத்திலும் பிராதக்காலம் உத்தமம். ஆற்றிலே ஸ்நானஞ்செய்வது விசேஷம். அது சமீபத்தில் இல்லையாயின், குளம் கிணறு முதலியவைகளில் ஸ்நானஞ் செய்யலாம்.

உடம்பு வேர்த்துக் களைக்க வேலை செய்தவுடனே ஸ்நானஞ் செய்யலாகாது: சிறிது நேரம் இருந்து வேர்வையாறினபின் ஸ்நானஞ் செய்தல்வேண்டும். காலையில் உண்டபோசனம் சீரணமாகு முன்னும், சீதளமான இரவிலும் ஸ்நானஞ் செய்யலாகாது.

## ச. பெரியோரைவழிபடல்.

பிதா, மாதா, குரு, உபாத்தியாயர், தமையன், தமக்கை, மாமன், மாமி, பெரியதகப்பன், சிறியதகப்பன் முதலாகிய இவர்கள் பெரியோர்கள் என்று சொல்லப்படுவர்கள். நம்மைப் பெற்றுவளர்த்தல், அன்னவஸ்திரந் தந்துதவுதல், கல்வி கற்பித்தல், நல்லறிவைப் போதித்தல், நமக்கு நோய்முதலியன வந்த காலத்தில் மனம் பரிதபித்து உதவிசெய்தல் என்னும் இவைகளைச்செய்து, நம்மைக் காப்பாற்றும் இப்பெரியோர்களையும், இவர்கள் செய்த நன்றிகளையும், ஒருபோதும் மறந்துவிடலாகாது. எப்பொழுதும் இவர்கள் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, இவர்களை வழிபட்டுக் கொண்டுவருதல் வேண்டும்.

ஒருவேளை அப்பெரியோர்கள் நம்மைக்கோபித்தாலும் அதைப் பொறுத்துக் கொண்டு, அவர்கள் சொல்லுக்கு அமைந்து நடத்தல் வேண்டும். அவர்களுக்கு முன்னே வெடுவெடுத்த சொல்லும் கடுகடுத்த முகமும் காட்டலாகாது. பெரியோர்களுக்கு அடங்கி நடத்தலாவது, அவர்கள் சொற்படிநடத்தலாம். கல்வியையும் நல்லொழுக்கத்தையும் கெடுக்கும்படி அவர்கள் சொல்லும் சொற்களைக் கேட்கக் கூடாதகாலத்தும், அதை அவர்களுக்குத் தக்க மரியாதையோடு தெரிவித்து, அவர்கள் மனசைத் திருப்திசெய்து ஒழுகல்வேண்டும்.

பெரியோர்கள் வீட்டுக்கு வந்தால் சீக்கிரம் எழுந்து எதிர்கொண்டு அழைத்துவந்து, ஆசனத்தி லிருத்தி வழிபாடு செய்து, உபசரித்தல் வேண்டும். அவர்சள் இருக்கச் சொல்லுமுன் அவர்களெதிரே இருத்தலாகாது. அவர்கள் பேசுஞ் சொற்களைக் கவனமாகக்கேட்டு, அவைகளின் சாரங்களைத் தெரிந்துகொள்ளல்வேண்டும். அவர்கள் யாதாயினுங் கேட்டால், நன்றாக யோசித்து மறுமொழி சொல்லல் வேண்டும். அவர்களோடு பேசும்போது, தன்னைத் தாழ்த்தியும் அவர்-

களை உயர்த்தியும் பேசல்வேண்டும். அவர்களிடத்தில் இரண்டு கைகளினாலும் கொடுத்தல் வாங்குதல் செய்தல் வேண்டும். இப்படி நடக்கும் பிள்ளைகளுக்குப் பெரியோர்களுடைய ஆசீர்வாதமும், கடவுளுடைய அநுக்கிரகமும், ஆயுளும் கல்வியும், நல்லொழுக்கமும் அபிவிருத்தியாகும்.

---

## ரு சற்புத்திரர்களே ஆபரணம்.

ஓர் ஊரிலே ஒரு பெரிய செல்வன் இருந்தான். அவன் மனைவி, விலையேறப் பெற்றவைகளும் அழகுள்ளவைகளுமாகிய அநேக இரத்தினாபரணங்களையும், பொன்னாபரணங்களையும், வஸ்திரங்களையும் வைத்திருந்தாள். அவள் தான் அணியும் ஆபரணங்களையும் விசித்திர வஸ்திரங்களையும் எல்லாரும் பார்த்துப் புகழ்ந்து பேசுவதைக் கேட்பதில் மிகுந்த ஆசையுள்ளவள்.

அவள் ஒருநாள் வேறு ஊரிலிருக்கிற ஒருபிரபுவின் வீட்டுக்கு விருந்தாக அழைக்கப்பட்டுப் போயிருந்தாள். அங்கே, தான் அணிந்திருக்கிற வஸ்திராபரணங்களைப்பற்றி அடிக்கடி அந்தப் பிரபுவினுடைய மனைவிக்கு எடுத்துப் புகழ்ந்து பாராட்டிச் சொன்னாள். பிரபுவின் மனைவி, இவளுடைய ஆபரணங்களைப் பற்றிச் சிறிதும் கவனம் செலுத்தாதவளாகி, தன் வீட்டுவேலைகளிலும் வந்தவர்களை உபசரித்தலிலுமே கவனமுள்ளவளாயிருந்தாள். அதைக்கண்ட இவள், தன்னிடத்துள்ளவைகளைக் காட்டிலும் விலையேறப்பெற்ற இரத்தினாபரணங்கள் அவளிடத்தில் இருக்கக்கூடும் என்று நினைத்து, ‘உன்னிடத்துள்ள ஆபரணங்களை நான் பார்க்க விரும்புகிறேன் காட்டு’ என்றாள். அதைக்கேட்ட புத்திசாதுரியமுள்ள பிரபுவின் மனைவி, ‘இப்போது என்னுடைய ஆபரணங்கள் வீட்டிலில்லை வெளியிலே போயிருக்கின்றன சற்று நேரத்தில் வந்துவிடும் வந்தபின் காட்டுவேன்’ என்றாள்.

சிறிதுநேரத்துள், அவளுடைய புத்திரர்களாகிய சிறுவர்கள் வித்தியாசாலையினின்றும் வந்தார்கள். அவர்களைக் காட்டி, 'இவர்களே என்னுடைய விலையேறப்பெற்ற ஆபரணங்கள்' என்று சொன்னாள். அதைக்கேட்டுச் சற்றுநேரம் அந்தப்பிள்ளைகளுடைய சகோதர ஒற்றுமையையும் மற்றை நற்குணங்களையும் நல்ல பழக்கங்களையும் கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்த செல்வன் மனைவியானவள், பிரபுவின் மனைவியினுடைய புத்தியை வியந்து, 'இப்படிப்பட்ட நல்ல பிள்ளைகளே விலைமதிக்க முடியாத ஆபரணம்' என்று மனத்தில் உறுதி செய்துகொண்டாள்.

## ௬. சகோதர சகோதரிகள்.

ஒருதாய் வயிற்றிற் பிறந்த ஆண்பிள்ளைகளுக்குச் சகோதரர் என்றும், பெண்பிள்ளைகளுக்குச் சகோதரிகள் என்றும் பெயர். சகோதர ஒற்றுமையுள்ள குடும்பம் ஆண்மைசெல்வம் முதலிய எல்லாவற்றாலும் ஓங்கும். சிறு பிராயத்திலே சகோதர அன்புடையவர்களாயிருக்கிற பிள்ளைகள், அந்த அன்பு மேன்மேலும் வளர, தங்கள் சகோதரர்களோடு ஒற்றுமையுடையவர்களாயிருந்து, பலதொழில் முயற்சிகள் செய்து பொருள் சம்பாதித்து, சுகமாய் வாழுகின்றார்கள். அவர்களுக்குப் பகைவர்களும் பயப்படுகிறார்கள். சகோதர ஐக்கமாக வாழ்ந்தால், செய்து முடிக்கக்கூடாத அருமையான காரியங்களையும் இலேசாகச்செய்து முடிக்கலாம்.

ஒருபையன் ஒரு விளையாட்டுச் சாமானை ஒரு காசுகொடுத்து வாங்குகிறான். அதே விளையாட்டுச் சாமானை நாலுபிள்ளைகள் நாலுகாசு ஒருமிக்கச் சேர்த்துக் கொடுத்து வாங்குவார்களேயானால், ஆறு அல்லது ஐந்துக்குக் குறையாமல் வாங்குகிறார்கள். ஒருகாசுக்கு ஒன்றாக வாங்கின அதேசாமான், நாலுகாசுக்கு ஐந்து ஆறு வாங்கும்படி கிடைத்தது எதனால் என்ற

தைப் பிள்ளைகள் யோசித்துப் பார்த்தால், சகோதர ஒற்று மையா லுண்டாகும் பிரயோசனத்தை அவர்கள் இலேசில் அறிந்துகொள்வார்கள்.

பிள்ளைகள் சிறுபிராயத்திற்றானே சகோதர பக்ஷத்தை, மறந்துவிடாமல், ஒற்றுமையை அநுசரித்தல் வேண்டும். சகோதர சகோதரிகள் குற்றஞ் செய்தாலும், அதை நினையாமல் அவர்கள்மேல் அன்பு பாராட்டி நடத்தல்வேண்டும். தாங்கள் வைத்திருக்கிற விளையாட்டுச் சாமான்களையும் போசன பதார்த்தங்களையும் தங்கள் சகோதரர்களுக்குங் கொடுத்தல் வேண்டும். அவர்களோடு எப்பொழுதும் இனிமையாகப் பேசல்வேண்டும். சகோதர சகோதரிகள் ஒருவரையொருவர் முறை சொல்லியழைப்பது பக்ஷம் வளர்தற்கு ஏதுவாகும்.

சகோதரர்களுக்குள்ளே மூப்பு இளமைக்குத் தக்க மரியாதை இருத்தல் வேண்டும். இக்காலத்திலே, நம்மவர்களுடைய பிள்ளைகளுள் அநேகர், சகோதர மரியாதையின்றி ஒருவரையொருவர் சமத்துவமாகப் பெயர் சொல்லி அழைக்கின்றார்கள். இந்தப் பழக்கமே அவர்களுடைய முதிர்ந்த பருவத்திலும் அவர்களைத் தொடர்கின்றது. இதைப் பெற்றார்களும் உபாத்தியாயர்களும் கவனித்து, அவர்களைத் திருத்துதல் வேண்டும்.

---

## எ. துர்வார்த்தை.

கேட்பவர்களுக்கு மனவருத்தத்தையும், வெறுப்பையும், கோபத்தையுந் தரும் அசப்பியச் சொற்களும், வைவுகளும் முதலான கெட்ட சொற்கள் துர்வார்த்தைகள் எனப்படும். சிறுவர்கள் வாயிலே இத்துர்வார்த்தைகள் உண்டாவது எப்பொழுதுஞ் சகவாச தோஷத்தினாலேயாம். ஒரு வித்தியாசாலையிற் சிநேகர்களாய்ப் படித்துக்கொண்டு வருஞ் சில பிள்ளை

களே சிலவேளைகளில் இத்துர்வார்த்தைகளைப் பேசி விளையாடு கிறார்கள். அவர்கள் வளர வளர, அத்துர்வார்த்தைகளும் அவர்கள் வாயில் வளர்ந்துகொண்டு வருகின்றன. இதனால், அப்பிள்ளைகள் அறிவுடையோர்களால் இகழப்பட்டுக் கெட்ட வர்களாகின்றார்கள். அதுமாத்திரமா, விளையாட்டுக்காகப் பேசும் துர்வார்த்தைகளால் அப்பிள்ளைகள் ஒருவரோடொரு வர் கோபம் மூண்டு சண்டையிட்டு, முன்னுள்ள சிநேகத்தை யும் மறந்து, தீராப் பகைவர்களாகின்றார்கள். சிநேகத்துக்கா கப் பேசும் இனியவார்த்தைகளிருக்கவும், அவர்கள் துர்வார்த் தைகளைப் பேசி, கேட்போர்களுக்கு அருவருப்பையும், தமக் குக் கேட்டையும், விளைவித்தற்குக் காரணம் திருத்துவாரில் லாத குறையேயன்றி வேறன்று.

இத்தேசத்திலே சிலர், தங்கீழுள்ள வேலைக்காரர் முத லாயினோரை அடிக்கடி துர்வார்த்தைகளைச் சொல்லி வைவது வழக்கமாயிருக்கின்றது. வேலைக்காரர் முதலாயினோர் குற்றஞ் செய்யில், அவர்களைப் பிரம்பினால் அடித்துக் கண்டித்தும், புத்திசொல்லியும் திருத்துதலே முறைமையும் இலேசுமா யிருக்க; தம்பக்கத்திலுள்ள மனைவி மக்கள் முதலாயினோரும் அருவருத்து விலகும்படி இழிந்த அசப்பிய வார்த்தைகளால் அவர்களை வைது தங்கள் மரியாதையை இழப்பது என்ன அறியாமையோ அறியோம். இவர்களைக்கண்ட பிள்ளைகளும் இவர்களுடைய இத்துர்ப்பழக்கத்தையே பழகிக் கெட்டுப் போகின்றார்களே!

துர்க்கந்தம் வீசும் பெருவியாதி முதலிய கொடுநோயுடை யவரை அணுகினும், துர்வார்த்தை பேசுவோரை அறிவுடை யோர் எப்பொழுதும் அணுகுவதற்கு அஞ்சி அருவருத்து அகலுவர். கள்ளுண்டு தம் சுயவறிவிழந்துகளிக்கும் இழி தொழிலாளர்க்குரிய இத்துர்வார்த்தையை, அஃதில்லாத

மேன்மக்கள் தம் வாயாற்பேசி அறிவுடையோரால் இகழப் படுதல் என்ன பேதைமை!

## அ. உயிர்களுக்கு இதஞ்செய்தல்.

பிறவுயிர்கள் துன்பப்படுதலைக் கண்டால், அத்துன்பம் நமக்கு வந்ததுபோல எண்ணி, அதனை நீக்க முயலுதல் வேண்டும். தம்முயிரை வருந்திப் பாதுகாத்தல் போலப் பிற உயிர்களையும் காப்பாற்றாதவிடத்து, மனிதர்களுக்கு அறிவினால் ஒருபயனும் இல்லை. உலகமெங்கும் வியாபித்திருக்கும், கடவுளுக்கு உயிர்களெல்லாம் திருமேனிகளாதலால், அவ்வுயிர்களுக்குத் துன்பம் வராமல் இதஞ்செய்து பாதுகாத்தல் புண்ணியமாயிற்று.

பிற உயிர்களுக்கு இதஞ்செய்யாதவிடத்து மற்றை எவ்வகைத் தருமங்களாலும் பிரயோசனமில்லை. பிறவுயிர்களுக்கு ஒரு தீங்கையும் செய்யாமைமாத்திரையால் ஒருவன் நல்லவனாகமாட்டான். தன்னால் இயன்ற இதங்களைப் பிறவுயிர்களுக்குச் செய்பவனே தனக்கும் மற்றை உயிர்கள் எல்லாவற்றிற்கும் நல்லவனாகின்றான். உயிர்களுக்கு இதஞ்செய்பவன் தன் பொருட்டுமாத்திர மன்றிப் பிறர்பொருட்டும் பிரயாசப்படுவான். தன்பொருட்டுப் பிரயாசப்படுபவன், அதனால் வரும் அற்ப இன்பத்தைமாத்திரம் அடைகின்றான். பிறர்பொருட்டுப் பிரயாசப்படுபவனுக்கு உலகம் அவன் வசத்ததாய்விடும். ஆகவே, அவன் அதனால் எவ்வகைப்பட்ட இன்பங்களையும் அடைகிறான்.

உயிர்களுக்கு இதஞ்செய்தற்குக்காரணம் அவைகளிடத்துள்ள இரக்கமேயாதலால், எவனிடத்தில் இரக்கம் என்னும் குணம் இருக்குமோ, அவனிடத்திலே இதஞ்செய்தலாகிய அறமும் காணப்படும். அவ்வறம் மனிதர்களிடத்துமாத்திர

மன்றி, விலங்கு பறவை ஊர்வன முதலிய பிராணிகளிடத்தும் செயற்பாலதாம். ஆதலினால், அவைகளைக் கல்லினால் எறிதல், தடிகொண்டடித்தல் முதலிய தீமைகளைச் செய்யாது காத்தலும், நடத்தல் விளையாடுதல் முதலியவைகளினாலே ஊர்வனவற்றிற்குக் கேடுவராவண்ணஞ் சாவதானமாக ஒழுகுதலும், சிறுவர்களுக்குக் கடமையாம்.

சிலர், பிறவுயிர்களுக்கு அகிதத்தையே செய்துகொண்டு, அன்னதானமுதலிய தருமங்களைச் செய்கின்றார்கள். அவைகள் இடம்பநிமித்தமாகும் அன்றி, ஒருபோதும் புண்ணியமாகமாட்டாவாம்.

## கூ. பெற்றாரைப்பேணல்.

நம்மைப் பெற்றவர்கள் நம்முடைய தாயும் தந்தையும். நாங்கள் பிறந்தநாள்முதல், கல்விகற்று அறிஞர்களாய்ப் பொருள்சம்பாதித்துச் சீவனஞ்செய்யும் பருவத்தை அடையும்வரையும், நமக்கு வேண்டிய அன்னவஸ்திரங்களைத் தந்தும், நமக்கு வியாதி வந்தகாலத்திலே அதற்காக மனம் பதைபதைத்து வைத்தியஞ் செய்வித்துச் சௌக்கியப்படுத்தியுங், கல்விகற்பித்தும், நல்ல பழக்கங்களைப் பழக்கியும், எப்பொழுதும் நமக்காகப் பாடுபடுபவர்கள் நம்முடைய பிதாமாதாக்களே. நம்மைக் கருவில் வகித்த நாள்முதல், நாம் பிறந்து வளர்ந்து பாலாவத்தையை அடையுமளவும், மாதாவானவள் நமக்காகப் பட்ட பிரயாசைகளையும், கவலைகளையும், நம்மால் அளவிடுதல் முடியாது.

பிதாமாதாக்கள் நம்மைக்குறித்துச் செய்யும் உபகாரங்களுக்கோ நம்மாற் பிரதியுபகாரஞ் செய்ய முடியாது. ஆயினும், அவர்கள் செய்த நன்றிகளை உள்ளத்தில் வைத்து, அவர்கள் முட்டுப்படாவண்ணம் அன்னவஸ்திரங் கொடுத்துக் காப்பாற்றுதலும், அவர்கள் ஏவுதற்குமுன் குறிப்பறிந்து அவர்

களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தலும், அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தலும், அவர்களுக்கு நோய் வந்த காலத்திலே சிறந்த வைத்தியரைக்கொண்டு வைத்தியஞ் செய்வித்தலும், அவர்கள் இறக்கும்பொழுது அவர்களைப் பிரியாது உடனிருத்தலும், அவர்கள் மனம் கடவுளிடத்தே செல்லும்படி பெரியோர்களைக் கொண்டு நல்லறிவைப் போதிப்பித்தலும், இறந்தபின் அவர்களுக்குச் செய்யும் உத்தரக்கிரியைகளைச் சிரத்தையோடு செய்தலும், அவர்களுடைய நன்மைகளை எடுத்துப் பாராட்டுதலும் ஆகிய இவைகளை நாம் பிதாமாதாக்களுக்குச் செய்யுங் கடமைகளாகக் கொண்டொழுகுதல் வேண்டும். நாம் இப்படிப் பிதாமாதாக்களை உபசரித்து, அவர்கள் செய்த நன்றியை மறவாதொழுகுவோமானால், அது கண்ட நம்முடைய பிள்ளைகளும் நம்மை உபசரிக்கும்.

நாம் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று அறிதற்குமுன் கண்ணாற் கண்ட தெய்வம் தாய்தந்தையர்களே ஆதலாலும், என்றும் நம்முடைய நலத்தை விரும்பி அதற்காகப் பிரயாசப்படுபவர்கள் அவர்களே ஆதலாலும், அவர்களை ஒருபொழுதும் மறவாது, நம்முடைய தெய்வங்களாகக்கொண்டு, வழிபடுதல் வேண்டும். இக்கருத்துப்பற்றியே ஔவையாரும் **"அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்"** என்று சொல்லியருளினார்.

---

## கo. கடவுளுதவி.

கடவுளுதவியாவது, கடவுளால் ஆன்மாக்களாகிய எங்களுக்குச் செய்யப்படும் உதவி. கடவுள் தம்முடைய அனுபவத்தின்பொருட்டு வேறொன்றையும் வேண்டுபவர் அல்லர். ஆதலால், அவருக்கு நாம் செய்யும் உதவி ஒன்றுமில்லை. ஒருவர் ஒருவருக்கு ஓர் உதவியைச் செய்வது, அதனைப் பெற்றுக் கொண்டவர் அதனாற் சுகம் உறுதற்கே. துக்க நீக்கத்தின் பொருட்டுச் செய்யும் உதவியும் சுகத்தின்பாற்படும். அச்சு

கம் சரீரசுகம் ஆன்மசுகம் என இருவகைப்படும். இவ்விரண்டனுள், நிலையில்லாத சரீர சுகத்தின்பொருட்டுச் செய்யும் உதவியினும், நிலையுள்ள ஆன்ம சுகத்தின்பொருட்டுச் செய்யும் உதவியே சிறந்தது. அதினும் சரீரசுகம் ஆன்மசுகம் என்னும் இரண்டன்பொருட்டுச் செய்யும் உதவி மிகச் சிறந்தது. இந்த இரண்டு சுகங்களையும் நமக்குத் தந்தருளுபவர் கடவுளே.

கடவுள் நம்மேற்கொண்ட இரக்கத்தினால் நாம் இருத்தற்குப் பூமியையும், உலாவுதற்கு ஆகாயத்தையும், உண்ணுதற்குச் சலமுதலியவற்றையும், உணவுகளைப் பாகம் பண்ணுதற்கு அக்கினியையும், சுவாசித்தற்கு வாயுவையும் உதவினார். இன்னும், வேலைசெய்யுங் காலமாகிய பகற்காலத்தில் ஒளியைக்கொடுத்தற்பொருட்டுப் பேரொளியாகிய சூரியனையும், இளைப்பாறுங் காலமாகிய இரவில் ஒளியைக் கொடுத்தற்பொருட்டுச் சந்திரனையும், கிரகங்களையும், நக்ஷத்திரங்களையும் உதவினார்.

இவைகளை மாத்திரமா, உயிர்களாகிய நாம் வசித்தற்கு ஒன்பது வாசல்களையுடையதும், எழும்புதல் வீழ்தல் வளைதல் நிமிர்தல் நடத்தல் என்னும் ஐவகைத் தொழில்களைச் செய்வதும், ஆகிய ஒரு நடை வீட்டையும் உதவினார். இவற்றையெல்லாம் கொடுத்து இவைகளை அறிந்து அனுபவிக்கும்படி, அறிவையும், அவ்வறிவினாலே ஆன்மசுகத்தை அடைதற்குக் காரணமாகிய ஞானத்தைப் பெறும்படி வேதாகமங்களையும் உதவினார். அதுமாத்திரமா, உயிர்க்குயிராய் நின்று உணர்த்துதலையும் செய்கின்றார்.

இவ்வியல்புடைய கடவுளுக்கு நாமும் இவ்வுலகமும் அடிமைப்பொருள்களும் உடைமைப் பொருள்களுமாம். ஆதலால், அவர் நமக்கு ஆபத்துக் காலத்திற் செய்வனவும், கைம்மாறு கருதாது செய்வனவும், செய்யாமற் செய்வனவும் ஆகிய இப் பேருதவிகளைக் குறித்து நாம் அவருக்குக் கைம்மாறாகச் செய்

யும் உதவி ஒன்றுமில்லை. ஆயினும், அக்கடவுளையும் அவர் செய்யும் நன்றிகளையும் இடைவிடாது சிந்தித்து, அவரை எவரினும் மேலானவராக மதித்து, வழிபட்டுக்கொண்டு வருதல் ஆன்மாக்களாகிய நமக்குக் கடமையாம்.

---

## ௧௧. யுக்தியுள்ள தீர்ப்பு.

நான்குபேர் கூடிக்கொண்டு ஓர் ஊருக்குப் போகும்போது, வழியில் ஒரு பணமுடிச்சைக் கண்டு எடுத்து, அதைப் பங்கிட்டுக்கொள்வதில் நெடுநேரம் வழக்குப்பேசியும் தீராமையால், அந்த ஊரிற் கடைவைத்திருக்கும் ஒரு வர்த்தகனிடத்தில் அம்முடிச்சைக் கொடுத்து, 'நாங்கள் நால்வரும் வந்து கேட்கும்போது இதைக்கொடும் ஸ்நானம் செய்து போசனம் பண்ணி வருகின்றோம்' என்று சொல்லிப் போனார்கள்.

போன நால்வரும் அந்தக் கடைக்குச் சமீபத்திலுள்ள ஒரு குளத்திலே ஸ்நானஞ் செய்து, கட்டுச்சோற்றையுண்டு, தங்களுள் ஒருவனைப் பார்த்து, 'வர்த்தகனிடத்திலே போய் எங்கள் பணமுடிச்சில் ஒரு அணா எடுத்து அதற்கு வெற்றிலை பாக்கு வாங்கி வா, என்று சொல்லி அனுப்பினார்கள். அவன் போய்ப் பணமுடிச்சைக் கேட்டான். வர்த்தகன் 'மற்றை மூவரும் சொன்னலொழிய உன்னிடம் கொடுக்கமாட்டேன்' என்ருன். அவன், 'மற்றவர்களைக் கொண்டு சொல்லுவிக்கிறேன் செட்டியாரே பாரும்' என்று சொல்லி, அங்கே நின்றபடி அவர்களைக் கூப்பிட்டு, 'செட்டியார் தரமாட்டேன் என்கிருர்' என்ருன். அவர்கள் 'கொடுத்தனுப்பும்' என்ருர்கள். வர்த்தகன் பணமுடிச்சை எடுத்துக்கொடுத்தான். அவன் அதை வாங்கிக்கொண்டு அடுத்த கடையில் வெற்றிலைபாக்கு வாங்குகிறவன்போல ஒளித்தோடிப் போய்விட்டான்.

மற்றை மூவரும் அவனைச் சிறிது நேரம் பார்த்துக், காணமையினல், வர்த்தகனிடத்தில் வந்து, கேட்டார்கள்.

வர்த்தகன், 'அவன் பணமுடிச்சை வாங்கிக்கொண்டு முன்னமே உங்களிடம் வந்துவிட்டான்' என்றான். மூவரும் வருத்தப்பட்டு, 'நாங்கள் நால்வரும் வந்து கேட்கும்போது தர வேண்டும் என்று பொதுக்கட்டிவைத்த பணமுடிச்சை நீர் ஒருவனிடம் கொடுக்கலாமா' என்று கோபித்து, பணமுடிச்சைத் தரும்படி வர்த்தகன் மேலே வழக்குத் தொடுத்தார்கள். நியாயாதிபதி நடந்த சங்கதிகளை விசாரித்து, 'நீங்கள் சொல்லியபடி நால்வரும் வந்து கேட்டால் வர்த்தகன் உங்களுக்குப் பணமுடிச்சைக் கொடுக்கவேண்டும்' என்று தீர்ப்புச் சொன்னார்.

## கஉ. கல்வி.

மனுடரின் அறிவை விருத்தி செய்தற்கு முக்கிய கருவியாயுள்ளது கல்வி. அக்கல்வி, உயிர்க்கு உறுதிப்பொருள்களையுணர்த்தும் அறநூல் முதலியனவும், அவற்றிற்குக் கருவியாகிய இலக்கணநூல் முதலியனவுமாம்.

கல்வியினாலன்றி, மற்றொன்றினாலும் அறிவு விருத்தியாகமாட்டாது. அதுமாத்திரமா, கல்வியில்லாவிடின் செல்வம், கீர்த்தி, சரீரசுகம், ஆன்மசுகம் முதலியவற்றையும் ஒருவரும் அடையமாட்டார். கல்வியில்லாத சிலர் முற்பிறப்பிற் செய்த நல்வினையினாலே தம்முடைய தந்தைமுதலியோராற் சம்பாதிக்கப்பட்ட செல்வங்களைப் பெற்றாராயினும், அவற்றைத் தருமவழியிற் செலவுசெய்து அவற்றாலாகும் பயனைத் தாம் அடையாது, வீண்செலவு செய்து, சீக்கிரத்தில் இழந்துவிடுவர்.

பங்காளிகள் கள்வர் வலியர் முதலியோராற் கவரப்படாமையாலும், அக்கினி சலம் முதலியவற்றால் அழிவுபடாமையாலும், பிறர்க்குக் கொடுக்குந்தோறும் வளர்ந்துகொண்டே வருதலாலும், செல்வத்தைக் கொடுத்தற்கும் அவற்றைப்

பாதுகாத்தற்கும் நல்வழியில் உபயோகப்படுத்தற்குக் காரண மாயிருத்தலாலும், தன்னை உடையானுக்குச் சென்றசென்ற தேசங்களிலெல்லாம் சிறப்பைச் செய்தலாலும் கல்வியே சிறப் புடைத்து.

இன்னும், கல்வி ஒருவனுக்கு நன்மை தீமைகளை உணர்த் துதலாற் கண்ணையும், இன்பத்தைக் கொடுத்தலால் மனைவியை யும் ஒக்கும். கற்றவர் உருவத்தினால் மனிதரேயாயினும், அறி வினாலே தேவரை ஒப்பர். கல்லாதவர் உருவத்தினால் மனி தரேயாயினும், அறிவினால் விலங்கினை ஒப்பர்.

கல்லாதவர்க்கு அறிவை வளர்த்தலும், திரவியத்தை ஈட்டலும், நல்வினையைச் செய்தலும், புகழைப்பெறுதலும், இம்மை மறுமை இன்பங்களை அடைதலும் எக்காலத்தும் உள வாகாவாம். ஆதலால் எல்லாரும் கல்வியைச் சிறிதும் அவமதி யாது, ஊக்கத்தோடும் இளமையிற்றானே கற்றல் வேண்டும்.

---

## கஈ. செல்வம்.

அறத்திற்கும் இன்பத்துக்கும் காரணமாயுள்ளது செல் வம். அது இரத்தினம் பொன் வெள்ளி நெல் முதலியன. அழியாப்பொருளாகிய கல்வியைக் கற்றற்கும், அக்கல்வித் தேர்ச்சிக்குக் கருவியாகிய புத்தகங்களை வாங்குதற்கும், பசி முதலியவற்றால் வருத்தமுறாது கவலையற்றிருந்து கற்றற் பொருட்டு அன்னவஸ்திர முதலியவற்றைப் பெறுதற்கும் முக்கிய காரணம் செல்வமே.

இன்னும், அச்செல்வம் சுற்றத்தார் பசியை நீக்கும்; பகைவர் செருக்கை அறுக்கும்; நட்பை உண்டாக்கும்; பூமி யைக் காக்கச் செய்யும்; அரசரும் மதிக்கச்செய்யும்; தேவருல கிற் செலுத்தும்; புகழை உண்டாக்கும்; வித்துவான்களும்

பணிந்து நிற்கச் செய்யும்; இன்பத்தைக் கொடுக்கும்; மேலும் நினைத்த காரியமெல்லாம் கைகூடச் செய்யும்.

இவ்வியல்புடைய செல்வத்தைச் சம்பாதித்தற்குரிய தருமநெறிகள் பலவுள. அவை வேளாண்மை, வாணிகம், இராசசேவை, வித்தை கற்பித்தல் முதலாயின. களவு, பொய்ச்சான்றுரைத்தல், பொய்வழக்குப்பேசல், பொய்ப் பத்திரம்பிறப்பித்தல், நம்பிக்கைத் துரோகம் முதலிய பாவநெறிகளாற் செல்வத்தை ஈட்டலாகாது. ஈட்டின், அச்செல்வம் முன்செய்த அறத்தைக்கெடுக்கும்; தீராத வசையைக் கொடுக்கும்; சந்ததியை நாசம் பண்ணும்; இராச தண்டத்தை உண்டு பண்ணும்; நரகத்திற் செலுத்தும். ஆதலினாற் பாவவழியினாலே பொருள் சம்பாதித்தலாகாது.

செல்வமில்லாதவர் வறுமையினாலும், அதனை நீக்குதல் காரணமாகப் பொருளுடையாரை நோக்கிச் செல்லுதலாலும், அவரைக் காணும்வரையும் அவர் வாயிலில் வரவை எதிர் பார்த்து நிற்றலாலும், கண்டவிடத்து மானத்தைவிட்டுப் பல்லைக்காட்டி இரப்புரை சொல்லுதலாலும், அப்பொழுது அவர் மறுத்தலாலும், மறாது கொடுத்தவிடத்தும் இருகரங்களையும் விரித்து நீட்டி வாங்குதலாலும், வாங்கியவிடத்தும் அதனால் உணவிற்கு வேண்டுமவைகளைத் தேடுதலாலும், அவர் அடையுந் துன்பங்கள் இவ்வளவின என்று சொல்லுதல் முடியாது. அவருக்குத் தாயும் மனைவியும் புத்திரரும் சுற்றத்தாரும் மற்றையோரும் பகையாவர். அவர் வாய்ச்சொல்லை ஒருவரும் பொருளாக மதியார். ஆதலால், யாவரும் இடையறா முயற்சியோடு திரைகடலோடியுந் திரவியந் தேடல்வேண்டும்.

---

## கச. கேள்வி.

கேள்வியாவது நூற்பொருளைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்டல். எல்லா நூல்களையுங் கற்றவர்களுக்கு அக்கல்வியினா

லாகிய அறிவை மேன்மேலும் வலியுறுத்தலாலும், கல்லாதவர்களுக்கு நல்ல அறிவை உண்டாக்குதலாலும், கற்றவர் கல்லாதவர்களாகிய எல்லாரும் கற்றறிந்தார் சொல்லும் நூற்பொருளைக் கேட்டல் அறிவின் வளர்ச்சிக்கு ஏதுவாம்.

இருமை இன்பங்கட்கும் ஏதுவாகிய கல்வியும், பொருளும், செல்வங்கள் என்று சொல்லப்படுதல்போல, கேள்வியும் அவ்வின்பங்கட்குக் காரணமாதல்பற்றி, கேள்விச் செல்வம் என்று சொல்லப்படும். இதனாலன்றோ, திருவள்ளுவநாயனாரும் **'செல்வத்துட் செல்வஞ் செவிச் செல்வம்'** என்றருளிச் செய்தார். பொருட் செல்வம்போலச் சம்பாதித்தல் காப்பாற்றல் முதலியவைகளினாலே துன்பங்களைத் தாராது எப்பொழுதும் இன்பத்தையே தருதலின், இஃது அப்பொருட்செல்வத்தினுஞ் சிறந்ததேயாம்.

கற்றறிந்தார் சொல்லும் உறுதிச் சொற்களும், அவற்றின் பொருள்களும், கேட்குந்தோறும் நினைக்குந்தோறும் இன்பத்தையே தந்துகொண்டிருத்தலிற் பசி முதலிய துன்பங்கள் தோன்றப் பெறுமையால், கேள்வி தன்னையுடையாரை அத்துன்பங்களில்லாத தேவரோடொப்பாகச் செய்தலினாலும், வறுமையினாலாவது அறிவின்மையினாலாவது துன்பங்கள் உண்டாகிய விடத்துக் கேள்வியினாலாகிய அறிவு அத்துன்பங்களை நீக்கி ஊன்றுகோல்போல் உதவுதலாலும், மெய்ந்நூற்பொருளை அறிந்தார் சொல்லக் கேளாதார் அறிவின்மையாற் றம்மை வியந்து கூறுதலல்லது பணிந்த சொற்களையுடையராக மாட்டாமையாலும், கற்றறிந்தார் சொல்லும் நூற்பொருள் சிறிதாயிருந்தாலும், அதனை அற்பமென்றிகழாது, சிரத்தையோடு யாவரும் கேட்டல்வேண்டும். அக்கேள்விகள் **'பலதுள்ளி பெருவெள்ளம்'** என்றபடி திரண்டு, பலவித அறிவுகளையும் வளரச்செய்து, மிகுந்த பெருமையைக் கொடுக்கும். கல்வியறிவுமாத்திரமுடையராய் நல்லொழுக்கம் சிறிது

யில்லாதார் அறிவிலாராதலால், அவர் வாய்ச்சொற்கள் கேட்கத்தக்கனவல்ல.

---

## கரு. முயற்சி.

முயற்சியாவது, செய்யவேண்டுங் கருமங்களில் மனமும் சரீரமும் சோம்புதலில்லாமை. எனவே, முயற்சி மன முயற்சியும் சரீரமுயற்சியுமென இரண்டாகப் பிரிக்கப்படும். மனமுயற்சியோடு கூடியபொழுது மாத்திரமே சரீரமுயற்சி பயன்படுதலால், சரீரமுயற்சியினும் மனமுயற்சியே சிறந்தது. மனமுயற்சியினாலே கல்வி ஞானம் கடவுட்டியானம் முதலியவைகளையும், சரீர முயற்சியினாலே பொருள் புகழ் புண்ணிய முதலியவைகளையும் பெறலாம். ஆகவே, நாம் இம்மை மறுமை இன்பங்களை அடைதற்குச் சிறந்த கருவியாயுள்ளன இருவகை முயற்சிகளுமேயாம்.

நாம் எல்லாப் பெருமைகளையும் அடைதற்கேதுவாகிய கல்வியைக் கற்றற்கும், பொருளை ஈட்டுதற்கும், முயற்சியே சிறந்த கருவி. முயற்சியில்லாதவர் பொருளுடையவரேயாயினும் இல்லாதவரோடொப்பர்; முயற்சியுடையவர் பொருளில்லாதவரேயாயினும் உள்ளவரோடொப்பர்; உள்ள பொருளை இழந்தாராயினும் அதனால் வருத்தமடையார். முயற்சியில்லாதவரிடத்தே புகழ்புண்ணியங்களுக்கேதுவாகிய கொடை ஒருபோதும் உண்டாகாது. முயற்சியுடையவரை எவ்வகைப்பட்ட செல்வங்களுந் தாமே சென்றடையும். நீர்ப்பூக்கள் நீருக்குத் தக்கபடி உயர்தல்போல, மனிதர்கள் முயற்சிக்குத் தக்கபடி பெருமையை அடைகிறார்கள்.

முயற்சியுடையவர் அதனால் விளையும் இன்பத்தை நோக்காது, தாம் முயன்ற தொழிலின் முடிபையே விரும்புவர். அதனால், அவர் எடுத்த கருமங்கள் இனிது முடியப்பெற்று,

எவ்வகைப்பட்ட இன்பங்களையும் அடைவர். இன்னும், அவர் தமது உயர்ச்சியையே கருதுவர். ஒருகால் அவ்வுயர்ச்சிக்குக் கேடு வந்ததாயினும், முயற்சியை விடாது தமது பெருமையை நிலைநிறுத்துவர். முயற்சியில்லையானால், கல்வி செல்வ முதலிய வற்றாற் பெருமை அடைபவர் ஒருவருமிலர். முயற்சியில்லாதவர் தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால், மரத்தினுங் கடையாய், எல்லாராலும் இகழப்படுவர்.

'நமக்கு முயற்சிக்குத் தக்க பயனைத் தரும் விதியில்லை' என்று நாம் சும்மா இருந்துவிடில், உலகத்தார் பழிப்பர்; விதி இல்லையாயினும், முயற்சி தனக்கிடமாகிய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு பயனைத்தரும் என்பது நிச்சயம். ஆதலின், அஃது எப்பொழுதும் வீண்போகாமையால், ஒருவரும் அதனைக்கைவிடலாகாது. '**முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்**' என்னும் மேலோர் வாக்கினாலும் அதன்பெருமை இனிது விளங்கும்.

முயற்சிக்கு மறுதலையாயுள்ளது சோம்பல். அது மடி என்று சொல்லப்படும். சோம்பலுடையவனிடத்தில் தரித்திரம் குடிபுகும். அதனால், சோம்பலுடையவன் தன் குடும்பத்தோடு கெடுவன். சோம்பலை, கேடடைதற்குரியார் விரும்பி ஏறும் மரக்கலம் என்பர் அறிவுடையோர்.

---

## கச. பெண்கல்வி.

உயிர்கள் எவ்வகைப்பட்ட சுகங்களையும் தேடி அநுபவித்தற்குக் காரணமாய் முன்னிற்பது அறிவேயாதலாலும், அந்த அறிவு மனிதர்களுக்குக் கல்வியினாலன்றி வேறொன்றினாலும் உண்டாகாமையாலும், அவ்வறிவுக்குக் காரணமாகிய கல்வியை ஆடவர்களேயன்றிப் பெண்களும் கற்கவேண்டியது ஆவசியகமேயாம்.

பெண்கள் தங்களுக்குரிய நாணம் மடம் முதலாகிய குணங்களின் இலக்கணங்களையும், விவாகஞ் செய்யுமுன் தந்தை தாயர் குரு முதலாகிய பெரியோர்களிடத்திலும் விவாகஞ் செய்தபின் கணவனிடத்திலும் நடக்கவேண்டிய கற்பொழுக்கங்களையும், எப்பொழுதும் தெரிந்துகொள்ள வேண்டியவர்கள். இதற்கு அவர்களுக்கு இன்றியமையாதது கல்வி. சிறுபிராயத்திலே தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல பழக்கங்களைப் பழக்குதற்குத் தாய்மாருக்கு உதவியாயிருப்பது கல்வி. தங்கள் நாயகர்கள் ஒருவேளை தீச்செயல்களிற் பிரவேசித்தார்களாயினும், தக்க உபாய நெறிகளால் அவர்களைத் திருத்தி, நன்னெறியிற் செலுத்துதற்குப் பெண்களுக்குத் துணையாயிருப்பது கல்வி. வீட்டிலே வேலையில்லாமலிருக்குங் காலங்களில் வீண்பொழுது போக்காமலும், மற்றவர்களோடு வீண் பேச்சுகள்பேசிச் சண்டையிட்டுக் கொள்ளாமலும், நல்லகதைகளையும் நீதி நூல்களையும் வாசிக்கச்செய்து, பெண்களுக்கு, நல்லறிவையும் நீதியையும் உண்டாக்குவது கல்வி. அன்றியும், வீட்டுக்குரிய வரவு செலவு கணக்குகளை எழுதிக் கணக்குப் பார்த்தற்கும், தங்கள் நாயகர்களுடைய வரவுக்குத் தக்க செலவு செய்தற்கும், சமையல் முறைகளை அறிதற்கும், நாயகர்களை உபசரித்து அவர்களோடு ஒற்றுமையுடையராய் வாழ்தற்கும், அவர்கள் தூரதேசத்திலிருந்து எழுதுங் கடிதங்களை வாசித்தறிதற்கும், பெண்களுக்குத் துணையாயிருப்பது கல்வி.

சிறு பிள்ளைகள் தந்தையர்களினும் பார்க்கத் தாயர்களிடத்திலே அதிக பிரீதி வைத்து நடப்பது இயற்கையாதலால், அச்சிறுவர்களை அவர்கள் மனம்போனபடி விளையாடிக் கெட்டுப்போக விடாமல் நல்ல பழக்கம் பழக்கவும், நாயகர்கள் இறந்தால் அப்பிள்ளைகளுக்குக் கல்விகற்பிக்கவும், அவர்களுக்குரிய பொருள்களை வைத்துப் பாதுகாத்துக்கொடுக்கவும், கடமை பூண்டவர்கள் தாயர்களே. அத்தாயர்கள் கல்வியறிவு இல்லாத

வர்களானால், தங்கள் பிள்ளைகளைப் பாதுகாத்தற்பொருட்டுப் பிறருடைய சகாயத்தை விரும்பி, அதனால் பலவித கஷ்டங்களை அடையவேண்டிவரும். இந்தக் காரணத்தினாலும், பெண்களுக்குக் கல்வி வேண்டும் என்பதே நிச்சயம்.

கல்வியறிவு இல்லாத அநேக மூடப்பெண்கள், நாயகர்கள் இருக்கும்பொழுதே, தங்கள் பிள்ளைகளைக் கல்விகற்கவிடாது, அவர்களுக்கு வீண்வேலைகளைக் கற்பித்துக் கெடுக்கின்றார்கள். நாயகர்கள் இறந்தால், அந்தப் பிள்ளைகள் கதியாதாய்முடியும் என்பதையும் இவர்கள் என்ன காரணத்தினால் அப்பிள்ளைகளைக் கற்கவிடாது கெடுக்கின்றார்கள் என்பதையும் ஆலோசித்தால், பெண்கள் கல்வி கற்பது ஆவசியகம் என்பதை எல்லாரும் ஒத்துக்கொள்வர்.

இன்னும், உலகத்தில் அநேக தருமங்கள் இல்லறத்தினாற்றானே நடைபெறவேண்டியிருத்தலாலும், அத்தருமங்களை நாயகர்கள் நடத்தும்பொழுது அதற்குத்துணையாயிருந்து சிறப்பிக்கவேண்டியவர்கள் பெண்களே ஆதலாலும் அப்பெண்களிடத்துள்ள கல்வி இம்மை மறுமை இன்பங்கள் இரண்டற்கும் காரணமாம். இப்படி எல்லாவிதத்தாலும் கல்வி பெண்களுக்கு ஆபரணம்போலச் சிறந்திருத்தலின், அதனைச் சிறுபிராயத்திற்றானே அவர்களுக்கு கற்பித்தல்வேண்டும். பெண்களுக்குக் கல்வியை மாத்திரமன்றி, தையல்வேலை வீட்டுவேலைகளையும் கற்பிப்பது ஆவசியகம்.

ஒரு மகாராசாவின் ஆளுகைக்குட்பட்ட மனிதர்கள் எவ்வளவு புத்திசாதுரியமுடையவர்களாயிருந்தாலும், அந்த இராசாவின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து அடங்கி நடத்தல்போல, சுய அதிகாரம் என்பது எப்பொழுதும் இல்லாத பெண்பாலர்கள் எவ்வளவு படித்தவர்களாயும் புத்தியுள்ளவர்களாயுமிருந்தாலும், தங்கள் நாயகர்களுக்கும் மற்றை ஆண்பாலர்களுக்கும்

கீழ்ப்படிந்து அடங்கி ஒழுகுங் குணமுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

## கஎ. காலம்.

காலம் என்பது உலகம் நடைபெறுதற்கு முக்கிய காரணமாயுள்ளது. காலத்தை நம்மவர்கள் மிகக்குறைந்த பிரமாணமுள்ள நிமிஷம் முதலாக மேன்மேற் கூடின பிரமாணம் உள்ளவைகளாகப் பகுத்து வரையறை செய்து, அவைகளுக்கு ஒவ்வொரு பெயர் கொடுத்திருக்கிறார்கள். அவைகளின் பெயர்கள் நிமிஷம், காஷ்டை, கலை, நாழிகை, முகூர்த்தம் என்னும் இவை முதலாயினவாம். ஆங்கிலேயர்கள், இந்தக் காலத்தை செக்கன், மினிட்டு, மணி என்பனவாக வெவ்வேறுவகைப்பட அளவுசெய்து, பெயர்கொடுத்து வழங்குகின்றார்கள். நமக்கு இரண்டரை நாழிகை நேரம் ஆங்கிலேயர்களுக்கு ஒருமணி எனப்படும். இப்படிக் கணக்கிடும்பொழுது, ஆங்கிலேயர்களுடைய இருபத்து நான்கு மணிநேரம் நமக்கு அறுபது நாழிகை ஆகிறது. இந்த அறுபது நாழிகையில், சூரியோதயம் முதலாக முன் முப்பது நாழிகையும் பகல் என்றும், சூரியாஸ்தமயனம் முதலாகப் பின் முப்பது நாழிகையும் இரவு என்றும், இந்த இரண்டும் சேர்ந்து ஒருநாள் என்றும், வழங்கப்படும். நாள், வாரம், மாசம், வருஷம் என்னும் இவைகளைப் பெரும்பான்மையும் இந்தியர்களைப்போலவே அங்கிலேயரும் கொள்வர்.

இப்படிக் காலத்தைப் பகுத்துக்கொண்டது, நாம் செய்யுந் தொழில்களெல்லாம் அது அது முற்றுப்பெறவேண்டிய அளவில் முற்றுப்பெறுதற் பொருட்டாம். காலத்தைப்பற்றிச் சிந்தியாவிட்டால், ஒருவரும் ஒருதொழின் முயற்சியும் செய்யாது கெடுவர். காலம் அருவமாயிருப்பினும், அது நமக்கு மிகவும் உபயோகியாயிருக்கிறது. அதனுடைய கழிவையும்,

கழிந்த அது நமக்குப் பின்னே கிடைக்கப்பெருமையையும், நாம் எப்பொழுதும் நினைத்தல்வேண்டும். எப்படியெனில், ஒருவித்தியாசாலையிற் காலை எட்டுமணிக்கு வந்து கல்வி கற்க வேண்டிய ஒரு மாணாக்கன், ஒன்பது மணிக்கு வருவானேயானால் முதல்மணியிற் கற்பித்த பாடங்களை இழந்து அந்த இழந்த காலத்துக்காகக் கவலைப்படுகின்றான்; இழந்த ஒரு மணிநேரமும் பின் அவனுக்குக் கிடைப்பதேயில்லை.

இப்படிக் காலத்தைக் குறித்து நாம் நினைக்கிறதினாலே எங்களுடைய மனமொழிமெய்கள் தத்தம் தொழில்களைச் சோம்பலின்றிச் செய்து நல்வழிப்பட, அதனால் இம்மை மறுமை இன்பங்களைத் தப்பாது அடையலாம். அளவிறந்த பரமாணுக்கள் ஒருங்கு திரண்டு மலைகளாதல்போல, அநேக நிமிஷங்கள் ஒருங்கு சேர்ந்து வருஷங்களாகின்றன. அவைகள் கழியக் கழிய நம்முடைய ஆயுசும் கழிகின்றது.

காலத்தை வரையறைசெய்து கொள்வதற்காகக் கடவுளாற் கொடுக்கப்பட்ட கருவிகள் சூரியன் முதலாகிய கிரகங்கள். அவைகளை ஆதாரமாகக்கொண்டு மனிதர் காலவரையறை செய்துகொள்ளுங் கருவிகள் கடிகாரங்கள். கடிகாரம் வைத்திருப்பது தொழின் முயற்சிக்கும் சுறுசுறுப்புக்கும் ஏதுவாயிருக்கும்.

---

## க௭. உண்மையின்பயன்.

ஓர் ஊரிலே ஒருவன் பல பாவங்களையும் அஞ்சாது செய்துகொண்டுவந்தான். அவனுடைய குரு 'இப்படிப் பாவங்களைச் செய்து ஏன் கெட்டுப்போகிறாய்; இனி அப்படிச் செய்யாதே' என்று பல புத்திகளை அடிக்கடி அவனுக்குச் சொல்லிக்கொண்டு வந்தார். அவன், 'எல்லாப்பாவங்களையும் என்னால் விட முடியாது; உம்முடைய சொல்லுக்காக நீர்

விடச் சொல்லுகிற பாவம் ஒன்றை மாத்திரம் விட்டுவிடுகிறேன்' என்றான். குரு 'பொய்சொல்லலாகிய பாவம் ஒன்றையாயினும் ஒழித்து நட' என்று கட்டளைசெய்தார்.

அதற்கு உடன்பட்ட சீடன், ஒருநாள் இரவு அந்த ஊரில் அரசனுடைய அரண்மனையிலே திருடும்படிபோய், சமயம் பார்த்துப் பதுங்கி நின்றான். அப்பொழுது, மாறுவேடம் பூண்டு நகரசோதனைக்காகப் புறப்பட்ட அரசன் அவனைக் கண்டு, இவன் திருடன் என்றறிந்து, 'நீ எங்கே வந்தாய் உண்மைசொல், என்றுகேட்டான். அவன், இராசாவுடைய அரண்மனையிலே திருடும்படி வந்தேன் என்றான். அரசன் ஆச்சரியம் அடைந்து அவன் செய்கை முழுவதையும் பார்க்க நினைந்து, 'நானும் இங்கே திருடும்படி வந்தேன் எனக்கும் பாதிகொடு' என்றான்.

திருடன் அதற்கு உடன்பட்டு, அரசனைக் காவல் வைத்து, அரண்மனைச் சுவரிலே கன்னம்வைத்து, உட்புகுந்து ஒரு பெட்டியிலிருந்த விலையேறப் பெற்ற மூன்று இரத்தினங்களுள் இரண்டை எடுத்துக்கொண்டு, மற்றை ஓர் இரத்தினத்தைப் பாகம்பண்ண முடியாமையினாலே பெட்டியில்வைத்து, வெளியே புறப்பட்டு வந்து, அரசனுக்கு ஒன்றைக்கொடுத்து, மற்றொன்றைத் தான் கொண்டுபோயினான். மாறுவேடம் பூண்டு வந்த அரசன் அவன் பெயர் ஊர்களைக் கேட்டு அறிந்து கொண்டான்.

பின்பு, அரசன் அரண்மனையினுள்ளே போய்ப் பெட்டியைப் பார்த்தபொழுது, ஓர் இரத்தினம் இருக்கக்கண்டு சந்தோஷித்து, மற்றைநாட்காலையில் தன் மந்திரியை அழைப்பித்து, 'நம்முடைய அரண்மனையினுள்ளே கள்வர் வந்து புகுந்ததாகத் தெரிகிறது. பெட்டியைத் திறந்து பார்' என்றான். மந்திரி திறந்துபார்த்துப், பெட்டியிலிருந்த ஓர் இரத்தினத்தையும் தான் எடுத்து மறைத்து வைத்துக்கொண்டு, 'விலை

யேறப்பெற்ற மூன்று இரத்தினங்களையும் காணவில்லை' என்ருன். அரசன் அவனை உத்தியோகத்தினின்றும் நீக்கி, சத்தியத்திற் சிறந்த அந்தத் திருடனை அழைப்பித்து உபசரித்து, அவனைத் தனக்கு மந்திரியாக்கிக்கொண்டான்.

## கக. பரிகாசம்.

பிறருடைய நடை உடை தோற்றம் முதலியவைகளிலே காணப்படுங் குறைகளை எடுத்துப் பேசி அவர்களைப் பழித்தலாகாது. குருடர், முடவர், செவிடர், உறுப்புக் குறைந்தவர், தரித்திரர், தீரா வியாதியாளர் முதலாயினோரைக் கண்டால், அவர்களுடைய துரதிஷ்டத்தைக் குறித்து இரங்கி அவர்களுக்குத் தங்கள் தங்களால் ஆன சகாயஞ் செய்வதே அன்றி, அவர்களை ஒருபோதும் பழித்தலாகாது. ஆன்மாக்கள் செய்யும் நல்வினை தீவினைகளின் பயனாக முறையே சுக துக்கங்கள் வருதல் நிச்சயமென்பதையும், தன்னிலும் அழகு செல்வம் முதலியவைகளினுலே பெரியராயிருப்பாரையும் ஒருவன் நினைப்பானுயின், அவனுக்குத் தன்னோடொத்தாரையாவது தன்னிற்ருழ்ந்தாரையாவது பரிகாசம்பண்ணுங்குணம் உண்டாகமாட்டாது.

பிறரைப் பரிகாசம் பண்ணித்திரிபவன், தன்காலத்தையும் கருத்தையும் வாக்கையும் வீணுகப் போக்கிப், பலராலும் பகைக்கப்பட்டுப் பொல்லாதவனுகின்ருன். ஒருவனுக்கு மற்றைப் பகைகளெல்லாம் தன் பிரயோசனத்தை அல்லது பிறர் பிரயோசனத்தைக் குறித்த தொழின்முயற்சி முதலியவைகளினுலே வரும். பிறரைப் பரிகாசம் பண்ணுபவனுக்கோ, அவை இரண்டுமின்றி, வீணுக அப்பகைதானே வந்தடையும்.

பரிகாச வார்த்தையை வாக்கினுல் வருங் குற்றங்களுள் ஒன்ருக வைத்து அறிவுடையோர் இழித்துச் சொல்லுவர்.

மிக இழிவுள்ள பொய்யும் ஒருவேளை மனிதர்களுக்குச் சில நன்மைகளைப் பயக்கும். பரிகாசமானது முன்னுள்ள நன்மைகளையுங் கெடுத்துத் தீமைகளையே பயந்துவிடும். சில பிள்ளைகள், பொழுது போக்கும் விளையாட்டாக ஒருவரையொருவர் பரிகாசம் பண்ணி வீண்காலம் போக்குகின்றார்கள். அவர்கள், அதனால் வரும் பயன் என்ன என்பதைச் சிறிதே உற்று நோக்குவார்களாயின், அதனால் விளைவது பகையும் பழியுமே என்று நன்கு தெரிந்துகொள்வார்கள்.

தமக்கென வேறொரு தொழின்முயற்சியும் இல்லாத சோம்பேறிகளே பரிகாசத்தைத் தங்கள் சிநேகம்போலக் கொண்டாடுவர். ஒரு பயனுமின்றிப் பிறர்க்குக் குற்றஞ் சொல்லி நகைப்பவர்களைக் கண்டால், கொலைசெய்வோரைக் கண்டு அஞ்சி நீங்குதலைப்போல அஞ்சி அகலப்போதலே அறிவுடைமைக்கு அழகு.

> பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
> நகையொன்றே நன்பயனுக் கொள்வான்—பயமின்று [போற்
> மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்வான்
> கைவிதிர்த் தஞ்சப் படும்.

## உ௦. இந்தியா.

இந்தியா ஆசியாக்கண்டத்தின் தென்பாகத்திலுள்ள ஒரு பெரியதேசம். அதன் நீளமும் அகலமும் தனித்தனி ஆயிரத்துத் தொளாயிரம்மைல். அதன் நிலப் பரப்பு பதினேழேமுக்காலிலக்ஷம் சதுரமைல். அது ஆளுகைக்குத் தக்கபடி பலபெரும்பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஆங்கிலேய சக்கிரவர்த்தியவர்களின் பிரதிநிதியாகிய கவர்னர்ஜெனரலினாலும், அவருடைய அதிகாரத்துட்பட்ட கவர்னர்கள் முதலியோர்களாலும் ஆளப்படுகிறது. கவர்னர்ஜெனரல் இருக்குந்தானம்

இந்தியா முழுவதுக்குந் தலைநகரமாகிய டெல்லி. இந்தியாவிலே ஆங்கிலேய அரசிற்கமைந்து அரசாளும் சுதேச அரசர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களால் ஆளப்படும் இடங்கள் பரோடா, காஸ்மீரம், மைசூர், திருவாங்கூர் முதலிய இராச்சியங்கள்.

தென்னிந்தியாவிலே, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய சில பாஷைகளும், அதற்கு வடக்கேயுள்ள மற்றைப் பாகங்களில், இந்தி, இந்துஸ்தான், வங்காளி, கூர்ச்சரம், மகராஷ்டிரம் முதலாகிய பல பாஷைகளும் பேசப்படுகின்றன. சமஸ்கிருதம் இந்தியாவில் எங்கும் படிக்கப்பட்டு வந்தாலும், அதனைப் பேசுவோர் அரியர். இங்கிலீஷ் பாஷை ஏறக்குறைய இந்தியாமுழுதும் வழங்குகின்றது.

இந்தியாவில் ஆதியில் உள்ள சனங்களுக்கு ஆரியர் என்று பெயர். அவர்கள், முதல் இந்தியாவின் வடபாகத்திலிருந்து, பின்பு மற்றைப் பாகங்களிலும் குடியேறினார்கள். ஆரியர் என்பதற்குப் பூச்சியர் என்பது பொருள். பிற்காலத்திலே பலதேசங்களிலுமிருந்து பலரும் வந்து குடியேறியிருக்கின்றார்கள் 1921 - ம் வருஷத்திற் கவர்ண்மெண்டார் செய்து கொண்ட கணிதப்படி இந்தியாவின் சனத்தொகை 31,90,75,132.

பல சிவாலயங்களையும், விஷ்ணுவாலயங்களையும், கங்கை முதலாகிய புண்ணிய தீர்த்தங்களையும் உடைமையாலும், வேதாகமாதி சம்ஸ்த சாஸ்திர பண்டிதர்கள் வசிக்கப் பெறுதலினாலும், இந்தியாதேசம் புண்ணியதேசம் என்று புகழ்ந்து பாராட்டப் படுகின்றது. இந்தியாவுக்குப் பரதகண்டம் என்றும் பெயர்.

இதில் தென்னிந்தியா, வடகிழக்குக் கோடி முதல் தென்மேற்குக் கோடிவரை நீளம் தொளாயிரத்தைம்பதுமைலும், அகலம் அதிகமான பாகத்தில் கிழக்குமேற்கு நானூற்றைம்

பது மைலும், உள்ளது. தென்னிந்தியாவின் பிரதான நகரம் சென்னபட்டணம். இத்தென்னிந்தியாவின் தென்பாகத்தில், முற்காலத்திலே சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று அரசர்கள் வழிவழியாக நெடுங்காலம் இருந்து அரசாண்டார்கள். அவர்களால் ஆளப்பட்ட தென்னிந்தியாவின் பாகங்கள் சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம் என்று இன்றும் அவர்கள் பெயரால் வழங்குகின்றன. இவர்களுடைய குலங்கள் முறையே அக்கினி சூரியன் சந்திரன் என்னும் முச்சுடர்களையும் முதலாகவுடைமையால், இவர்கள் அக்கினிவம்சத்தரசர், சூரியவம்சத்தரசர், சந்திரவம்சத்தரசர் என முறையே சொல்லப்படுவர். இந்த மூவகை அரசர்களும், தென்னிந்தியாவிலுள்ள ஆலயத்திருப்பணிகளை மிக நன்குபெறச் செய்வித்து, அவைகளிற் பூசை உற்சவங்களையும் ஒழுங்காக நடத்துவித்து வந்தார்கள். அவ்வாலயங்கள் இத்தேசத்துக்கு மிகுந்த சிறப்பைத் தரும் அணிகலங்களாகியும், வழிபடுவோர்க்குப் பத்திவைராக்கிய ஞானங்களைப் பயக்குந் தானங்களாகியும் இருக்கின்றன. பாண்டியராசர்களாலே தமிழ் வளர்க்கப்பட்டது. இம்மூவகை அரசர்களுடைய சரித்திரங்களையும், இதிகாசபுராணங்களினாலும், சங்கத்து வித்துவான்கள் செய்த நூல்களினாலும் அறியலாம்.

---

## உக. நம்மை ஆளும் அரசர்.

நம்மை ஆளுபவர் ஐரோப்பாக்கண்டத்தின் மேற்குச் சமுத்திரத்திலுள்ள இங்கிலாந்திலிருக்கும் இங்கிலீஷ் அரசர்.

அவர் கல்வி, பலம், நாகரிகம், கருணை, பெருமை, நல்லொழுக்கம், அனுபவம் முதலிய எல்லாவற்றாலும் சிறந்தவர். கல்வி, மதம், நாகரிகம், ஒழுக்கம், முதலிய பலவற்றாலும் வேறுபட்ட பலசாதியாரையும் பக்ஷபாதம் ஒரு சிறிதும்

இன்றி ஆளுந்திறமையில் அவருக்குச் சமானமானவர் ஒருவரு மில்லை. அவர் நமக்குச் செய்துவரும் உதவிகள் அளவில்லா தன: ஊர்கள்தோறும் நம்மவர்கள் தாபித்து நடத்திவரும் வித்தியாசாலைகளுக்குத் தாமும் வருஷந்தோறும் பொருளு தவிசெய்து அவைகளைப் பாதுகாத்துவருகின்றார். தமது சொந்தச்செலவிலும் வித்தியாசாலைகளைவைத்து நடத்திவரு கின்றார்; உயர்தரக் கல்விக்கு வேண்டுங் கலாசாலைகளை, பெரிய பட்டணங்களிலே தாபித்து நடத்தி, அவைகளிலே கற்றுத் தேறினவர்களுக்கு அவரவர் கல்விக்குத்தக்கபடி பட்டங்கள் கொடுத்து, உற்சாகப்படுத்துகின்றார். இவைகளினாலே நந்தே சங்களிலே கல்வி வரவர விருத்தியாகிக்கொண்டு வருகின்றது.

இன்னும், வேளாண்மை, வியாபாரம், கைத்தொழில் என்னும் இவைகள் ஆங்கிலேய அரசினராலே இத்தேசம் எங் கும் விருத்தியாகி வருகின்றன. யாவரும் மிகக்குறைந்த செல வில் விரைவாகக் கடிதப் போக்குவரவு செய்துகொள்ளுதற் கேற்ற வசதிகள் ஆங்கிலேய அரசர்காலத்திலே நமக்குக் கிடைத்திருக்கின்றன. மிக்க தூரதேசத்துச் சமாசாரங்களை அவ்வப்பொழுதே அறிவிக்கத்தக்க மின்சாரத்தந்தியும் மிக விரைவிற் போக்குவரவு செய்யத்தக்க புகைவண்டியும் புகைக் கப்பலும் நமக்குக் கிடைத்ததும், ஆங்கிலேய அரசர் காலத்திலே.

இன்னும், நம்மரசினர் நீர்ப்பாய்ச்சலுக்கேற்ற கால்வாய் முதலிய சலாதாரங்களையும், போக்குவரவுக்கேற்ற வீதிகளை யும் அதிகமாக ஏற்படுத்திக்கொண்டுவருகின்றார்; கொலை களவு முதலிய தீச்செயல்களைச் செய்வோர்களைத் தண்டித்தற்கும், குடிகள் தம்முள்ளே மாறுபட்டுச்செய்யும் வழக்குக்களைத் தீர்த்தற்கும், நியாயஸ்தலங்களை ஏற்படுத்தி வைத்திருக்கின் றார்; இராசாங்கமுறைகளையும் அரசர் குடிகளுக்குச் செய்ய வேண்டும் சாதகங்களையும் யோசித்தற்கு, ஆலோசனைச்சபை

களை நியமித்திருக்கின்றார்; ஊர்கடோறும் வைத்தியசாலைகளைத் தாபித்துத் தருமவைத்தியம் செய்வித்துவருகின்றார்; மழை வளங்குறைந்து பஞ்சம்வந்த காலங்களிலே, ஏழைகள் பசியினால் வருந்தாதவண்ணம், அவர்களுக்கு வேண்டிய பல சாதகங்களைப் புரிகின்றார்; தங்கீழ் வாழுங் குடிகள் பகைவர்களில் வருத்தமடையாதபடி, வேண்டிய காவல்களைச் செய்துவைத்திருக்கின்றார்; கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த சுதேசத்துக் கனவான்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுத்து, அவர்களை ஆதரித்தும் கௌரவப்படுத்தியும் வருகின்றார். இன்னும் இவ்வாறே ஆங்கில அரசர் நமக்குச் செய்துவரும் நன்மைகளுக்கு ஓரளவில்லை.

இவ்வியல்புடைய ஆங்கில அரசருடைய நீதிகோடாத நல்ல ஆளுகையினுட்பட்டிருக்கும் நாம், அவ்வரசருடைய அரசு முறைகளையும் கருத்துக்களையும் நீதியையும் அறிந்து, இராசபத்தியும் மனத்திருப்தியும், பணிவும் உடையவராய் நடந்து, சகல சுகங்களையும் பெற்று வாழ்தல் முறைமையாம்.

இப்போது நம்மையாளுபவர் மாட்சிமை பொருந்திய **ஜ்யார்ஜ் சக்கிரவர்த்தி**. இவர் டெல்லிமாநகரில் ௧௯௧௧-ம் வருஷத்தில் நடாத்திய முடிசூட்டு வைபவத்தைக் குதூகலத்தோடு எங்கும் கொண்டாடிய நம்மவர்கள், "**அனைவோர்க்குந் தெய்வம்—இலைமுகப் பைம்பூணிறை**" "**முறைசெய்துகாப்பாற்று மன்னவன் மக்கட்கு—இறையென்று வைக்கப்படும்**" என்னும் பெரியோர்களுடைய உறுதிவாக்குக்களை அறிந்தவர்களே.

---

## ௨௨. மிருகம்.

**நா**லு கால்களையுடையவைகளும் கருப்பையிலே பிறப்பவைகளுமாகிய விலங்குச்சாதிகள் மிருகங்கள் எனப்படும்.

இவைகள் நாட்டுமிருகம் காட்டுமிருகம் என இரண்டு வகைப் படும். இவைகளுட் சில தாவர உணவினாலும், சில மாமிச உணவினாலும் சீவிக்கும். மாமிசபக்ஷணிகளாகிய மிருகங்களுட் பல கொடுந்தன்மையுள்ளவைகள். அவைகளுக்குப் பற்கள், தாவர உணவுகளைத் தின்னும் மிருகங்களுக்குப் போலாகாது, மாமிச உணவுகளைத் தின்னுதற்குத் தகுந்தவைகளாயிருக்கும். நாட்டு மிருகங்கள் மனிதர்களுக்கு அடங்கி, அவர்களுடன் பழகி, அவர்கள் வசப்பட்டு நடக்கின்றன. காட்டு மிருகங்கள் அடங்காமல், தங்கள் இஷ்டப்படி காடுகளிற் சஞ்சரிக்கின் றன. காட்டு மிருகங்களுட் சில, மனிதர்களுக்குத் தீங்கைச் செய்யும்; சில மனிதர்களால் அடக்கப்பட்டு, அவர்கள் கற் பித்தபடி அமைந்து நடக்கும்.

ஆடு, மாடு, எருமை, நாய், பூனை முதலியவைகள் நாட்டு மிருகங்கள். சிங்கம், புலி, கரடி, யானை, ஒட்டகம் முதலிய வைகள் காட்டு மிருகங்கள். அணில் முயல் முதலிய சில வில ங்குகள் நாட்டிலும் காட்டிலும் சஞ்சரிக்கும். குதிரைகள் பெரும்பாலும் காடுகளிலே பிறந்து வளர்ந்தாலும், அவைகளை மனிதர்கள் தங்கள் உபயோகத்தின்பொருட்டுக் கொண்டுவந்து வளர்த்தலால், நாட்டுமிருகமாக எண்ணப்படும்.

இன்னும், மிருகங்கள் தின்ற உணவுகளை மீட்டும் வாயில் வருவித்துத் தின்பவைகளும், பிளவுபட்ட குளம்புள்ளவை களும், பிளப்பில்லாத குளம்புள்ளவைகளும், கொம்புள்ளவை களும், கொம்பில்லாதவைகளும், விரலுள்ள கால்களையுடைய வைகளும், ஒரு சாதி முழுதும் ஒரே நிறம் உடையவைகளும், ஒரு சாதியிற் பலநிறம் உடையவைகளும் எனப் பல பகுப் புள்ளவைகளாயிருக்கின்றன.

## ௨௩. புறங்கூறல்.

புறங்கூறலாவது, காணாதவிடத்திலே பிறரை இகழ்ந்து பேசுதல். பிறருடைய கல்வி செல்வ முதலியவைகளைக் காணும்பொழுது உண்டாகும் பொறாமையே புறங்கூறுதலுக்கு முக்கிய காரணம். ஆதலினால், புறங்கூறுதலாகிய மொழிக் குற்றத்தை ஒழிக்கவேண்டுமாயின், அதற்குக் காரணமாயுள்ள பொறாமையாகிய மனக்குற்றத்தை அகற்றவேண்டும். புறங்கூறுவோர் ஒருதொழிலுமில்லாத வீணர் என்றும், பிறர் ஆக்கம் பொறாத மனத்தையுடைய புல்லியர் என்றும், அறிஞரால் இகழப்படுவர். அவர் தாம் எல்லாரோடும் பகையாதலேயன்றித், தம்மை அடுத்த பிறரையும் எல்லாரோடும் பகையாக்குவர். அவர் பிறருடைய குற்றங்களை ஆராய்ந்து சொல்லுதலையே குணமாகவுடையவர். ஆதலால் சுற்றத்தார் நண்பினர் அயலார் ஆகிய எல்லாரும் அவரை வெறுப்பர். அதனால், அவர் இம்மை மறுமை இன்பங்களை இழந்தவரே யாவர்.

நாம் ஒருவனுடைய சிறுபழி ஒன்றை அவனைக் காணாதவிடத்தே அஞ்சி நின்று சொல்வோமாயின், அவன் நம்முடைய பெரும் பழிகள் பலவற்றை நமக்கெதிரில் அஞ்சாது நின்று நாம் மிக வருந்தும்படி சொல்லுவான். ஆதலால், உறவினர் நண்பினர் முதலாயினோரிடத்தே குற்றங் காணப்படுமாயின், அவரைத் தனித்தவிடத்திலே கண்டு புத்திசொல்லித் திருத்துதலேயன்றிக், காணாதவிடத்திலே இகழ்ந்து பேசலாகாது. **'புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்—அறங்கூறு மாக்கந் தரும்'** என்றார். திருவள்ளுவநாயனார்.

காணாத இடத்திலே பிறரை இகழ்ந்து பேசியும், கண்ட இடத்திலே அவருக்கு இனியவர்போல முகமலர்ச்சி காட்டி இனிய வார்த்தை பேசியும், உயிர் வாழ்தலிலும் இறந்துவிடுவது நல்லது. புறங்கூறுதற்காகப் பிறருடைய குற்றங்களை

வது புத்தகங்களைப் படிக்கக் கொடுத்தால், அவற்றை எழுதி வைத்திருந்து, மீள வாங்கிவைத்துக்கொள்ளல்வேண்டும். புத்தகங்களைப் பாதுகாத்துத் தருங் குணமில்லாதவர்களுக்கு அவைகளைக் கொடுக்கலாகாது.

புத்தகங்கள் ஏட்டுப்புத்தகம், கையாலெழுதப்பட்ட காகிதப்புத்தகம், அச்சிட்ட காகிதப்புத்தகம் என மூன்று வகையாக உள்ளன. தற்காலத்தில் அச்சுப் புத்தகங்களே மிகுதி. ஏட்டுப் பிரதிகள் வரவரக் குறைந்துவிட்டன. ஏடுகளைப் பார்த்து எழுதின காகிதப் புத்தகங்கள் மிகச் சொற்பம். முற்காலத்தில் ஐம்பது ரூபா செலவழித்து மெய்யெழுத்து உயிர்மெய்யெழுத்துக்களின் பேதந் தெரியாமல் எழுதுவித்து வாங்கவேண்டிய ஒருநூலைத் தற்காலத்தில் ஐந்து ரூபா விலையில் நல்ல அச்சுப் புத்தகமாக வாங்கலாம்.

கல்வியில் விருப்பம் உடையவர்களாகிய வறியபிள்ளைகளுக்குப் புத்தகம் வாங்கிக் கொடுத்தல் பெரும் புண்ணியம். அதிலும் ஞானசாஸ்திரங்களை விரும்பிக் கற்போர்க்கு அவைகளைச் சம்பாதித்துக் கொடுத்தல் ஞானதானம் எனப்படும் உத்தமோத்தம புண்ணியமாம். ஆதலால், நமது தேசத்து அரசர்களும், மடாதிபதிகளும், பிரபுக்களும், கருவி நூல்களையும் ஞான நூல்களையும் சம்பாதித்து வைத்து, ஊர்கடோறும் புத்தகசாலைகளைத் தருமத்தின்பொருட்டுத் தாபித்து, கல்வியில் விருப்பமுடைய யாவரும் எளிதில் வாசித்து ஈடேறும்படி அவைகளை நடாத்திவருதல் உயர்வொப்பில்லாத பெரும்புண்ணியமாம்.

## ௨௬. வேளாண்மை.

மனிதர்கள் பலவகை இன்பங்களையும் பெற்று அநுபவித்தற்கு ஏதுவாகிய பொருளைச் சம்பாதித்தற்குரிய நெறிகள் அநேகம் இருக்கின்றன. அவை வேளாண்மை, வியாபா

ரம், இராசசேவை, சிற்பம் முதலியவைகள். பிறதொழில்களி னாலே சம்பாதிக்கும் பொருளைக்கொண்டு முதலில் நாம் தேடிக்கொள்வன நெல் முதலாகிய உணவுப் பொருள்களே ஆதலாலும், அவைகள் வேளாண்மையினாலன்றி வேறொன்றி னாலும் வருதல் கூடாமையினாலும், வேளாண்மை செய்வோர் தாம் பிறரிடத்துச் சென்று இரவாதும் தம்மிடத்து வந்து இரந்தவர்களுக்கு இல்லை என்னாதுங் கொடுக்கும் பெருந் தன்மையினாலும், பொய் முதலிய பாவக்கலப்பில்லாமையினா லும், உயிர்ப்பாதுகாப்புக்கு இன்றியமையாத வேளாண்மை மற்றை எத்தொழில்களினுஞ் சிறந்தது.

இப்படியிருக்க; இக்காலத்துப் பாலியர்களிற் சிலர், உத்தி யோகத்தை நினைத்துச் சிறிது கல்வியைமாத்திரம் கற்று, அவ் வுத்தியோகங்கிடையாதபொழுது, தம்முன்னோர்கள் செய்து வந்த பயிர்த்தொழிலைச்செய்து வயிறுவளர்க்கக் கூசிச் சீவ னத்துக்கு முட்டுப்பட்டு, வீணர்களாய் அலைந்து திரிகின்றார் கள். பயிர்த் தொழிலுக்கும் கல்வி இன்றியமையாதது என்ப தையும், தாம் இளமையிற் படித்த **'தொழுதூண்சுவையி னுழுதூ ணினிது'** என்னும் மேலோர் வாக்கையும், நினையாமை அவர்களுடைய பேதைமையேயன்றி வேறல்ல. கூலியாட் களை வைத்துப் பயிர் செய்விக்கும் செல்வர்களும், மண்வெட்டி கொண்டு கொத்துதல் முதலிய தொழில்களைத் திறமைக்குத் தக்கபடி செய்து வருவது, சரீர சௌக்கியத்துக்கு ஏதுவா யிருக்கும். இதனாலேதான் நமது அரசினர் வித்தியாசாலை களில் பயிர்த்தொழிலையும் கற்பித்தல்வேண்டும் என்று உத்த ரவு செய்திருக்கிறார்கள்.

பயிரிடுவோர்கள், அவைகள் உண்டாதற்குரிய நிலங்களை யும், காலங்களையும், அவைகளுக்கு ஏற்ற எருச்செய்கைகளை யும், பயிரிடும் விதங்களையும் கிருஷிசாஸ்திரத்தினாலும் அனு பவத்தினாலும் முன்பு தெரிந்துகொள்ளல் வேண்டும். இவை

ஆராய்வோர், புறங்கூறலாகிய தங்கள் குற்றத்தைச் சிந்திப்பாராயின், புறங்கூறிப் பழிபாவங்களை அடையமாட்டார்.

## ௨௪. வித்தியாசாலை.

வித்தியாசாலையாவது, மாணாக்கர் பலர் கூடி உபாத்தியாயர்களிடத்திலே கல்வி கற்றற்குரிய இடமாம். அது பெரும்பான்மையும் கற்பிக்கப்படும் பாஷை நூல் மதம் என்னும் இவைகளினாலே வேறு வேறு பெயர்பெறும். ஆயினும் வித்தியாப்பியாசஞ் செய்தற்குத் தானமாதலால், அவைகளெல்லாம் வித்தியாசாலை என்று கூறத் தக்கனவேயாம். வித்தியாசாலை, கல்விபயில்களம், கல்லூரி, பாடசாலை என்பன ஒருபொருட் சொற்கள்.

மனிதர்களாலே தேடற்பாலனவாகிய கல்விப்பொருள் செல்வப்பொருள் என்னும் இரண்டனுள், செல்வப்பொருளைச் சம்பாதித்தற்கும், காப்பாற்றுதற்கும், அதனால் அடைய வேண்டிய சுகங்களை உள்ளபடி அறிந்து அனுபவித்தற்கும், கடவுளையும் அவரை வழிபடும் நெறியையும் அறிந்து வழிபட்டு முத்தியின்பம் பெறுதற்கும், காரணமாய்ச் சிறந்து முன்னிற்பது கல்வியே ஆதலால், அதனைப் பயிலுதற்குத் தானமாகிய வித்தியாசாலைகளைத் தாபித்தலும், அவைகளுக்கு உதவிசெய்தலும், முதற்பொருள் வைத்து அவைகளை ஒழுங்குபெற நடாத்திவருதலும், பெரும்புண்ணியங்களாம்.

உண்டபொழுது மாத்திரம் பசியை ஒழித்துச் சிறிது இன்பத்தைக் கொடுத்துப் பின்பு பசியையும் அதனாலே துன்பத்தையும் கொடுக்கும் அன்னம்போலாகாது, வித்தை, படிக்குந்தோறும் பின் சிந்திக்குந்தோறும் எப்போதும் அறியாமையைக் கெடுத்துப் பெரிய இன்பத்தைத் தருகின்றது. இச்சிறப்புடைமையாலன்றோ, நம்மை ஆளும் அரசினர் பெருந்தொகைப்பொருளை இவ்வித்தியாதருமத்தின்பொருட்டு வரு

ஷந்தோறும் நமக்கு உபகரித்துக், கல்வியை விருத்திசெய்து கொண்டு வருகின்றார்கள்.

எச்சமயத்தார்க்கும் ஆலயத்திற் சென்று விதிப்படி கடவுளைச் சேவித்து வருதல் தெய்வபத்தி தழைத்தோங்குவதற்குக் கருவியாயிருத்தல்போல, வித்தையை விரும்பிக்கற்கும் மாணாக்கர்களுக்கு ஒழுங்காக வித்தியாசாலைக்குப்போய் உபாத்தியாயருடைய சொல்லுக்கு அடங்கிக் கற்றுவருதல் கல்வி விருத்தியாதற்கு ஏதுவாம். தெய்வபத்தி வளர்தற்கு ஏதுவாகிய ஆலயமில்லாத ஊர்கள் ஊர்களாகாதவாறுபோலக், கல்வி வளர்தற்கு ஏதுவாகிய வித்தியாசாலைகளில்லாத ஊர்கள் ஊர்களாகாவாம். ஆதலினாலே யாவரும் ஊர்கடோறும் வித்தியாசாலைகளைத் தாபித்து நடத்தி வருதல் பெரும்புண்ணியம். வித்தியாசாலைகளிலே கருவிநூல் சமயநூல் முதலியவைகளையேயன்றிக் கைத்தொழில்களையும் கற்பிப்பது விசேடம்.

---

## உரு. புத்தகம்.

கல்வியை விரும்பிக் கற்கும் மாணாக்கர்களும், கல்வியிலே தேர்ச்சியடைந்த வித்துவான்களும், இனிக்கற்க முயல்பவர்களுமாகிய எல்லாருக்கும் புத்தகங்கள் இன்றியமையாதனவாம். புத்தகங்களின்றிக் கற்கப் புகுவோர் கோலின்றி நடக்கக் கருதிய குருடர்போல்வர். யாதாயினும் ஒரு தொழிலைச் செய்பவனுக்கு அதனைச் செய்தற்குரிய ஆயுதம் இன்றியமையாததுபோல, கல்விகற்கும் மாணாக்கர்களுக்கு அதனைக் கற்றற்குரிய புத்தகம் இன்றியமையாததேயாம். ஆதலால், வித்தையை விரும்பிக் கற்கும் சிறுவர்கள் புத்தகங்களைச் சம்பாதித்து, அவைகளைக் கிழியாமலும் அழுக்குப்படியாமலும் கெட்டுப்போகாமலும் சாவதானமாகப் பாதுகாத்துவைத்துப் படித்தல் வேண்டும். வேறு மாணாக்கர்களுக்காவது பிறருக்கா

களைத் தெரிந்து தவறாமற் பயிரிடும்போது, சலத்துக்குங் குறைவில்லையானால், அவைகள் பயன்படாமற் போகமாட்டா.

பயிரிடுவோர்கள் ஆடுமாடுகளையும் கலப்பை மண்வெட்டி முதலிய ஆயுதங்களையும், சொந்தத்தில் வைத்திருத்தல் நல்லது. பொருள் செலவிடக்கூடிய திறமைக்கும், ஆடு மாடு முதலிய அணிகளுக்குந் தக்கபடி, தாம் செய்கை பண்ணத்தக்க நிலத்தைக் கோலி, அதிற் பயிரிடுதல்வேண்டும். மிகுதியாக நிலமிருந்தால் அதைக் குத்தகைக்கு அல்லது வாரத்துக்கு விடுதல்வேண்டும். திறமையில்லாதவர்கள் அதிக நிலத்தைச் செய்கைபண்ணினால், மிகுந்த சிரமத்தை அடைதல் மாத்திரமன்றி, வரவு குறையச் செலவு கூடுதலாற் பயிர்த்தொழிலால் வரும் ஊதியத்தையும் இழப்பர். பின்வரும் பயிர்த்தொழில் வரும்படியை ஈடுவைத்து வட்டிக்கு வாங்கிப் பயிர்த்தொழில் செய்பவர், அத்தொழிலிலே தலையெடுப்பது அரிது.

பயிர் செய்யுமிடத்து, உணவுக்கு இன்றியமையாத நெல் முதலியவைகளையன்றி, வாழை, கரும்பு, தென்னை, காப்பி, தேயிலை, புகையிலை, பருத்தி, அவுரி முதலியவைகளையும் அது அது விருத்தியாகும் நிலங்களையறிந்து வைத்து உண்டாக்குதல் உத்தமம். இவைகள் மிகுந்த பொருள் வரும்படியைத் தரத்தக்கவைகள். இன்னும் மா, பலா, புளி, இருப்பை, பனை முதலிய மரங்களையும் வைத்துண்டாக்குதல் நல்லது. இந்தியாவிலும், இலங்கையிலும், சில இடங்களில் ஐரோப்பியர்கள் வந்திருந்து, விஸ்தாரமான நிலங்களை வாங்கி, தென்னை காப்பி தேயிலை முதலியவைகளை வைத்து உண்டாக்கி, அவைகளினாலே பெரும் பொருள் சம்பாதிக்கின்றார்கள்.

இந்தியாவிலே சில இடங்களிலும், யாழ்ப்பாணத்திலும், ஆழமுள்ள கிணறுகளிலிருந்து கஷ்டப்பட்டுத் தண்ணீர் இறைத்துப் பயிர்செய்கின்றார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள கிணறுகளிற் சில மழையில்லாத காலத்திலும், எவ்வளவு நேரம்

இறைத்தாலும் சலம் வற்றுகிறதில்லை. அவைகளை, மாடுகட்டி இறைக்கிற கவலையேற்றத்தினாலாவது, வேறு சலம் இறைக்கும் யந்திரங்களினாலாவது, இறைத்துத் தண்ணீர் பாய்ச்சினால், அதிக நிலத்துக்குப் பாயும்; இறைப்பவர்களுக்கும் அதிக கஷ்டமில்லை. இறைத்துப் பயிரிடுந்தொழிலில் யாழ்ப்பாணத்தவர்கள் சிறந்தவர்கள்.

---

## உஎ. நாணகம்.

பொன், வெள்ளி, செம்பு என்னும் உலோகங்களினாற் செய்யப்படும் சவறன்களும், ரூபாக்களும், காசுகளும் நாணகங்கள் என்று சொல்லப்படும். இவைகள் மனிதர்களால் உபயோகப்படுத்தப்படுவன. ஒவ்வொரு தேசத்தார்களுக்கும் அவ்வத்தேசங்களை ஆளும் அரசினர்களாலே பலவித அடையாளங்களும் பெயர்களும் உள்ளவைகளாகச் செய்து வெளிப்படுத்தப்படுகின்றன. இவைகள் உணவுப் பொருள்கள் முதலாகிய வஸ்துக்கள் ஒன்றும் இல்லாத இடங்களிலே சிறிதும் பயன்படாவாம். ஆயினும், நெல் புடவை இரத்தினம் ஆடு மாடு முதலாகிய எல்லாப் பொருள்களையும் வாங்குதற்குக் கருவியாயிருத்தலால், செல்வம் என்று சொல்லப்படும். நம்முடைய அநுபவத்துக்கு வேண்டும் பொருள்களை விலைக்கு வாங்கிக்கொள்வதே இதனால் நாம் அடையும் பிரயோசனம். நாணகம் இல்லையானால் உலகம் நடைபெறாது.

நம்மை ஆளும் ஆங்கிலேய அரசினர், இந்தியாவிலே ரூபா அணா பைசா என்னும் பெயருடனும், இலங்கையில் ரூபா சதம் என்னும் பெயருடனும், வழங்கும்படி, வெள்ளியினாலும், செம்பினாலும், வேறொரு கலப்பு லோகத்தினாலும் நாணகங்களையுண்டாக்கிப் பரவச்செய்திருக்கிறார்கள். இந்த நாணகங்களும், இந்தியாவையடுத்த வேறு சில தீவுகளுக்குரிய நாணகங்களும், கற்கத்தாவிலே யந்திரங்களினாற் செய்

களைத் தெரிந்து தவறுமற் பயிரிடும்போது, சலத்துக்குங் குறைவில்லையானல், அவைகள் பயன்படாமற் போகமாட்டா.

பயிரிடுவோர்கள் ஆடுமாடுகளையும் கலப்பை மண்வெட்டி முதலிய ஆயுதங்களையும், சொந்தத்தில் வைத்திருத்தல் நல்லது. பொருள் செலவிடக்கூடிய திறமைக்கும், ஆடு மாடு முதலிய அணிகளுக்குந் தக்கபடி, தாம் செய்கை பண்ணத்தக்க நிலத்தைக் கோலி, அதிற் பயிரிடுதல்வேண்டும். மிகுதியாக நிலமிருந்தால் அதைக் குத்தகைக்கு அல்லது வாரத்துக்கு விடுதல்வேண்டும். திறமையில்லாதவர்கள் அதிக நிலத்தைச் செய்கைபண்ணினல், மிகுந்த சிரமத்தை அடைதல் மாத்திரமன்றி, வரவு குறையச் செலவு கூடுதலாற் பயிர்த்தொழிலால் வரும் ஊதியத்தையும் இழப்பர். பின்வரும் பயிர்த்தொழில் வரும்படியை ஈடுவைத்து வட்டிக்கு வாங்கிப் பயிர்த்தொழில் செய்பவர், அத்தொழிலிலே தலையெடுப்பது அரிது.

பயிர் செய்யுமிடத்து, உணவுக்கு இன்றியமையாத நெல் முதலியவைகளையன்றி, வாழை, கரும்பு, தென்னை, காப்பி, தேயிலை, புகையிலை, பருத்தி, அவுரி முதலியவைகளையும் அது அது விருத்தியாகும் நிலங்களையறிந்து வைத்து உண்டாக்குதல் உத்தமம். இவைகள் மிகுந்த பொருள் வரும்படியைத் தரத்தக்கவைகள். இன்னும் மா, பலா, புளி, இருப்பை, பனை முதலிய மரங்களையும் வைத்துண்டாக்குதல் நல்லது. இந்தியாவிலும், இலங்கையிலும், சில இடங்களில் ஐரோப்பியர்கள் வந்திருந்து, விஸ்தாரமான நிலங்களை வாங்கி, தென்னை காப்பி தேயிலை முதலியவைகளை வைத்து உண்டாக்கி, அவைகளினலே பெரும் பொருள் சம்பாதிக்கின்றார்கள்.

இந்தியாவிலே சில இடங்களிலும், யாழ்ப்பாணத்திலும், ஆழமுள்ள கிணறுகளிலிருந்து கஷ்டப்பட்டுத் தண்ணீர் இறைத்துப் பயிர்செய்கின்றார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள கிணறுகளிற் சில மழையில்லாத காலத்திலும், எவ்வளவு நேரம்

மறைமலையடிகள் நூல் நிலையம் MARAIMALAI ADIGAL

இறைத்தாலும் சலம் வற்றுகிறதில்லை. அவைகளை, மாடுகட்டி இறைக்கிற கவலையேற்றத்தினாலாவது, வேறு சலம் இறைக்கும் யந்திரங்களினாலாவது, இறைத்துத் தண்ணீர் பாய்ச்சினால், அதிக நிலத்துக்குப் பாயும்; இறைப்பவர்களுக்கும் அதிக கஷ்டமில்லை. இறைத்துப் பயிரிடுந்தொழிலில் யாழ்ப்பாணத்தவர்கள் சிறந்தவர்கள்.

---

## உஎ. நாணகம்.

பொன், வெள்ளி, செம்பு என்னும் உலோகங்களினாற் செய்யப்படும் சவறன்களும், ரூபாக்களும், காசுகளும் நாணகங்கள் என்று சொல்லப்படும். இவைகள் மனிதர்களால் உபயோகப்படுத்தப்படுவன. ஒவ்வொரு தேசத்தார்களுக்கும் அவ்வத்தேசங்களை ஆளும் அரசினர்களாலே பலவித அடையாளங்களும் பெயர்களும் உள்ளவைகளாகச் செய்து வெளிப்படுத்தப்படுகின்றன. இவைகள் உணவுப் பொருள்கள் முதலாகிய வஸ்துக்கள் ஒன்றும் இல்லாத இடங்களிலே சிறிதும் பயன்படாவாம். ஆயினும், நெல் புடவை இரத்தினம் ஆடு மாடு முதலாகிய எல்லாப் பொருள்களையும் வாங்குதற்குக் கருவியாயிருத்தலால், செல்வம் என்று சொல்லப்படும். நம்முடைய அநுபவத்துக்கு வேண்டும் பொருள்களை விலைக்கு வாங்கிக்கொள்வதே இதனால் நாம் அடையும் பிரயோசனம். நாணகம் இல்லையானால் உலகம் நடைபெறாது.

நம்மை ஆளும் ஆங்கிலேய அரசினர், இந்தியாவிலே ரூபா அணா பைசா என்னும் பெயருடனும், இலங்கையில் ரூபா சதம் என்னும் பெயருடனும், வழங்கும்படி, வெள்ளியினாலும், செம்பினாலும், வேறொரு கலப்பு லோகத்தினாலும் நாணகங்களையுண்டாக்கிப் பரவச்செய்திருக்கிறார்கள். இந்த நாணகங்களும், இந்தியாவையடுத்த வேறு சில தீவுகளுக்குரிய நாணகங்களும், கற்கத்தாவிலே யந்திரங்களினாற் செய்

யப்படுகின்றன. கையினால் செய்தால், ஒருவன் ஒரு நாளையில் ஒரு நாணகத்தைத் தானும் சரியாய்ச் செய்து முடிக்கமாட்டான். யந்திரங்களின் உதவியினால் ஒருவன் ஒரு நாளையில் இருபதினாயிரம் நாணகங்களைச் செய்துமுடிப்பான். நாணகங்களை அரசினரல்லாத வேறு எவர்களும் செய்யக்கூடாது.

பொற்காசாகிய சவறன் முன் இத்தேசங்களுக்குரிய நாணகமன்று; இங்கிலாந்து முதலிய தேசங்களில் மாத்திரம் வழங்கிவந்த நாணகம். அதைக் காசுமாலை முதலியவைகள் செய்வதற்காக இத்தேசத்தார்கள் விலைக்குவாங்கி வந்தார்கள். இப்போது சில காலமாய் அது இத்தேசங்களிலும் நாணகமாக வழங்கிவரும்படி அரசினர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள சிற்றரசர்கள், தங்கள் ஆளுகைக்குட்பட்ட இடங்களிலே அநேகவிதமான பொன் வெள்ளி செம்பு நாணகங்களைச் செய்து, அவைகளுக்கு வேறு வேறு பெயர்களையிட்டு, வழங்கி வருகின்றார்கள். பொன் வெள்ளி நாணகங்களை உருக்கிச் சிலர் ஆபரண முதலியன செய்வதுமுண்டு. நாணகம் என்னும் பதம் நாணயம் என வழங்கப்பட்டு வருகின்றது.

---

## உஅ. சிநேகம்.

ஒருவன் தீச்செயல்களிற் செல்லும்பொழுது செல்லாமல் தடுத்தலும், நல்வழிகளிற் செலுத்துதலும், அவனுக்கு யாதாயினும் கேடு வந்த காலத்தில் அதனால் வருந்துன்பத்தை அவனோடுகூடத் தானும் அனுபவித்தலும், எக்காலத்தும் வேறுபடாமையும் ஆகிய இவை முதலிய நற்குணங்களை உடையவனே சிநேகன் ஆவான். மன ஒற்றுமையுடைமையே சிநேக விருத்திக்குச் சிறந்த காரணம். பெரியவர்களுடைய சிநேகம் பிறைபோல நாளொருவண்ணமாக வளர்ந்துகொண்டு வரும். கரும்பு நுனியிலிருந்து தின்பவனுக்கு மேலே தின்னத் தின்னச் சுவையை மிகக்கொடுத்துக்கொண்டு வருதல்போல,

நல்லோருடைய சிநேகமும் பழகப்பழக உறுதியையும் மன மகிழ்ச்சியையும் மிகவுங் கொடுத்துக்கொண்டே வரும். இவ் வியல்புடைய சிநேகத்தைப் பெறுதல் மிகுந்த அருமையாம்.

ஒருவரோடொருவர் சிநேகஞ் செய்தல், தகாத செயல்கள் காணப்படுமிடத்து இடித்துப் பேசி நல்வழிப் படுத்துதற்கன்றித், தம்முட் சிரித்து விளையாடுதற்கன்று. கண்டவிடத்து முகமாத்திரம் மலரும்படி சிநேகிப்பது சிநேகமன்று; மனமும் மலரும்படி சிநேகிப்பதே சிநேகமாம்.

ஒருவருடைய குணங்களை ஆராயாமற் சிநேகஞ் செய்தலாகாது. ஆபத்துக்காலத்திற் கைவிடுவோரையும், தமக்குப் பிரயோசனமுள்ள காலத்தில் வந்துகூடி அது இல்லாத காலத்தில் விட்டு நீங்குவோரையும், மூடரையும், சொல்லொன்று செயலொன்றாயிருப்போரையும் சிநேகஞ் செய்தலாகாது. இதனாலன்றோ ஔவையாரும் 'நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும்' என்று அருளிச்செய்தார்.

மூடருடைய சிநேகம் எல்லாத் தீமைகளையும் உண்டாக்குதலாலும், அறிவிற் சிறந்த பெரியாருடைய சிநேகம் எல்லா நன்மைகளையும் உண்டாக்குதலாலும், சிறியாரோடு சிநேகஞ் செய்தலைக் கைவிட்டுப், பெரியாரோடு சிநேகஞ் செய்தல்வேண்டும். இச்சிநேகம் உடையானுக்கு எவ்வகைப்பட்ட இடர்களும் நீங்க, எல்லாநன்மைகளும் தாமே உண்டாகும்.

---

## உகூ. ஈகை.

ஈகையாவது வறியவர்களாய் இரந்தவருக்கு இல்லையென்று மறுக்காது கொடுத்தல். வறியரல்லாதார்க்கு இம்மைப் பயன் கருதிக் கொடுப்பன எல்லாம் ஈகையாகமாட்டா. உயர் குடிப் பிறந்தார் தம்மிடத்து வறியவர் வந்து யாசிக்குமுன் குறிப்பறிந்து, அவர் மனம் உவக்கும்படி கொடுப்பர்.

கொடையாளர்க்குப் பலருடைய நட்பும், பெரியோர்களு டைய ஆசியும், புண்ணியமும், கடவுளுடைய அருளும், பிற நன்மைகளும் உண்டாகும்; இம்மை மறுமை இரண்டினும் நீங் காத இன்பத்தை அடைபவர் இவரே. இவர் உயிர்களைக் காத் தலால், தாயையும் அரசனையும் கடவுளையும்போல் விளங்கு வர். இவருக்குப் பகைவரும் சிநேகராவர். இவருடையசெல் வம் பிரயோசனத்தைத் தரும் விருக்ஷம் ஊர்நடுவிற் பழுத் தாற்போல எல்லாருக்கும் பிரயோசனப்படும்.

வரைவின்றி யாவர்க்கும் கொடுத்தலால் முதல் வள்ளல் எனவும், இரப்போர்க்குக் கொடுத்தலால் இடைவள்ளல் என வும், புகழ்வோர்க்குக் கொடுத்தலால் கடைவள்ளல் எனவும், முற்காலத்திருந்த ஈகையாளரை மூவகைப்படுத்து நூலோர் வகுத்திருக்கின்றனர். சிறுமுயற்சி பெருமுயற்சிகளாற் பயன் படும் இயல்பு நோக்கி, கொடையாளரை மூவகையாக்கி, அவ ருக்குப் பனை தென்னை கமுகு என்னும் மூன்றனையும் உவமை யாகவுங் கூறுவர்.

செல்வத்துட் செல்வமாகிய அருள் காரணமாக உண்டா வது ஆதலாலும், புகழுடம்பை நிலைபெறச் செய்தலால் இறந் தவரையும் இறவாதவராக்குதலாலும், தன்னையுடையானை உலகரும் புலவரும் புகழும்படி செய்தலாலும், ஏனை அறங்க ளுட் சிறப்புடையது ஈகையே. இவ்வறம் எவ்வறங்களினும் சிறந்தமையாலன்றோ திருவள்ளுவநாயனாரும் 'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' என்று அருளிச்செய்தார். இரக்கமில்லார் குணம் ஆதலாலும், எல்லாராலும் இகழப்படுத லாலும், புகழைத் தாராமையால் உயிரோடிருப்பவரையும் இறந்தவராகச் செய்தலாலும், பாவங்களுள்ளே தலையாயது ஈயாமையே. ஈகையில்லாதாருடைய செல்வம், நடுவூரிற் பழு த்த நச்சுமரத்தின் பழம் ஒருவருக்கும் பிரயோசனப்படாமை போல, ஒருவருக்கும் பிரயோசனப்படமாட்டாது.

ஈகையில்லாதார் தமக்கும் பிறர்க்கும் பிரயோசனப்பட மாட்டார். ஆதலால் யாவரும் தமக்கும் பிறர்க்கும் பிரயோசனப்படுமாறு இயல்வதைக் கரவாது ஈக.

---

## ௩0. இலங்கை.

இலங்கை இந்தியாவுக்குத் தெற்கேயுள்ள ஒரு தீவு. இது ஈழதேசம் எனவும் பெயர் பெறும். இராவணன் இருந்து அரசாண்டதும், அவன் சீதையைச் சிறைவைத்ததும், இராமசுவாமி சேதுபந்தனஞ்செய்து அதன்வழியாய் வானர சேனைகளோடு போய் அவ்விராவணனைச் சங்காரஞ்செய்ததும், முதலாக இராமாயணம் என்னும் இதிகாசத்தாற் சிறப்பித்துச் சொல்லப்படும் சரித்திரங்களையுடைய தேசம் இவ்விலங்கையே.

இலங்கைத்தீவு மன்னார் இராமேச்சரம் என்னும் சிறு தீவுகளினால் இந்தியாவோடு இணைக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையில் யாழ்ப்பாணத்தின் வடபாகத்திலுள்ள காங்கேசன் துறைக்கும், தென்னிந்தியாவில் வேதாரணியத்திற்குத் தெற்கேயுள்ள கோடிக்கரைக்கும், இடையிலுள்ள கடலின் தூரம், முப்பத்தேழுமைல். இந்த இரண்டு துறைகளிலும் நல்ல வளமான காற்று வீசுங்காலங் களிலே, நாலு அல்லது ஐந்துமணிநேரத்துள் தோணிகள் ஒருதுறையிலிருந்து மற்றைத்துறையை அடைகின்றன.

இலங்கை சென்னபட்டணத்திலிருந்து இருநூற்றைம்பதுமைல் தூரத்திலிருக்கின்றது. அதன் வடிவு ஏறக்குறைய மாங்காயின் வடிவுபோலும். அதன் நீளம் வடக்குத் தெற்கு இருநூற்றெழுபத்தொரு மைல். அகலம் கிழக்கு மேற்கு நூற்றுமுப்பத்தேழு மைல். சுற்றளவு எழுநூற்றறுபது மைல் அதன் வடபாகம் அகலத்தால் மிகக் குறைந்தது.

இலங்கையை ஆதியில் தமிழரசர்களும், அதன்பின் போர்த்துகீசரும், அதன்பின் உலாந்தரும் ஆண்டார்கள். அதன்பின் ௧௭௯௬-ம் வருஷமுதல் நம்மையாளும் இங்கிலீஷ் அரசினர் ஆண்டு வருகிறார்கள். அது ஆங்கிலேயர்கள் கைப் பட்ட பின்னும், கண்டிநகரில் ஸ்ரீவிக்கிரமராசசிங்கன் என்னும் ஓர் இந்து அரசன் இருந்து சில ஊர்களை ஆண்டான். அவனும் ஆங்கிலேயராற் பிடிக்கப்பட்டான்.

இலங்கை இப்பொழுது ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. மாகாணம் இந்தியாவிலுள்ள ஜில்லாவிற்குச் சமானம். இலங்கை முழுதுக்கும் பிரதான பட்டணம் கொழும்பு. 1921-ம் வருஷத்தில் அரசினர் கணக்கிட்டபடி இலங்கையின் சனத்தொகை 45,00,669.

இலங்கையிலுள்ள காடுகளில், பாலை கருங்காலி முதிரை முதலிய பெரியமரங்கள் உண்டாகின்றன. அவைகளில் யானைகள் உண்டு. இலங்கையில் நெல் வரகு முதலிய தானியவகைகள் செய்கை பண்ணப்படுகின்றன. தென்னை பனை காப்பி தேயிலை புகையிலை ஏலம் என்னும் இவைகள் மிகுதியாய் உண்டுபண்ணப்படுகின்றன. மன்னாரைச் சார்ந்த சலாபத்துறையிலே குளிக்கப்படும் முத்து மிகச்சிறந்தது. இலங்கையிலே மாணிக்கம் முதலிய வேறு இரத்தினங்களும் அகப்படுகின்றன.

இலங்கையில், திரிகோணமலை திருக்கேதீச்சரம் என்னும் இரண்டு தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களும், திருப்புகழ் பெற்ற கதிர்காமம் முதலிய சுப்பிரமணிய ஸ்தலங்களும், தமிழரசர்களாலும் பிரபுக்களாலும் ஸ்தாபிக்கப்பட்ட சிவாலயம் சுப்பிரமணியாலயம் முதலியவைகளும் இருக்கின்றன. அங்கே அநேக பழமையான பௌத்தாலயங்களும் இருக்கின்றன. தமிழும் சிங்களமும் இலங்கையிற் பேசப்படும் பாஷைகள். வடமாகாணத்தின் தலைநகரமாகிய யாழ்ப்பாணம் தமிழரசர்

காலமுதலாகத் தமிழ் வித்துவான்களுக் கிருப்பிடமாயிருக்கின்றது. வடமாகாணம் ஒழிந்த மற்றை மாகாணங்களிலே, பல சீவ நதிகளும், சிற்றாறுகளும் பாய்கின்றன. அநேக வயல் நிலங்களுக்கு நீர் பாய்ச்சத்தக்க ஏரிகள் பல கிலமாயுள்ளன. அவைகளை இப்போது கவர்ண்மெண்டார் புதுக்குவித்துக் கொண்டு வருகின்றார்கள்.

---

## ௩க. பேராசைபெருந்துயர்.

ஓர் ஊரிலே, மிகவும் தரித்திரனாகிய ஒருவன் விறகு வெட்டிச் சுமந்துவிற்று, அதனாலே சீவனஞ்செய்து வந்தான். அவன் ஒருநாள், சமீபத்தில் விறகுவெட்டக் கிடையாமையினால், மிகுந்த தூரத்தில் ஓர் ஆற்றங்கரையில் உள்ள காட்டிற்குப்போய், அதன் கரையிலே, பட்டுச் சாய்ந்து நிற்கும் மரத்தைக் கண்டு, கோடாலி கொண்டு அதைத்தறித்தான். கோடாலி கழன்று, ஆழமாய்ப் பெருகியோடும் ஆற்று வெள்ளத்துள் வீழ்ந்தது.

பசிதாகங்களினாலே மிகவும் களைப்படைந்த அவ்வேழையானவன் 'இனி என்ன செய்வேன்' என்று மனவருத்த மடைந்து, அழுதுகொண்டு நின்றான். அப்பொழுது, அக்காட்டிலிருக்கும் வனதெய்வமானது அவனுக்கு எதிரேவந்து, 'ஏன் அழுகிறாய்' என்று கேட்டது. அவன் நடந்ததைச் சொன்னான். உடனே அத்தெய்வம் அவனுக்காக இரங்கி, அவ்வாற்று வெள்ளத்துள் இறங்கி மூழ்கித் தடவிப்பார்த்து, ஒரு வெள்ளிக் கோடாலியை எடுத்துக்கொண்டு வந்து காட்டி, 'இது தானா உன் கோடாலி' என்று கேட்டது. அவன் 'அன்று' என்றான். அத்தெய்வம் பின்னும் மூழ்கித் தடவிப் பார்த்து, ஒரு பொற்கோடாலியை எடுத்துக் கொண்டுவந்து காட்டி, 'இது தானா' என்று கேட்டது. அவன் அதனையும் அன்று என்றான். அத்தெய்வம் பின்னும் ஒருமுறை மூழ்

கித் தடவிப்பார்த்து, ஓர் இரும்புக் கோடாலியை எடுத்துக் கொண்டுவந்து காட்டி, 'இது தானு' என்று கேட்டது. அம் மனிதன் அது தன் கோடாலியாயிருக்கக் கண்டு, மிகுந்த சந்தோஷத்தோடு 'இது தான் என் கோடாலி' என்று சொல்லி, அதனை எடுத்த நன்றிக்காக அத்தெய்வத்தைத் துதித்தான்.

தெய்வம், அவனுடைய சத்தியத்தையும் உறுதியையும் புகழ்ந்து, தான் எடுத்த கோடாலிகள் மூன்றையும் இன்னும் அநேக திரவியங்களையும் பல வரங்களையுங்கொடுத்து, அவனை ஆசீர்வதித்துப் போயது. அத்தரித்திரன் அவைகளைப் பெற்றுப் பெருஞ் செல்வனாய்த் தன் குடும்பத்தாரோடு மகிழ்ந்து வாழ்ந்தான்.

இந்தச் சமாசாரங்களை விசாரித்தறிந்த வேறொரு விறகுகாரன், தானும் இவனைப்போலச் செல்வனாகவேண்டும் என்று எண்ணி, அந்தக் காட்டில் ஆற்றோரத்திலே விறகு வெட்டிக், கோடாலியை ஆற்றிலே நழுவவிட்டு நின்று அழுதான். அப்பொழுதும் அவ்வனதெய்வம் முன்போல் ஆற்றுவெள்ளத்துள் மூழ்கி ஒரு வெள்ளிக் கோடாலியை எடுத்துக் காட்ட, அவன் மிகுந்த சந்தோஷத்தோடு 'இது தான் என் கோடாலி' என்றான். தெய்வம் கோடாலியை ஆற்றினுள் எறிந்துவிட்டு, அவனைக்கோபித்து, நித்திய தரித்திரனாகும்படி சபித்தது. அவன் பேராசை காரணமாகச் சொல்லிய ஒரு பொய்யினால் முன்னையினும் மிகுந்த தரித்திரனாய்ப், பெருந் துன்பத்தை அநுபவித்தான்.

---

## ௩௨. வீ டு.

வீடாவது மனிதர்கள் பலவகை இன்பங்களையும் அநுபவித்துக் கொண்டிருந்து வாழ்தற்குரிய தானமாம். அது பெரும்பான்மையும் இல்லறத்தாருக்குரியதானம். துறவிகள் இருத்தற்கும் வழிப்போக்கர்கள் வந்து தங்குதற்கும் உரிய

இடங்கள், மடம் சத்திரம் என்று சொல்லப்படும். யாவரும் தாம் வசிக்கும் இடத்திலுல் அடையுஞ் சுகத்தைத் தங்கள் விசேஷமாகிய சுகங்களுள் முதலாவதாக மதித்துக் கொள்ளுகிறார்கள். அதற்குக் காரணம் அது பெரும்பான்மையும் அவர்கள் தேக சௌக்கியத்துக்குக் காரணமாயிருத்தலேயாம். ஆதலினாலே, யாவரும் தங்கள் சரீர சௌக்கியத்துக்கு ஏற்ப வீடுகளை அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

வீடு கட்டுதற்குரிய தானம் தரைமட்டத்துக்குத் தாழ்வாயிருத்தல் கூடாது. அது தரை மட்டத்துக்கு உயர்வாயும், அருகிலே மழைச்சலம் நில்லாததாயும், குடிகள் அடர்ந்ததல்லாததாயும், நல்ல காற்று உலாவத்தக்கதாயும் இருத்தல்வேண்டும். வீடு கட்டும்பொழுது, வேண்டுமட்டும் காற்றுவந்து உலாவத்தக்க பலகணிகளும் வாயில்களும் அதில் வைப்பித்தல் வேண்டும். மழை ஈரந் தாக்காதபடி வேண்டுமளவும் வீட்டுத் தரையை உயர்த்திக்கொள்ளுவதேயன்றி, கூரையில் விழும் மழைச்சலம் சீக்கிரம் வடிந்தோடும்படி தாழ்வாரங்களைச் செய்வித்தலும் வேண்டும். ஈரமுள்ள வீட்டில் வாசஞ் செய்வதினுல் சுரம் முதலிய பலவித நோய்கள் உண்டாகின்றன. வெய்யிற் காலத்திலே சலம்வற்றிச் சேறுகும் குளங்கள் ஆறுகளின் அருகிலே வீடு கட்டலாகாது.

வீட்டில் சமையலிடம், படுக்குமிடம், சாமான்கள்வைக்குமிடம் என்னும் இவைகள் வெவ்வேறாய் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மாடு முதலிய கட்டுந் தானங்களை வீட்டுக்கு அதி சமீபத்திலே வைத்துக்கொள்ளலாகாது. வீட்டுச் சுவர்களுக்கு வருஷத்தில் இரண்டுமுறை வெள்ளையடித்தல்வேண்டும்; அல்லது மண்பூசல்வேண்டும். செங்கற்படுத்த நிலங்களையும் மண்படுத்த நிலங்களையும் பசுவின் சாணங்கொண்டு மெழுகல்வேண்டும்.

கிணற்றின் அருகே விருக்ஷங்களை வைத்தலாகாது; அவை களிலிருந்து உதிரும் இலைகளும் அவைகளின் வேர்களும் கிணற்றுச் சலத்தைக் கெடுக்கும். மரஞ்செடிகளிலிருந்து உதிரும் இலைகளை அவ்வப்பொழுது நீக்கி, வீட்டுக்குத் தூரமாயுள்ள குப்பைக் குழியிலே சேர்ப்பித்தல்வேண்டும். மலகூடத்தையும், எச்சிலிலைக்குழியையும், வீட்டுக்கும் கிணற்றுக்கும் தூரமாயுள்ள இடத்தில் அமைப்பித்து, அவைகளைக் காலத்துக்குக் காலம் சுத்தி செய்வித்தல் வேண்டும்.

சில செல்வர்கள் சோம்பலினாலும், வறியவர்கள் முட்டுப்பாட்டினாலும், தங்கள் வீட்டையும் வீட்டைச் சேர்ந்த கொல்லையையும் பற்றிச் சிந்தியாதவர்களாய், அதனாற் சரீரசுகத்தை இழந்து, நோயுற்று வருந்துகின்றார்கள். அவர்கள் சோம்பலினாலும் அற்ப பொருளேனும் செலவுசெய்ய மனம் பொருந்தாமையினாலும் தமக்குப் பின் வரும் பெருங்கேட்டைச் சிந்திக்கின்றார்களில்லை. உணவு நித்திரை என்னும் இவைகளைப் போலக் காற்றும் உயிர்களுக்கு இன்றியமையாதது. ஆதலால், மனிதர்கள் வீடுகளையும், அவைகளைச் சேர்ந்த கொல்லைகளையும் நல்ல காற்று உலாவத்தக்கனவாகச் செய்துகொள்வது ஆவசியகம்.

---

## ௩௩. தாவரம்.

பூமியில் வளரும் விருக்ஷங்களும், கொடிகளும், செடிகளும், புற்களும் தாவரங்கள் என்று சொல்லப்படும். இவைகளெல்லாம் பரிசத்தை மாத்திரம் அறியும் ஓரறிவுயிர்கள். இவைகள் உணவுக்குரிய காய் கனி கிழங்கு இலை முதலியவைகளையும், வாசனையுள்ள புஷ்பங்களையும், நிழலையும், நல்ல காற்றையும் தரும். அநேக தாவரங்கள் ஔஷதங்களுக்கு உதவுகின்றன. அநேக விருக்ஷங்கள் வீடு கட்டுதற்கும், மரக்கலம் வண்டி பெட்டி நாற்காலி முதலியன செய்தற்கும் உதவு

கின்றன. தாவரங்களின் பசுமையாகிய இலைகள் கண்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கின்றன. நம்முடைய ஆகாரங்களைப் பாகம் பண்ணுதற்கு விறகு தருவன இத்தாவரங்களே. நாம் உடுக்கிற வஸ்திரங்கள் பெரும்பாலும் தாவரங்களுள் ஒன்றாகிய பருத்தியின் பஞ்சினால் உண்டாக்கப்படுகின்றன. தாவரங்கள் இல்லையானால் உயிர்கள் பிழைத்திருத்தல் அருமை. தாவரங்கள் அழகிய உருவங்களையும் நிறங்களையும் உடையவைகளாய், தாம் முளைத்த இடத்தில் அல்லது நாம் வைத்துண்டாக்கிய இடத்தில் நின்று வளர்ந்தழியும். இவைகள் சஞ்சரிக்கும் தன்மை இல்லாமையால் அசரம் எனவும் பெயர் பெறும். இவைகளுக்கு உணவு சலம். சலத்துடன் எருவுஞ் சேர்ந்தாற் செழித்து வளரும். சலத்தை வேரினாலே கிரகித்தலால் விருக்ஷங்களுக்குப் பாதபம் என்றும் பெயர்.

மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் தோல் இருத்தல் போல, தாவரங்களுக்குப் பட்டை அல்லது தோல் உண்டு; அவைகளை முழுதும் உரித்துவிட்டாற் பட்டுப்போம். மற்றைச் சீவர்களுக்குப் போலவே தாவரங்களுக்கும் காற்றும் வெளிச்சமும் அவசியம் வேண்டும். அவைகள் காற்றுவெய்யில்கள் இல்லாத இடத்தில் வெளுத்துப் பலன் குறைந்து கெடும். தாவரங்களெல்லாம், ஒரே தன்மையான நிலத்திலும், ஒரே தன்மையான காலத்திலும் உண்டாகமாட்டா. பல தாவரங்கள் தத்தமக்குரிய காலங்களிலன்றிக் காய் கனி முதலிய பலன்களைத் தரமாட்டாவாம். தாவரங்கள் உண்டாகத்தக்க நிலங்களையும், காலங்களையும், எருக்களையும், அவைகளை உண்டாக்கும் விதங்களையும் பற்றி அறிவிக்கும் நூலுக்குக் கிருஷிசாஸ்திரம் என்று பெயர்.

தாவரங்களுட் சில வித்துக்களையும், சில வேர்களையும், சில கிழங்குகளையும், சில கொம்புகளையும், மேற்பிளந்துதோன்றும். இதனால் அவைகளுக்கு உற்பிச்சம் என்று பெயர்.

தாவரங்களைப் பத்தொன்பது லக்ஷம் யோனிபேதம் என்று மேலோர்கள் வகைசெய்திருக்கின்றார்கள்.

## ரு௪. சிங்கம்.

சிங்கம் மிருகங்களுள் அதிக பலமும், வீரமும், அஞ்சா நிலைமையும், இராசகுணமும், வேகமும், பெருமித நடையும் உள்ளது. அதைக் காண்கிறவைகளும் அதன் கெர்ச்சிப்பைக் கேட்கிறவைகளும் ஆகிய சகல மிருகங்களும் மிகவும் பயந்து ஒடுங்கும், மிருகங்களெல்லாவற்றிற்கும் தலைமையாயிருத்தலால், அதற்கு மிருக ராசன் என்றும் மிருகேந்திரன் என்றும் பெயர். அதன் முகம் பரந்தும் இடை சிறுத்துமிருக்கும். பரந்த முகமுடைமையால், அதற்குப் பஞ்சானனம் என்றும் பெயர். [பஞ்சம் - விரிவு. ஆனனம் - முகம்.]

மிகவும் பெரிய சிங்கம் ஐந்து அடி உயரமும் ஒன்பது அடி நீளமும் உள்ளதாயிருக்கும். அதன் கால்களில் ஒன்றே கால் அங்குலம் வரையில் நீண்ட நகங்கள் உண்டு. அவைகளை வேண்டும்போது அது சுருக்கிக்கொள்ளும்; அல்லது நீட்டிக் கொள்ளும். அதன் முன்பக்கத்தில் மயிர்கள் அடர்ந்து நீண்டிருக்கும். அதற்கு உணவு மாமிசம்.

சிங்கம் தான் கொல்ல நினைத்த மிருகத்தின்மேற் பாயும் பொழுது, அதிக வேகத்தினால் அந்த மிருகத்துக்கு அப்பாலும் போய் விழும். அது தன்னுடைய உணவுக்கு வேண்டிய அளவுக்குமேலே மிருகங்களைக் கொல்லுகிறதில்லை. பசி தணிய உண்டபின்பு சாந்தமும் அமைதியும் உள்ளதாயிருக்கும். அதற்குப் பகலிலும் பார்க்க இரவிற் கண்கள் நன்றாகத் தெரியும். அது இரைதேடும்பொருட்டு இரவிற் புறப்படும். மிகக் குறைந்த வலியுடைய மிருகங்களின் கோபத்தை அது கவனிக்கிறதில்லை. வேட்டைக்காரன் தன்னைக் கொல்லவந்து சமீ

பித்தபோதும், அஞ்சிப் புறங்காட்டமாட்டாது. மனுஷரைக் கொல்லுங்குணம் அதற்கு இயற்கையாய் இல்லை. அது இராச குணமுடையதாயிருத்தலால், தனக்கு அச்சமும் கீழ்ப்படிதலுமுள்ள எளிய மிருகங்களிடத்து மிகுந்த இரக்கமும், தனக்குப் பிறர் செய்த நன்றியை மறவாமைக்குணமும் உள்ளது. இவைகளினாலே அது பெருந்தன்மைக் குணமுடையதென மதிக்கப்படுகின்றது. சிங்கங்கள் ஆபிரிகாவிலும், அராபியாவிலும், பாரசீகத்திலுமுள்ள காடுகளிற் சஞ்சரிக்கின்றன. இந்தியாவிலும் சில காடுகளில் உண்டு.

---

## ௩௫. பொய்வேடம்.

சில சோம்பேறிகள், தத்தமக்குரிய தொழில்களைச் செய்து சீவனஞ் செய்வது கஷ்டம் என்று எண்ணிப் பொய் வேடம் பூண்டு, பிறரை வஞ்சிக்கப் புகுந்து, அவர்களால் அவமானத்தையும் பெருந்துன்பத்தையும் அடைகின்றார்கள். வேடத்துக்குத் தக்க செயல் உள்ளபடி இல்லாதபொழுது அவ்வேடம் பெருந்துன்பத்தையே தரும். அது பின்வருங் கதையினால் இனிது விளங்கும்.

ஒருநாள் ஒரு நரி தன்னிச்சைப்படி ஒரு நகரத்தின் சமீபத்திலே திரியும்பொழுது, இரவில் ஒரு நீலச்சாலினுள் விழுந்து மேலே எழும்புவதற்கு வலியில்லாமையால் தன்னை இறந்ததுபோலக் காட்டி அதனுட் கிடந்தது. அந்நீலச்சாலுடையவன் வந்து பார்த்து, இறந்ததென்றெண்ணி, அதைத் தூக்கித் தூரத்திலே கொண்டுபோய் எறிந்தான். பின்னர் நரி காட்டிற் போய், தான் நீலவர்ணமுடையதாயிருத்தலைக் கண்டு, 'நான் இப்பொழுது உத்தம வர்ணமுடையவனாயிருக்கின்றேன். ஆதலினால் நானே என்னை மேன்மையான நிலைக்குக் கொண்டுவர வேண்டும்' என்று நினைத்து, நரிகளை வருவித்து, 'நான் வன

தேவதையுடைய கையினலே சகல ஓஷதிகளினின்றும் எடுக்கப்பட்ட ரசத்தைக் கொண்டு காட்டு இராச்சிய பரிபாலனத்துக்காக அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கின்றேன்; என்னுடைய நிறத்தைப் பாருங்கள். இன்றுமுதல் இந்தக் காட்டுராச்சியீ வியவகாரங்களெல்லாம் என்னுடைய ஆஞ்ஞைப்படியே நடத்தப்படவேண்டும்' என்று சொல்லிற்று.

நரிகள் அதனுடைய விசேஷ வர்ணத்தைக் கண்டு, அது சொல்லியவைகளை மெய்யென்று நம்பி வணங்கி, 'அப்படித் தாங்கள் கட்டளையிடுகிறபடியே ஆகக்கடவது' என்று சொல்லின. இப்படியே படிப்படியாகப் பல காட்டு மிருகங்களிடத்தும் மேலான அதிகாரம் அந்நரிக்கு உண்டாயிற்று. பின்னர் அது, தனக்கு மேலான புலி முதலிய மிருகங்கள் தன்னை வந்து சேவிக்கக் கண்டு, நரிகளுடைய சகவாசத்தை அருவருத்து, அவைகளை வெறுத்துத் தூரத்தே நீக்கிற்று.

அப்பொழுது ஒரு கிழநரி, துக்கங்கொண்டிருக்கிற நரிகளைப் பார்த்து, 'பயப்படாதேயுங்கள் சுற்றத்தவர்களாகிய நாங்கள் அந்த நீதியற்றவனலே அவமானம் பண்ணப்பட்டிருக்கின்ருேம். அது எந்த உபாயத்தினல் அழியுமோ அந்த உபாயத்தை நானே சொல்லுகின்றேன். புலி முதலியவைகள் இதனை நரி என்று அறியாமல் இதன் நிறத்தினலே இராசா என்று எண்ணியிருக்கின்றன. அவைகள் உள்ளபடி அறிந்து கொள்ளத்தக்க உபாயம் எதுவோ அதனைச் செய்யுங்கள். எப்படியெனில், நீங்கள் எல்லீரும் மாலைக்காலத்தில் அதன் சமீபத்திற்போய் நின்று பெருஞ்சத்தமாக ஊளையிடுங்கள்' என்றது. அப்படியே அவைகள் ஊளையிட்டன. நீலநரியும் தன் சாதி வழக்கப்படி ஊளையிட்டது. உடனே புலி முத- கங்கள் அதை மிகவுந் துன்பப்படுத்திக் கொன்றுவிட

## ௩௬. தென்னை.

தென்னிந்தியாவிலே பல இடங்களிலும், இந்தியாவைச் சேர்ந்த சில தீவுகளிலும், தென்னமரிக்காவிலும் தென்னமரம் மிகுதி. அது மனிதர்களுக்கு மிகுந்த பிரயோசனத்தைக் கொடுப்பது. அதன் இளங்காய் குரும்பை என்றும், இளநீர் என்றும், முதிர்ந்த காய் தேங்காய் என்றும் சொல்லப்படும். இளநீர் தாகத்துக்குச் சாப்பிடவும், கடவுளுக்கு அபிஷேகஞ் செய்யவும் உதவும். தேங்காய் சுபகருமங்களுக்கு இன்றியமையாதது. தென்னம் பாளையிலிருந்து கள் இறக்குகிறார்கள். தேங்காயெண்ணெய் பலவித யந்திரங்களையும் ஆயுதங்களையும் கறை ஏறவிடாமற் காப்பாற்றும். இன்னும், விளக்கெரிக்கவும் மெழுகுவர்த்தி செய்யவும் உதவும். சில தேசங்களிலே தேங்காயெண்ணெயையும் தேங்காயையும் போசன பதார்த்தங்களிற் சேர்க்கிறார்கள்.

இங்கிலாந்து முதலிய தேசங்களிலே யந்திர வேலைகள் அதிகப்படுதலினால், அத்தேசங்களுக்குத் தேங்காயெண்ணெயும் காய்ந்த தேங்காயாகிய கொப்பறாவும் அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தேங்காய்களை உடைத்து வெய்யிலில் நன்றாக உலர்த்தி ஆலையிலிட்டு ஆட்டி எண்ணெயை எடுக்கிறார்கள். தென்னோலை வீடு வேயவும், வேலியடைக்கவும், தென்னந் தும்பு கயிறு திரிக்கவும், தென்னமரம் வீடு கட்டவும் உதவும்.

தென்னை நீர்வளமுள்ள செழிப்பான நிலங்களிலே முளைத்து ஐந்து வருஷத்திற் காய்க்கும். மூன்று வருஷத்திற் காய்க்கிற சில சாதித் தென்னைகளும் உண்டு. தேங்காயெண்ணெயேயன்றித் தென்னந் தும்புக் கயிறும் மலையாளத்திலும் இலங்கையிலுமிருந்து பிறதேசங்களுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

முதிர்ந்த தென்னமரத்தினால் நெடுநாளைக்குப் பயன் அடையவேண்டுமானால், நுனி மரத்தில் ஓலைகளுக்குக் கீழே

களிமண்ணை நான்குபுறத்திலுஞ் சேர்த்து வீழாமற் கட்டி வைத்து, அதிற் சலம் விட்டுக்கொண்டுவர, சில மாசங்களில் அம்மண்ணிலே வேர் இறங்கும். பின்பு அதை அறுத்து மண் ணுடன் இறக்கிக் குழியில் நட்டு உண்டாக்கினால், அது இள மரம்போல வளர்ந்து பயனைத் தரும். சிலர் அருமையாக இப் படிப் பிரயாசப்பட்டுந் தென்னமரத்தை வைத்துண்டாக்கு கின்றார்கள்.)

## ௩௭. சரீரசௌக்கியம்.

இருமையின்பங்களையும் பெறுதற்குக் கருவியாகக் கடவு ளாற் கொடுக்கப்பட்ட சரீரத்தை நோய் அணுகாவண்ணம் பாதுகாத்துக்கொள்ளவேண்டியது யாவர்க்கும் கடமையாம். ஆதலால் நாம் சரீர சௌக்கியத்தோடு சீவித்தற்கு வேண்டும் வசதிகளை இயன்றவரையிற் செய்துகொள்ளவேண்டியது அவ சியகம். மனிதர்களுக்குச் சரீர அசௌக்கியமானது அறியா மையினாலும், அறிந்த வழியும் அசாக்கிரதையினாலும் உண் டாகிறது. நல்ல தேக சௌக்கியத்தை அடையவேண்டுமா னால் நல்ல காற்று, நல்ல ஆகாரம், சுசியுடைமை, தேகப் பயிற்சி என்னும் இவைகளை எந்நாளும் விசேஷமாகக் கவ னித்து வருதல் வேண்டும்.

நாம் இருக்கும் வீடுகளுக்குப் பக்கங்களிலே நல்ல விரு க்ஷங்களையும் செடிகளையும் வைத்துண்டாக்கல் வேண்டும். வீடு களிலே வேண்டியமட்டும் பலகணிகளை அமைப்பித்தல் வேண் டும். வீட்டுக்குச் சமீபமாயுள்ள இடங்களை, குழிகளில் இலை கள் உதிர்ந்தழுகுதல், நீர் நின்று வற்றிச் சேறுபடுதல், முத லிய அசுசிகளில்லாவண்ணம் சுசியாயிருக்கும்படி வைத்தி ருத்தல்வேண்டும். படுக்கும் அறை சனநெருக்கம் இல் லாததாயிருத்தல்வேண்டும். இப்படியிருந்தால், அசுத்தவாயு அணுகாது.

அவ்வக்காலத்துக்கும் தேசத்துக்கும் இயையாதனவும், நோய் செய்வனவும், சாரமில்லாதனவுமாகிய உணவுகளை உண்ணலாகாது. உண்ட உணவு சீரணமாகுமுன் உண்ணலாகாது. அழுகின பழங்கள், பழங்கறிகள், ஊசின அன்னம் என்னும் இவைகள் நோயை உண்டுபண்ணும். பழைமித்து புசிக்கவேண்டின், மோருடன் அல்லது நீராகாரத்துடன் ஊறுகாய் சேர்த்துப் புசிப்பது நல்லது. பழங்கறிகளோடு பழையது புசித்தால், மந்தமும் சோம்பலும் உண்டாகும். தாகத்துக்கு உட்கொள்ளும் சலம் அழுக்கில்லாத தெளிந்த சலமாயிருத்தல் வேண்டும். கலங்கல் நீராயிருந்தால் அதை வெந்நீராக்கி ஆறவைத்து, அல்லது வேறுவிதமாகிய சுத்திகள் செய்தாவது தெளியச்செய்து, பானம் பண்ணல்வேண்டும். அடிக்கடி சலபானம் பண்ணலாகாது.

கை கால் முதலிய அவயவங்களிலே அழுக்கு ஏறுதபடி உடம்பை நன்றாகத் தேய்த்துச் சுத்தமான சலத்திலே ஸ்நானம் பண்ணுதலும், அழுக்கில்லாததும் தோய்த்துலர்ந்ததுமாகிய வஸ்திரந் தரித்தலும், பற்களை நன்றாகத் தேய்த்து நாக்கை வழித்து வாய் கொப்பளித்தலும், எச்சில் மல சல முதலியவைகளைத் தீண்டினுற் கைகால்களை நன்றாகச் சுத்தி செய்து கொள்ளுதலும், தீண்டத்தகாத ஈனசாதியாரையும் ஆசௌசமுடையவரையுந் தீண்டாமையும், அருவருக்கத்தக்க உணவுகளை உண்ணாமையும், வீடு படுக்கை உட்காருமிடம் ஆசனம் என்னும் இவைகளைச் சுத்தமுடையனவாக வைத்திருத்தலும் சுசியுடைமையாம். சரீரத்துக்கு ஆரோக்கியத்தையும், மனசுக்கு இதத்தையும், பார்ப்பவர்களுக்குப் பிரீதியையும் உண்டாக்குவது சுசியுடைமை, இதையே நம்மவர்கள் ஆசாரம் என்று சொல்லுவது.

நாடோறும் உடம்பு வேர்த்துக் களைக்கும்படி வேலை செய்தலும், சுத்தவாயு உள்ள இடங்களிலே ஓடி விளையாடுத

னும், குதிரையேற்றமாயினும் சிலம்பமாயினும் செய்து கொண்டு வருதலும், தேக சௌக்கியத்துக்கு ஏதுவாகும். தேகப்பயிற்சியை ஒருநாட்செய்து ஒரு நாள் விட்டுவிடாமல் ஒழுங்காகச் செய்துகொண்டு வருவது உத்தமம். பாவிக்கப் படாத ஆயுதங்களும் யந்திரங்களும் கறையேறிப் பழுதாதல் போல, அப்பியாசஞ் செய்யாத தேகம் இரத்தங் கெட்டுப் பழுதுபடும்.

இன்னும் உரிய காலங்களிலே எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதலும், க்ஷௌரஞ் செய்துகொள்ளுதலும் பேதி மருந்து வமனமருந்து உட்கொள்ளுதல்களும் சரீரசௌக்கி யத்துக்கு ஏதுவாவனவாம்.

## ௩௮. யாக்கை நிலையாமை.

ஆன்மாக்களாகிய எங்களுக்கு இந்த மனிதசரீரம் எதன்பொருட்டுக் கடவுளாற் கொடுக்கப்பட்டது என்பதை யும், இது எவ்வியல்பு உள்ளது என்பதையும் நாம் யோசித் தல்வேண்டும். நாம் கல்விகற்றுத் தருமநெறியினாலே பொரு ளைத் தேடி வறியவர்களுக்குக் கொடுத்து நாமும் மனைவி மக் கள் முதலிய சுற்றத்தார்களோடு உண்டுடுத்து வாழ்தற்கும், புகழ் புண்ணியங்களைச் செய்தற்கும், எவ்வுயிர்களிடத்தும் அன்புடையர்களாய் மனம்வாக்குக் காயங்களினாலே தம்மை வழிபட்டு நல்லகதியை அடைதற்கும், ஆகவே கடவுள் மனித சரீரத்தை நமக்குத் தந்தருளினார்.

கடவுளையும், புண்ணிய பாவங்களையும், அவைகளின் பயன்களாகிய சுகதுக்கங்களையும் பகுத்தறியும் அறிவு மனிதர் களிடத்து இருத்தலால், அஃதில்லாத விலங்கு பறவை முத லிய பிறப்புக்களிலும் மனிதப்பிறப்பு மிக உயர்ந்தது. நாம் கீழுள்ள பிறவிகளையெல்லாங் கடந்து இம்மனிதப்பிறப்பை

அடைவது மிகுந்த அருமை. இந்த அருமையாகிய மனித சரீரமுமோ அழிவுள்ளது. ஆதலினால், இது உள்ள பொழுதே இதனாலே தேடற்பாலனவாகிய கல்விசெல்வங்களையும் புகழ் புண்ணியங்களையுந் தேடிக்கொள்ளவேண்டியது அத்தியாவசியகமாம்.

பலவித செல்வங்களையும் பெற்று அநுபவித்துக்கொண்டிருக்கும்பொழுதே, மனிதர்களுக்கு மூப்பும் மரண வேதனையும் வருகின்றன. இவைகளோடு நோயும் வந்து சேர்ந்தால் இவர்கள் படும் பாட்டைச் சொல்லவும் வேண்டுமா! அப்பொழுது, பகுத்தறிவுள்ள மனிதர்கள் செய்வன இவை தவிர்வன இவை என்று அறியாது, பிறருடைய சகாயத்தை விரும்பி, மிகுந்த வருத்தப்படுகின்றார்களே! மனைவி மைந்தர் முதலாயினோர் செய்யுஞ் சகாயங்கள் தாமும் அத்துயரத்தைத் தாங்க வல்லனவா! இல்லை இல்லை. இவ்வுடம்பின் நிலையாமையை நினைக்கும்பொழுதே நமக்கு ஏக்கம் உண்டாகின்றது. 'நேற்றைக்கு இருந்தான் இன்றைக்கு இறந்தான்' என்று கேட்டவுடன் மனம் நடுங்குகின்றது. நேற்று மணமகன் இன்று பிணமகன் ஆதலையும் எங்கள் கண்களே காண்கின்றன. எத்தனையோ பெரிய அரசர்களுடைய சரித்திரங்களைக் கேட்டிருக்கின்றோம்; எத்தனையோ பெரிய வித்துவான்களுடைய நூல்களைப் படிக்கின்றோம். இவர்கள் எல்லாரும் இறந்தவர்களேயன்றி உயிரோடிருந்தவர் ஒருவரும் இலர்.

இப்படி இந்த உடம்பு அநித்தியமும் துக்கமயமுமாயிருத்தலாலும், இதனாலன்றி வேறொன்றினாலும், நமக்கு ஈடேற்றம் இல்லாமையினாலும், யாவரும் இவ்வுடம்பு உள்ள பொழுதே கல்வி செல்வங்களையும், அவற்றினாலே புகழ்புண்ணியங்களையும், சம்பாதித்தல்வேண்டும். கல்வி செல்வங்களைச் சம்பாதிக்கும்போது, இறப்பில்லாதவர்கள் போலவும், தருமத்தைச் செய்யும்போது யமன் கையில் அகப்பட்டுக் கொண்ட

வர்கள் போலவும், எண்ணுதல் வேண்டும். இந்த நினைவிருந்தால் வாழ்நாள் வீணாகமாட்டாது; நிலையில்லாத மனித சரீரத்தாற் பயனை அடைந்தவரும் இவரேயாவர்.

---

## நக. சற்புத்திரர்.

சிசிலி என்னும் தீவிலே எட்னு என்கின்ற பெயருள்ள ஓர் எரிமலை இருக்கின்றது. சிலகாலங்களில் அதன் சிகரங்களிலிருந்து அக்கினி பொங்கி அதன் சாரலிலே பல திசைகளிலுஞ் சிந்துவது வழக்கம். ஒருகாலத்திலே, அந்த மலை மிகவும் அதிகமாக அக்கினியைக் கக்கிற்று. அப்போது, அம்மலையின் பக்கங்களிலுள்ள ஊர்களிலிருந்த சனங்கள் தங்கள் வீடுகளில் அந்த நெருப்புப் பற்றினபடியால், தங்கள் பொருள்களில் விலையேறப்பெற்ற சிற்சில பொருள்களை மாத்திரம் தங்களால் ஆனவரையில் எடுத்துக்கொண்டு, உயிர்தப்பி ஓடினார்கள். அவர்களுள், செல்வர்களாகிய இரண்டு பிள்ளைகள், தங்கள் திரவியங்களிற் சிலவற்றை மாத்திரம் எடுத்துக்கொண்டு ஓடினார்கள். அவர்களுடைய பிதாவும் மாதாவும் முதிர்ந்த வயசினர் ஆதலால், தங்கள் பிள்ளைகளோடு ஓடித் தப்பமுடியாதவர்களாய், அவர்களுக்குப் பின்னே மெல்ல மெல்ல நடந்து போனார்கள். அதுகண்ட பிள்ளைகள் இருவரும், ‘நம்மைப் பெற்று வளர்த்த பிதாமாதாக்களைக் காட்டிலும் இந்தத் திரவியங்கள் நமக்குப் பெரியனவா! நம்முடைய ஆஸ்திகளெல்லாம் போனாலும் போகட்டும்; பிதாமாதாக்களை இரக்ஷிப்பதே நமக்குக் கடமை’ என்று தங்களுள்ளே ஆலோசனைசெய்துகொண்டு, கையிலெடுத்த பொருள்களை எறிந்துவிட்டு, தனித்தனி தாயையும் தகப்பனையும் தூக்கிக்கொண்டு, அந்த நெருப்புக்கு ஒருவாறு தப்பி ஓடிச்சென்று, ஒரு சௌக்கியமான இடத்தைச் சேர்ந்தார்கள்.

'தந்தை தாய் பேண்' என்னும் நீதிமொழியை அநுசரித்து, இந்தப் பிள்ளைகள் பிதாமாதாக்களைச் சுமந்துகொண்டு போன வழியானது 'சற்புத்திர மார்க்கம்' என்று சொல்லப்பட்டுப், பிள்ளைகளுடைய நீதியாகிய அறிவொழுக்கங்களை இன்றும் வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றது.

---

## ௩0. ஒட்டகம்.

ஒட்டகம், புல் பூண்டு விருக்ஷங்கள் ஒன்றுமில்லாத பாலை நிலங்களிலே பாரஞ் சுமந்துகொண்டு நெடுந்தூரம் பயணம் பண்ணக்கூடிய மிருகம். இதனால், அராபியர்கள் ஒட்டகத்தைப் பாலைநிலக் கப்பல் என்பர். அது ஆயிரம் இறாத்தல் வரையிலுமுள்ள பாரத்தைச் சுமக்கும். ஒரு நாளுக்கு வேண்டிய உணவை ஒருமணி நேரத்திலே தின்று வைத்துக்கொள்ளும். அந்த இரை சீக்கிரம் சீரணிக்கிறதில்லை. அது தண்ணீர் கிடைக்கிற இடத்திலே வேண்டுமட்டும் குடித்து வைத்துக்கொண்டு, நெடுநாளைக்குத் தண்ணீர் குடியாமல் வழி நடக்கும். கடினமாக நடந்தால், ஒரு நாளைக்குத் தொண்ணூறு மைல் தூரத்துக்கு மேலும் நடக்கும். அதன் கால்கள் வெப்பமான மணல் நிலங்களிலும் கல் நிலங்களிலும் நடப்பதற்கு ஏற்றவைகள். காற்றினால் எடுபட்டுவரும் மணல் உட்புகாமல், அது தன் மூக்குத் துவாரத்தை மூடிக்கொள்ளும்.

ஒட்டகம் அவலக்ஷணமான மிருகம். பிடர் வரையில் ஆறடியுயரம் வளரும். அதன் தலை சிறுத்தும் கழுத்து நீண்டு வளைந்துமிருக்கும். சில சாதி ஒட்டகங்களுக்கு முதுகில் ஒரு திமிலும், சில சாதி ஒட்டகங்களுக்கு இரண்டு திமிலும் உண்டு. ஒட்டகங்கள் தாவரவுணவாற் சீவிக்கும். முள்ளுள்ள பூண்டுகளையும் கசப்புள்ள வேப்பிலை முதலிய இலைகளையும் பிரீதியாகத் தின்னும்; தித்திப்புள்ள இலைகளைத் தின்பதே

யில்லை. அராபியாவில் ஒட்டகங்கள் அதிகமாக உண்டு. அத் தேசத்தார்கள் அவைகளை அதிக பிரீதியாகக் காப்பாற்றி, அவைகளினால் பலவித நன்மைகளையும் அடைகின்றார்கள். இந்தியாவிலும் சிற்சில இடங்களில் ஒட்டகங்கள் உண்டு.

---

## ௪க. செய்ந்நன்றிகொன்றவர் கெடுவர்.

ஒருநாள் ஒரு வனத்திலே நான்கு புறத்திலும் தீப்பற்றி எரிகின்ற ஒரு புதரினுள் அகப்பட்ட பாம்பு, அதினின்றுந் தப்ப வழியில்லாமல், மிக வருத்தப்பட்டுக்கொண்டு கிடந்தது. அப்பொழுது ஒரு வர்த்தகன் அந்த வழியே போனான். பாம்பு அவனைப் பார்த்து, 'ஐயா என்னை இந்த ஆபத்தினின்றுங் காப்பாற்று. உனக்கு மிகுந்த புண்ணியம் உண்டாகும்' என்றது. அதற்கு அவன் 'நீ விஷமுள்ள ஜந்து உனக்கு நான் நன்றி செய்தால் நீ எனக்குப் பின் தீமை செய்வாய்' என்றான். பாம்பு 'என்னுயிரைத் தப்புவிக்கிற உனக்குத் தீமை செய்வேனோ? பயப்படாதே என்னுயிரைக் காப்பாற்றிவை என்றது. வர்த்தகன் அதற்கிரங்கித், தான் வைத்திருந்த பையில் ஒரு கயிற்றைக் கட்டி, அதை ஒரு கழியிலே மாட்டிப் புதரினுள் விட்டு, அதனுள் நுழைந்த பாம்பை எடுத்து, வெளியில் விட்டு நெருப்பினின்றும் காப்பாற்றினான்.

துட்டகுணமுள்ள பாம்பு, தன்னைப் பிழைப்பித்த நன்றியை மறந்து, அவனைக் கடிக்கப்போயிற்று. அவன் மிகுந்த அச்சமும் ஆச்சரியமும் அடைந்து, 'நீ ஏன் இப்படி அநீதி செய்ய வருகிறாய்' என்றான். பாம்பு 'நீ எனக்கு என்ன உதவி செய்தாலும் சரி, உபகாரிகளைக் கொல்லுவது எங்கள் வழக்கம் மனுடர்கள் எங்களுக்குச் சத்துருக்கள். ஆதலால் நான் உன்னைக் கடிக்காமல் விடமாட்டேன்' என்று சொல்லிற்று. அவன் பலவித உபாயங்கள் செய்தும், பாம்பு அவனை

யில்லை. அராபியாவில் ஒட்டகங்கள் அதிகமாக உண்டு. தேசத்தார்கள் அவைகளை அதிக பிரீதியாகக் காப்பாற்றி, அவைகளினால் பலவித நன்மைகளையும் அடைகின்றார்கள். இந்தியாவிலும் சிற்சில இடங்களில் ஒட்டகங்கள் உண்டு.

---

## ௬௧. செய்ந்நன்றிகொன்றவர் கெடுவர்.

ஒருநாள் ஒரு வனத்திலே நான்கு புறத்திலும் தீப்பற்றி எரிகின்ற ஒரு புதரினுள் அகப்பட்ட பாம்பு, அதினின்றுந் தப்ப வழியில்லாமல், மிக வருத்தப்பட்டுக்கொண்டு கிடந்தது. அப்பொழுது ஒரு வர்த்தகன் அந்த வழியே போனான். பாம்பு அவனைப் பார்த்து, 'ஐயா என்னை இந்த ஆபத்தினின்றுங் காப்பாற்று. உனக்கு மிகுந்த புண்ணியம் உண்டாகும்' என்றது. அதற்கு அவன் 'நீ விஷமுள்ள ஜந்து உனக்கு நான் நன்றி செய்தால் நீ எனக்குப் பின் தீமை செய்வாய்' என்றான். பாம்பு 'என்னுயிரைத் தப்புவிக்கிற உனக்குத் தீமை செய்வேனோ? பயப்படாதே என்னுயிரைக் காப்பாற்றிவை' என்றது. வர்த்தகன் அதற்கிரங்கித், தான் வைத்திருந்த பையில் ஒரு கயிற்றைக் கட்டி, அதை ஒரு கழியிலே மாட்டிப் புதரினுள் விட்டு, அதனுள் நுழைந்த பாம்பை எடுத்து, வெளியில் விட்டு நெருப்பினின்றும் காப்பாற்றினான்.

துட்டகுணமுள்ள பாம்பு, தன்னைப் பிழைப்பித்த நன்றியை மறந்து, அவனைக் கடிக்கப்போயிற்று. அவன் மிகுந்த அச்சமும் ஆச்சரியமும் அடைந்து, 'நீ ஏன் இப்படி அநீதி செய்ய வருகிறாய்' என்றான். பாம்பு 'நீ எனக்கு என்ன உதவி செய்தாலும் சரி, உபகாரிகளைக் கொல்லுவது எங்கள் வழக்கம் மனுடர்கள் எங்களுக்குச் சத்துருக்கள். ஆதலால் நான் உன்னைக் கடிக்காமல் விடமாட்டேன்' என்று சொல்லிற்று. அவன் பலவித உபாயங்கள் செய்தும், பாம்பு அவனை

சிறந்தவனாயினான். மூத்தவன் தான் வைத்திருந்த செல்வதத்தி னாலே மேன்மேலும் செருக்கும் அகங்காரமும் உள்ளவனாய் கல்வியையும் நல்லொழுக்கத்தையும் அவமதித்துத் துட்ட னாயினான்.

இந்த இரண்டு புத்திரர்களும் பிதாவினாலே வேறு வேறு தேசங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். மூத்தவன் தன் பொருள்களையே துணையென்று அவைகளை எடுத்துக்கொண்டு குறித்த தேசத்துக்குப் போய்த், தன் மனம்போனவாறே பல வீண்செலவுகள் செய்து தான் கொண்டுபோன பொருள் முழு தையும் இழந்து, பழிபாவங்களைத் தேடித் தரித்திரனாகிப், பின் கடன்பட்டு அக்கடனை இறுக்க முடியாமையினாலே சிறைச்சாலையில் அடைபட்டுப், பெருங் கஷ்டத்தை அனுப வித்தான்.

இளையவன் கல்வியே துணையென்று உறுதிசெய்து, தான் படித்த புத்தகங்களை எடுத்துக்கொண்டு குறித்த தேசத்தை. அடைந்து, கல்வியிற் சிறந்த அத்தேசத்தரசனால் உபசரிக்கப் பட்டு, அவன் தன் மகளை விவாகஞ் செய்துகொடுக்கச் சில காலம் அங்கிருந்து, பின்பு தன் மனைவியோடும் அவன் கொடு த்த அளவிறந்த திரவியங்களோடும் தன் பட்டணத்தை அடைந்தான். பிதா அவனுடைய நல்வரவினால் மிகுந்த சந் தோஷமடைந்து, தன்னுடைய இராச்சியத்தை அவனுக்கே கொடுத்தான். பிதாவினுடைய அரசுரிமையைப் பெற்ற இளைய குமாரன், தன் தமையன் அந்நிய தேசத்திலே சிறைச் சாலையில் அகப்பட்டிருத்தலைக் கேள்வியுற்று, அவனைச் சிறை யினின்றும், மீட்டு, நீதிகோடாது அரசாண்டு, பெருமகிழ்ச்சி யோடு வாழ்ந்தான். மூத்த குமாரனுக்குரிய அரசுரிமை இளைய குமாரனுக்குக் கிடைத்ததற்குக் காரணங் கல்வியே.

# சகூ. காகிதம்.

காகிதம் கந்தைத் துணிகளினாலும், வைக்கோலினாலும், சிலவகைப் புற்களினாலும், மரத்தின் சோத்தியினாலும் செய்யப்படுகின்றது. முதலில் வைக்கோலினாற் காகிதஞ் செய்யும் விதத்தைக் கண்டுபிடித்தார்கள். இப்பொழுது தடிப்பான காகிதங்களைச் சில மரப்பட்டைகளினாலும், மெல்லிய காகிதங்களைச் சில சருகுகளினாலும், கூந்தற் பனையோலையினாலும், ஒருவித வாழையினாலும் செய்யும் விதங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சீனதேசத்தார் மூங்கிலினால் மிகுந்த மென்மையும் உறுதியுமுள்ள காகிதங்களைச் செய்கிறார்கள்.

கிழிந்த வஸ்திரங்களை வெள்ளையாக்கினபின் சலத்தில் நன்றாக ஊறப்போட்டு, பின்பு அநேக கத்திகள் பொருந்திய ஒரு பெட்டியிலிட்டு, அதனுளிருக்கின்ற கத்திகளுள்ள உருளையைச் சுற்றுவார்கள். அதனால் அக்கந்தைகள் சன்னமாகத் துணிக்கப்பட்டு, பின்னும் நைந்து சலத்தோடு சேர்ந்து குழம்பாகும். அக்குழம்பில் ஒருவித சுண்ணும்பைக் கலந்து மிக வெண்மையுள்ளதாக்கி, ஒரு பெரிய பாத்திரத்திலூற்றிச் சுடச்செய்து, கட்டியாகாமற் கலக்கிக்கொண்டிருப்பார்கள். அப்பொழுது அக்குழம்பு பால்போலிருக்கும். இழைகள் போன்ற மெல்லிய கம்பிகளால் மரச்சட்டத்திற் பின்னியிருக்கும் ஓர் அச்சை அக்குழம்பிற் றோய்த்து, நான்கு புறத்திலும் சமமாக நிறுத்தி மெல்ல அசைத்து எடுத்தால், சலமானது அச்சிறு கம்பிகளின் வழியாய் வழிய அக்குழம்பு நுண்ணிய தகடு போலத் தங்கிவிடும். பின் மரச்சட்டத்தை எடுத்துவிட்டு, சமமாக விரித்திருக்கும் கம்பளி வஸ்திரங்களின்மேல் அதனை விரித்து, அதன்மீது அதே அளவுள்ள வேறொரு வஸ்திரத்தை விரித்து, இப்படி ஒன்றின்மேலொன்றாகப் பலவற்றை அடுக்கி, பாரமான ஒரு யந்திரத்தில் வைத்து அழுத்தி அக்காகிதங்களிலுள்ள சலத்தைப் போக்கி, அதன்பின் வஸ்திரங்களை

எடுத்துவிட்டுப், பின்னும் ஒருவித யந்திரத்தில் வைத்து அழுத்தி, நிழலில் உலரப்போடுவார்கள். மசி ஒற்றுங் காகிதங் களல்லாதவைகளை மசி ஊறுமலிருக்கும்படி ஒருவித பசையிற் றேய்த்து யந்திரங்களில் வைத்து நன்றாய் அழுத்துவார்கள். இதுவே முன்னாளையிற் காகிதம் கையாற் செய்யும் விதம்.

இப்பொழுது, காகிதங்களை நீராவியந்திரங்களினால் மிக இலேசாகவும் நன்றாகவும் சீக்கிரமாகவும் செய்கின்றார்கள். அவைகள் எழுதவும், அச்சிடவும், வேறு பலவித வேலைகளு க்கு உபயோகப்படவுந் தக்கனவாக, பலவித நிறங்களும் அள வும் குணங்களும் உள்ளவைகளாய்ச் செய்யப்படுகின்றன.

---

## ௪௪. ம ழை.

பூமியிலே, கடல் நதி குளம் முதலியவைகளிலுள்ள சலம் சூரிய கிரணங்களினால் வெப்பமடைந்து, கண்ணுக்குத் தோன்றாமல் மிகவும்நுட்பமான ஆவியாய் ஆகாயத்திற்சென்று மேகரூபமாகிப், பின்பு குளிர் உண்டாகும்போது சலமாய்ப், பூமியில் விழுகின்றது. இது மழை என்று சொல்லப்படும். இந்த நீராவி சாதாரணமான வாயுவிலும் பார்க்க இலேசா யிருப்பதினால் மேலே எழும்புகின்றது.

ஒழுகாத ஒரு நல்ல பாத்திரத்திலே சலத்தை நிறைத்து வெய்யிலில் வைக்க, அந்தச் சலம் நாளுக்குநாட் சூரிய வெப் பத்தினாலே குறைந்து வரக்காணுதலால், சூரிய கிரணத்தினாற் பூமியிலுள்ள சலம் நுட்பமான ஆவியாய் மாறுகின்றது என் பதை அறியலாம். ஒரு பாத்திரத்திலே சலத்தை மூடிவைத்து எரித்துச், சலம் கொதித்து ஆவி எழுந்தபின் மூடியைத் திறக்க, அம்மூடியிற் குளிர்ந்த காற்றுப் பட்டவுடன் சலம் வடியக் காணுதலால், நிலத்திலிருந்து சூரிய வெப்பத்தால் நுட்பமான ஆவியாய் ஆகாயத்தில் எழுந்த சலமே குளிர்ந்த போது மழையாய் வீழ்கின்றது என்பதை அறியலாம்.

இப்படிச் சூரிய வெப்பத்தினால் எழுகின்ற நீராவியின் திரட்சி சிறிது குளிர்ந்து, கண்ணுக்குப் புலனாகும்போது அதனை மேகம் என்றும், அது சூரிய வெப்பத்தினாலே கடலி லிருந்து அதிகமாக எழுந்து தடித்துக் கடலோடு சம்பந்தப் பட்டிருந்தால், அதனை மேகம் சமுத்திரத்தைக் குடிக்கிறதென் றும் சொல்வார்கள். மேகங்கள் காற்று வீசுகிற பக்கத்துக்கு ஓடும். அவைகள் பூமியிலிருந்து பெரும்பாலும் இரண்டு அல் லது மூன்று மைல் உயரத்திற் சஞ்சரிக்கும். சூரியனே மழைக் குக் காரணமாயிருந்தாலும், அச்சூரியனைச் சுற்றி ஓடுகிற வெள்ளி முதலிய மற்றைக் கிரகங்களுக்கும் சூரியனுக்குமிருக் கிற சம்பந்தத்தினால், அக்கிரகங்களும் மழைக்குக் காரணமாம்.

உயிர்களுக்கு வேண்டும் உணவுப்பொருள் முதலியவை களை உண்டாக்கிக் கொடுத்துத் தானும் உணவாகி உயிர்களைக் காத்தலாலும், உலகத்திலே தானதருமங்கள் நடைபெற்று வருதற்குத் தான் ஏதுவாயிருத்தலாலும், மழை உயிர்களுக்கு இன்றியமையாததாயிருக்கின்றது. மழையில்லையானால், மலை களிலிருந்து ஆறுகள் பெருகி வருவதும், கிணறுகளில் நீர் ஊறுவதும் குறைந்துபோம். மலைகளிற் பெய்யும் மழைச் சலம் அருவிகளாயும், அவைகளில் நின்று வற்றி ஊற்றுக்களாயும், ஓடி ஒருங்குசேர்ந்து, ஆறாய்ப் பெருகுகிறது.

மழைச்சலம் நிலத்தில் விழுமுன் ஒரே தன்மையாகிய நல்ல குணத்தையுடையதாயிருக்கும். நல்லோர்கள் தீயோர் களுடைய சகவாசத்தினாலே தங்கள் நற்குணம் வேறுபட்டுக் கெடுதல்போல, நல்ல மழைச்சலம் தான் சம்பந்தப்பட்ட நிலத்தின் கெடுதியினாலே கெட்ட சலமாகும்.

---

## ௨௫. குதிரை.

குதிரை மனிதர்களுக்கு உபயோகமாகிய விலங்குகளில் ஒன்று. அது வண்டியிழுக்கவும், ஏறிச்செல்லவும் உதவும். அர

சர்களுக்குரிய நால்வகைச் சேனைகளுள் ஒன்று. அது அழகினு லும், யசமானனுடைய எண்ணத்தை அறியும் அறிவினுலும், வேகத்தினுலும் சிறந்தது. ஓட்டத்தினுலே சீக்கிரத்திற் களைப் படையமாட்டாது. சில சாதிக் குதிரைகள் தமக்குமேல் இருக் கும் ஆளோடு இரண்டு நிமிஷத்தில் ஒரு மைல் தூரம் ஓடும்.

அசுவ நூலிற் சொல்லிய நல்ல இலக்ஷணம் அமையப் பெற்ற குதிரைகள், தம்முடைய யசமானனுக்குச் செல்வம் வெற்றி முதலிய பல நன்மைகளைக் கொடுக்கும். குதிரைகள் அதிக நித்திரைசெய்வதில்லை. பெரும்பாலும் நின்ற நிலையிலே நித்திரைசெய்யும். அவைகள் நிலத்திற் புரண்டெழும்புவதி னுலே தங்கள் சிரமத்தைத் தீர்த்துக்கொள்ளும். பழகின குதி ரைகள் சனக்கூட்டத்திலே சஞ்சரிப்பதிற் பிரீதி யுள்ளவை களாயிருக்கும்.

குதிரைச்சாதிகளில், பெருமையிலும் வேகத்திலுஞ் சிறந் தவைகள் அங்கிலேயதேசத்துக்குதிரைகளும், அராபிதேசத் துக் குதிரைகளும்; இந்தியாவிற் குதிரைகள் அவ்வளவு சிறந் தவைகளல்ல. அநேகம் அங்கிலேய தேசத்துக் குதிரைகள் பந் தய ஓட்டத்துக்குப் பழக்கப்பட்டு, மிக விலைமதிக்கப்படுகின் றன. இந்தியாவிற் குதிரைகள் பாரஞ்சுமக்கவும் உதவுகின்றன.

---

## ௪௬. உலோகங்கள்.

### பொன்.

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என உலோ கங்கள் ஐந்து. இந்த ஐந்தனுள்ளும், பொன் மிகச் சிறந்தது, அது மற்றை உலோகங்களைக் காட்டிலும் கனமும் உறுதியும் ஒளியுமுள்ளது. அதன் நிறம் மஞ்சள் நிறம். அது சில மலைப் பக்கங்களிலும், மலையருவி பாயுமிடங்களிலும், ஆற்றோரங்களி லும், அகப்படுகிறது. அவ்விடங்களில், வெள்ளி, செம்பு முத

யிற் களிம்பு பிடியாது. பொன்னைப்போல வெள்ளியையும் மிக மெல்லிய தகடாகவும், கம்பியாகவும் செய்யலாம்.

வெள்ளியினாலே நாணயங்களும், சில ஆபரணங்களும், சில பாத்திரங்களும் செய்யப்படுகின்றன; அதனாற் சரிகையும் செய்கிறார்கள். வெள்ளி அமெரிக்காக்கண்டத்திலே அதிகமாகவும், ஐரோப்பாக்கண்டத்திற் சொற்பமாகவும் அகப்படுகின்றது.

## செம்பு.

செம்பு சிவப்பு நிறமுள்ள உலோகம். அதிற் களிம்பு அதிகம். களிம்பு விஷத்தன்மையுள்ளது. அதற்குத் துருசு என்று பெயர். செம்புக்குத் தாமிரம் என்றும் பெயர். அது இங்கிலாந்து, ஆபிரிக்கா முதலிய தேசங்களில் ஆகரங்களிலிருந்து அதிகமாக வெட்டியெடுக்கப்படுகிறது. பஞ்சலோகங்களுள்ளும் தாமிரம் மூன்றாவது. மிகுந்த ஓசையுள்ளது. அதை உருக்கி வார்ப்பது கஷ்டம். ஆதலால், செப்புப் பாத்திரங்களைத் தகடுகளாற் செய்வார்கள். வெள்ளியைக் காட்டிலும் செம்பு அதிகமாகவும் இலேசாகவும் அகப்படுகிறபடியால், அதிலும் மிகக்குறைந்த விலைக்கு விலைப்படுகின்றது. ஒரு ரூபா நிறையுள்ள வெள்ளிக்கு ஏறக்குறைய நாற்பது ரூபா நிறையுள்ள தாமிரம் வாங்கலாம்.

தாமிரத்தினாலே விசேஷமாகப் பாத்திரங்களும், பைசா அணா முதலிய நாணகங்களும் செய்யப்படுகின்றன. தாமிர பாத்திரம் நெருப்புக்குக் கெடாது நெடுங்காலம் நிற்கும். செம்பினாலே தகடுகளும் கம்பிகளும் செய்யலாம். செப்புத்தகடு கப்பல்களின் அடிப்பக்கங்களுக்குத் தைக்க உதவும்.

## ஈயம்.

ஈயம் மங்கலான வெண்மை நிறமுள்ள உலோகம். அதை இலேசாக வெட்டலாம். வெட்டினவுடன் அதிக வெண்மை

யாயிருந்தாலும், காற்றுப்பட்டவுடன் அந்நிறம் குறைந்து போம்; அற்ப நெருப்புச்சூட்டினுற் சீக்கிரம் உருகும்.

ஈயம் கனிகளிலிருந்து வெட்டி யெடுக்கப்படும்போது பெரும்பாலும் கந்தகத்தோடும் சிறுபான்மை சொற்ப வெள்ளியோடும் கலந்திருக்கும். அது ஸ்பெயின், இங்கிலாந்து முதலிய இடங்களில் அகப்படுகிறது. அதனுல் தண்ணீர்க்குழாய், துப்பாக்கிக் குண்டு முதலியவற்றைச் செய்கிருர்கள். இது காரீயம் என்று சொல்லப்படும். இதிற் களிம்பு பிடிக்கும். அது விஷத்தன்மையுள்ளது.

இன்னும், வெள்ளீயம் நாகம் முதலிய சில லோகங்களும் உண்டு. பித்தளை செம்புப் பாத்திரங்களுக்குக் களிம்பேருமற் பூசுவது வெள்ளீயம். அது மிகவும் மிருதுவான லோகம். ஆதலால் தனித்துப் பாத்திரங்கள் செய்கிறதில்லை. வெள்ளீயத்தோடு கொஞ்சங் காரீயத்தை அல்லது நாகத்தைச் சேர்த்துப் பாத்திரங்கள் செய்வார்கள். காரீயம் அதிகமாகச் சேர்த்துச் செய்த பாத்திரங்களிற் புளிப்புள்ள போசன பதார்த்தங்களை வைத்துப் பாவிக்கக்கூடாது.

சுத்தமான வெள்ளீயத்தை உருக்கி, அதில் மெல்லிய இருப்புத்தகடுகளைத் தோய்த்தெடுப்பார்கள். இது தகரம் என்று சொல்லப்படும். அந்த ஈயம் தேய்ந்துபோனுல், அல்லது உதிர்ந்துபோனுல், இரும்பு தெரியும்.

நாகம் வெண்மையும் கடினமும் களிம்பேருத குணமுமுள்ள லோகம். அடிக்க அடிக்க நீளும்; ஒடியாது.

## பித்தளை, வெண்கலம்.

இரண்டு பங்கு செம்பும் ஒரு பங்கு நாகமும் சேர்த்து உண்டாக்குவது பித்தளை. அது தனித்த ஒரு உலோகமன்று. அது மஞ்சள் நிறமுள்ளது. அதை இலேசாக உருக்கலாம். செம்பிற்போலப் பித்தளையில் அதிக களிம்பில்லை. அது கட்டி-

ளாகவும் தகடுகளாகவும், கம்பிகளாகவும் உருக்கி வார்க்கப்படுகிறது. பித்தளையினுற் பாத்திரங்களும் குத்துவிளக்கு முதலியவைகளும் செய்யலாம்.

செம்பையும் வெள்ளீயத்தையும் கலந்து வெண்கலம் உண்டாக்கப்படுதலால், அதுவும் தனித்த ஒரு உலோகமன்று. இவ்விரண்டோடு சிறிது நாகமும் சேர்ப்பதுண்டு. வெண்கலத்திற் களிம்பு ஏருது. அதனுல் மணிகளும், சேகண்டிகளும், பாத்திரங்களும், சிற்சில உருவங்களும் செய்யப்படுகின்றன. வெண்கலம் கடின குணமுள்ளது. ஆதலால் அதை அடித்து வேலை செய்தால் உடையும். உருக்கி வார்த்துக் கடையலாம். செம்பு பித்தளைப் பாத்திரங்களைக் காட்டிலும் வெண்கலப்பாத்திரம் சமையலுக்குச் சிறந்தது. பித்தளைப் பாத்திரத்திற்கும் செம்புப் பாத்திரத்திற்கும் ஈயம்பூசிச் சமையல் செய்தல் வேண்டும்.

## இரும்பு.

இரும்பு மற்றை எல்லா உலோகங்களிலும் பார்க்க உறுதியும் உபயோகமும் உள்ளதும், மிகுதியாய் அகப்படக் கூடியதுமான உலோகம். அதற்கு ஒளியில்லை. பொன்னிலிருந்து நிறையில் மிகக் குறைந்தது. ஆயினும், நமக்கு உபயோகப்படுவதிற் பொன்னிலும் விசேஷித்ததாக எண்ணப்படுகிறது. இரும்புக்குக் கரும்பொன் என்றும் பெயர்.

இரும்பு காந்தத்தினுலே இழுக்கப்படும். அதுபெரும்பான்மையும் கனிகளிலிருந்தும், சிறுபான்மை மலையருவி பாயுமிடங்களிலிருந்தும், எடுக்கப்படுகிறது. கனிகளில் வேறு பொருள்களோடு சேர்ந்து கட்டிகளாகவும், அருவி பாயுமிடங்களில் மணலோடு சேர்ந்து துகளாகவும், இருக்கும். அவைகளை உருக்கிச் சலாகைகளாக்குவார்கள்.

இரும்போடு மிகச் சொற்பமான நிலக்கரி சேர்த்து உருக்கிஞல் அது உருக்காகும். இரும்போடு அதிக நிலக்கரி சேர்த்து

உருக்கினால் அது தண்டவாளம் ஆகும். இரும்பு பூமியில் அநேக இடங்களிலிருந்து அதிகமாக எடுக்கப்படுகிறது. இங்கிலாந்து தேசத்தில் மிக அதிகமாக அகப்படுகிறது.

இரும்பினாலே பலவித யந்திரங்களும், போர்வீரர்களுக்குரிய ஆயுதங்களும், மண்வெட்டி முதலிய கருவிகளும், பூட்டு சாவி ஆணிகளும், இன்னும் அநேகவிதமான ஆயுதங்களும், சில பாத்திரங்களும் செய்யப்படுகின்றன. தண்டவாளத்தினாலே உத்திரம் தூண் முதலிய வீட்டுச்சாமான்களைச் செய்கிறார்கள். இரும்பு, பொன் முதலிய சில உலோகங்களை முறைப்படி சிந்தூரஞ் செய்து, அவைகளை மருந்தாக உபயோகிக்கிறார்கள்.

# மாணிக்கவாசகசுவாமிகள்.

இவர், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனார் சுந்தர மூர்த்தி நாயனார் மாணிக்க வாசக சுவாமிகள் என்னும் சைவ சமயாசாரியர் நால்வருள் ஒருவர். இவர் அருளிச்செய்த திருவாசகம் திருக்கோவையார் என்னும் அருட்பாக்கள், ஓதுபவர்களுக்குச் சிவபத்தி வைராக்கிய ஞானங்களைக் கொடுத்தலில் உயர்வொப்பில்லாதன. இவர் செய்த அற்புதங்கள் சைவசமயத்தின் உண்மையை விளக்குவன. இவருக்குத் திருவாதவூரர் என்றும் பெயர்.

மாணிக்க வாசக சுவாமிகள் பாண்டிநாட்டிலுள்ள திருவாதவூரிலே, அமாத்தியப் பிராமண குலத்திலே, திருவவதாரஞ்செய்து, சமஸ்த சாஸ்திரங்களையும் இளமையிலே கற்றுணர்ந்து, அரிமர்த்தனபாண்டியனுக்கு முதன் மந்திரியாயிருந்தார். இருக்குநாளிலே, பிரபஞ்ச வைராக்கியம் உண்டாகப் பெற்று, ஞானாசாரியரைத் தேடுவாராயினார். அப்பொழுது, பாண்டியன் அளவிறந்த திரவியங்களைக் கொடுத்துக் குதிரைகள் வாங்கிவரும்படி அனுப்பினான். மந்திரியார் திரவியங்களைக் கொண்டு திருப்பெருந்துறையை அடைந்து, அங்கே ஞானாசாரியரை எதிர்ப்பட்டு ஞானோபதேசம் பெற்றுத், திரவியங்கள் எல்லாவற்றையும் திருக்கோயிற் றிருப்பணிக்கும் சிவனடியார்களுக்கும் செலவு செய்து, சிவவேடம் பூண்டு அத்தலத்தில் வசித்தார்.

இதனை அறிந்த பாண்டியன் குதிரைகளைக் கொண்டு வரும்படி, மாணிக்கவாசக சுவாமிகளுக்கு ஓலை அனுப்பினான்.

அவர் அதனைத் தமது ஞானாசாரியராகிய கடவுளுக்குக் காட்ட, அக்கடவுள் 'ஆவணி மூலநக்ஷத்திரத்திலன்று குதிரைகளைப் பாண்டியனுக்குக் கொடுப்போம். நீ போய்க் கவலையின்றிப் பாண்டியனிடத்தில் இதனைத் தெரிவிப்பாய்' என்று அருள்செய்தார். நாயனார் மதுரைக்குப் போய், அவ்வாறே சொல்ல, அரசன் மகிழ்ந்து, குதிரைகளின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

இருக்கு நாளில், மந்திரிகளில் ஒருவன் 'உம்முடைய முதன் மந்திரியார் நீர் குதிரை வாங்கும்படி கொடுத்த திரவியங்க ளெல்லாவற்றையும் சிவனடியார்களுக்குச் செலவழித்து விட்டுக் குதிரை வாங்காது உமக்குப்பொய் கூறினர்' என்று அரசனுக்குச் சொல்ல, அரசன் நாயனார்மீது கோபங்கொண்டு, தான்கொடுத்த பொருள்களெல்லாவற்றையும் அவரைத் தண்டஞ்செய்து வாங்கும்படி, தண்டலாளருக்குக் கற்பித்தான்.

அவர்கள் அவரை வெய்யிலில் நிறுத்தித் தண்டனை செய்தார்கள். சிவபெருமானிடத்தே பதிந்த உறுதியாகிய மெய்யன்புடைய மாணிக்கவாசக சுவாமிகள், அத்தண்டனைகளாற் சிறிதும் வருத்தமுறாது பாண்டியனுக்குக் குதிரைகளைக் கொடுக்கும்படி, கடவுளைப் பிரார்த்தித்தார்.

பரமசிவன் நரிகளைக் குதிரைகளாகவும், தேவர்களைக் குதிரை வீரர்களாகவும் வரும்படிசெய்து, தாம் குதிரை வீரர்களுக்குத் தலைவராகி, வேதமாகிய குதிரையின்மேலேறிக்கொண்டு, மதுரையை அடைந்தார். குதிரைகளின் வரவையறிந்த பாண்டியன் மகிழ்ந்து, மாணிக்கவாசக சுவாமிகளை அழைத்து வரிசைகள் செய்து மகிழ்வித்து, அவரோடு வீதியில் வந்து, குதிரை வீரர்களுக்குத் தலைவராய் வந்த கடவுளுடைய திருக்கோலத்தைத் தரிசித்துக், குதிரை ஏற்றத்தைப் பார்த்து, அவைகளைக் கயிறு மாறி வாங்கிப் பந்தியிற் சேர்ப்பித்து, குதிரைவீரருக்கும் மாணிக்கவாசக சுவாமிக

ளுக்கும் விடை கொடுத்தனுப்பித், தானும் மாளிகையை அடைந்தான். அன்றிரவு அக்குதிரைகளெல்லாம் நரிகளாகி, அரசனுக்கும் நகரத்துக்கும் மிகுந்த ஆகுலத்தைச் செய்தன. பாண்டியன் அதிக கோபங்கொண்டு, பின்னும் மாணிக்கவாசக சுவாமிகளைச் சிறையில்வைத்துத் துன்பஞ்செய்விக்க, அவர் சிவபெருமானை நினைந்து இரங்கினர்.

அருட்கடலாகிய சிவபெருமான், மாணிக்கவாசகசுவாமிகளுடைய கவலையை ஒழிக்கத் திருவுளங்கொண்டு, கங்கையை விடுப்ப, அது வைகை நதியாய், மதுரையை அழிப்பது போலப் பெருகிற்று. பாண்டியன் பலவாறு வழிபட்டும், அது மேன்மேலும் பெருகி வருதலைக் கண்டு, மெய்யன்பராகிய மாணிக்கவாசக சுவாமிகளைத் தான் சிறை வைத்தமையால் இது பெருகிவந்தது என்று எண்ணி, அவரைச் சிறையினின்று விடுவித்து, நான் உம்மைத் தண்டித்தது தவறு, என்று கூறி, அவர் உவப்பன் செய்து, வைகைக்கரையை அடைப்பிக்கும்படி அவரை அனுப்பினன். பாண்டியன் அன்புரைகள் கூறியபோது விருப்பும் கோபித்தபோது வெறுப்பும் இல்லாத மாணிக்கவாசக சுவாமிகள் அந்நதி மதுரையை அழியாதிருக்கும்படி சிவபெருமானை வேண்ட, அது சிறிது பெருக்கடங்குதலும், அவர் அதன் கரையை அடைக்கும்படி அந்நகரத்தார்க்குக் கூறுசெய்து கொடுப்பித்தார். அவர்கள் அடைப்பாராயினர்கள்.

சிவபத்தியிற் சிறந்தவளும் வந்தியும் ஆகிய செம்மனச் செல்வி என்னும் ஒரு பிட்டு வாணிச்சியின் பங்கு மாத்திரம் அடைபடாமையினால், அரசனுடைய ஏவலாளர்கள் அவளை அடைக்கும்படி நெருக்க, அவள் தன் பிட்டைக் கூலியாகக் கொண்டு தன் பங்கை அடைப்பாரில்லாமையையும் தனக்கு ஒரு துணையுமில்லாமையையும் சோமசுந்தரக் கடவுளுடைய சந்நிதியிலே விண்ணப்பஞ்செய்து, அழுதாள். அடியார்க்கெளி

[அந்நேரம்] கடவுள், தாமே அவளுக்குக் கூலியாளாக வந்து, அவள் கொடுத்த பிட்டை வாங்கித் திருவமுது செய்து, கரையை அடைப்பவர்போலக் காட்டி அதனை அடையாது, பல திருவிளையாடல்களைச் செய்தார். வந்தியின் கரை அடைபடாமையால், வேலையாளாகிய கடவுளை அரசன் பிரம்பினால் அடித்தான். கடவுள் உடனே மறைந்துவிட்டார். அவ்வடி பாண்டியன்மேலும், மாணிக்கவாசக சுவாமிகள் மேலும், மற்றைச் சரம் அசரமாகிய ஆன்மாக்கள் மேலும் பட்டது. 'கடவுள் அடியேனை ஆட்கொள்ளும்படி கூலியாளாகவும் எழுந்தருளினரே!' என்று அவருடைய அருட்செயல்களை எடுத்துச் சொல்லி மாணிக்கவாசகசுவாமிகள் பலவாறு இரங்கினார். பாண்டியன் இவைகளெல்லாம் சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாடல்கள் என அறிந்து, மாணிக்கவாசக சுவாமிகளை அடைந்து, 'தேவரீரை அறியாது அடியேன் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்து இப்பூமியைத் தேவரீரே ஆண்டு அடியேனுக்கு அருள் செய்தல்வேண்டும்' என்று பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அவர் 'என்னைத் திருப்பெருந்துறைக்குச் செல்ல விடுப்பதே நீர் இவ்வுலக அரசாட்சியைத் தருதல் போலும்' என்று அரசனுக்குச் சொல்லி விடைபெற்றுக் கொண்டு, தவவேடம் பூண்டு, விரைந்து திருப்பெருந்துறையை அடைந்து, தமக்கு ஞானோபதேசஞ் செய்தருளிய கடவுளை வணங்கி, அங்குள்ள அடியார் கூட்டத்தோடிருந்தார்.

ஆசாரியராகிய கடவுள் 'நாம் கைலாசத்துக்குப் போதல் வேண்டும்; நீங்கள் நம்முடைய பாதங்களைப் பூசித்துக்கொண்டு இங்கிருங்கள். இருக்குநாளில் இத்தடாகத்திலே ஒரு சோதி தோன்றும். அதில் வீழ்ந்து நம்மிடத்துக்கு வாருங்கள்' என்று அங்கே இருக்கின்ற தம்முடைய அடியார்களுக்குக் கட்டளையிட்டு நீங்கினார். மாணிக்கவாசக சுவாமிகள் பிரிவாற்றாதவராய்ப் பின்றொடர்ந்தார். கடவுள் அவரை

நோக்கி, 'அன்பனே, நீ தடாகத்திலே தோன்றும் சோதியில் வீழாமல், அவ்விடத்தை நீங்கி, உத்தரகோசமங்கையை அடைந்து, நம்மை வணங்கி இஷ்டசித்திகளைப் பெற்று, திருக்கழுக்குன்று முதலாகிய தலங்களுக்குப் போய், அங்கங்கே நம்முடைய இந்த ஆசாரிய மூர்த்தத்தைத் தரிசித்துச், சிதம்பரத்தை அடைந்து, புத்தரை வாதில் வென்று, அத்தலத்திலே நம்முடைய திருவடியை அடைவாய்' என்று அருளிச்செய்து, சிதம்பரத்தின் பெருமைகளையும் உபதேசித்து, மறைந்தருளினார்.

மாணிக்கவாசக சுவாமிகள், கடவுள் கற்பித்தருளியவாறே, அவருடைய திருவடிகளை அடியார்களோடு குருந்தமரத்தினடியிலே பூசித்து, 'நமச்சிவாய வாழ்க' என்பதை முதலாகவுடைய சிவபுராணம் முதலிய திருவாசகங்களைப் பாடி, அங்கே சிவயோகத்தில் இருந்தார். இருக்கு நாளிலே, சிவபெருமான் அருளிச்செய்தபடி பொய்கையிலே சோதி தோன்றுதலும், அடியார்கள் எல்லாரும் அதில் வீழ்ந்து சிவபெருமானை அடைந்தார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் 'அடியேனை எங்கே விட்டு ஒளித்தீர்' என்று அவருடைய பிரிவை நினைத்துப் புலம்பி, பொய்கைக் கரையை நீங்கி, குருந்தமர நிழலிலே ஆசாரியருடைய திருவடிகளை வணங்கிச், சிவபெருமான் முன் அருளிச் செய்ததை நினைந்து, திருவுத்தரகோசமங்கை, திருவிடைமருதூர், திருவாரூர், சீர்காழி, திருமுதுகுன்று, அருணாசலம், காஞ்சீபுரம், திருக்கழுக்குன்று முதலிய தலங்களை வணங்கி, அத்தலங்கடோறும் திருவாசகம் பாடினார். அதன்பின் சிதம்பரத்தை அடைந்து, நடேசபெருமானைத் தெவிட்டாத பேரன்போடு தரிசித்து வணங்கிப் பல திருவாசகங்களைப் பாடி, ஆனந்தபரவசராய்ச் சந்நிதானத்தை அருமையாக நீங்கி, அத்தலத்தின் புறவெல்லையிலே வீற்றிருந்தார்.

இவர் சிதம்பரத்தில் வசிக்கு நாளிலே, ஒரு சிவபத்தர் சோழதேசத்திலிருந்து ஈழதேசத்துக்குப் போயினர். அவர் போய் உட்காருமிடந்தோறும் 'பொன்னம் பலம் வாழ்க' என்று சொல்லுவார். அதைக் கேள்வியுற்ற பௌத்தகுரு கோபங்கொண்டவனாய் நான் போய் 'அப்பொன்னம்பலத்தைப் பௌத்தாலயமாக்குவேன்' என்று சொல்லிச் சிதம்பரத்துக்குப் புறப்பட்டுப் போனன். ஈழதேசத்தரசனும் ஊமையாயிருந்த தன் மகளையும் அழைத்துக்கொண்டு, சிதம்பரத்துக்குப் போனன். குரு சிதம்பரத்தை அடைந்து, தில்லைவாழந்தணர்களை வாதத்துக் கழைத்தான். அவர்கள் அதற்குடன்பட்டு, இந்தச் சமாசாரத்தைச் சோழ ராஜாவுக்குந் தெரிவித்து, 'யாரைக் கொண்டு இவர்களோடு வாதஞ் செய்து வெல்வோம்' என்னும் எண்ணத்தோடிருந்தார்கள். அன்றிரவு நடேசபெருமான் அவர்களுக்குச் சொப்பனத்திலே தோன்றி, 'இவ்வூரின் புறவெல்லையில் மாணிக்கவாசகனென்னும் நம்முடைய அன்பன் இருக்கின்றான். அவன் புத்தரை வாதில் வெல்வான். நீங்கள் அவனைக் கொண்டு புத்தரோடு வாது செய்வித்து வெல்லுங்கள்' என்று அருளிச் செய்தார். தில்லைவாழந்தணர்கள் தாம் கண்ட சொப்பனத்தை மாணிக்கவாசக சுவாமிகளுக்குத் தெரிவித்து, அவரைக் கோயிலில் அழைத்துக்கொண்டு வந்தார்கள். அந்தச் சமயத்தில், சோழராசனும் அங்கே வந்து, மாணிக்கவாசக சுவாமிகளை வணங்கி, சுவாமீ 'புத்தர்களை வாதில் வென்று சிவமதஸ்தாபனஞ் செய்தருளவேண்டும்' என்று பிரார்த்தித்தான். நாயனர் அதற்குடன்பட்டுப், புத்தர்களோடு வாதஞ்செய்து, அவர்களுடைய குதர்க்கவுரைகளினலே கோபங்கொண்டு, அவர்களை ஊமைகளாக்கினர். அதுகண்ட புத்தராஜன் பிறவி தொடுத்து ஊமையாயிருந்த தன் மகளுடைய ஊமையைத் தீர்த்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அவள்மேற் கிருபாநோக்கஞ் செய்து ஊமையை நீக்கிப், புத்தர்கள் முன் வினவிய வினக்

இவர் சிதம்பரத்தில் வசிக்கு நாளிலே, ஒரு சிவபத்தர் சோழதேசத்திலிருந்து ஈழதேசத்துக்குப் போயினர். அவர் போய் உட்காருமிடந்தோறும் 'பொன்னம் பலம் வாழ்க' என்று சொல்லுவார். அதைக் கேள்வியுற்ற பௌத்தகுரு கோபங்கொண்டவனாய் நான் போய் 'அப்பொன்னம்பலத்தைப் பௌத்தாலயமாக்குவேன்' என்று சொல்லிச் சிதம்பரத்துக்குப் புறப்பட்டுப் போனான். ஈழதேசத்தரசனும் ஊமையாயிருந்த தன் மகளையும் அழைத்துக்கொண்டு, சிதம்பரத்துக்குப் போனான். குரு சிதம்பரத்தை அடைந்து, தில்லை வாழந்தணர்களை வாதத்துக் கழைத்தான். அவர்கள் அதற் குடன்பட்டு, இந்தச் சமாசாரத்தைச் சோழ ராஜாவுக்குந் தெரிவித்து, 'யாரைக் கொண்டு இவர்களோடு வாதஞ் செய்து வெல்வோம்' என்னும் எண்ணத்தோடிருந்தார்கள். அன்றிரவு நடேசபெருமான் அவர்களுக்குச் சொப்பனத்திலே தோன்றி, 'இவ்வூரின் புறவெல்லையில் மாணிக்க வாசகனென்னும் நம்முடைய அன்பன் இருக்கின்றான். அவன் புத்தரை வாதில் வெல்வான். நீங்கள் அவனைக் கொண்டு புத்தரோடு வாது செய்வித்து வெல்லுங்கள்' என்று அருளிச் செய்தார். தில்லைவாழந்தணர்கள் தாம் கண்ட சொப்பனத்தை மாணிக்கவாசக சுவாமிகளுக்குத் தெரிவித்து, அவரைக் கோயிலில் அழைத்துக்கொண்டு வந்தார்கள். அந்தச் சமயத்தில், சோழராசனும் அங்கே வந்து, மாணிக்கவாசக சுவாமிகளை வணங்கி, சுவாமீ 'புத்தர்களை வாதில் வென்று சிவமதஸ்தாபனஞ் செய்தருளவேண்டும்' என்று பிரார்த்தித்தான். நாயனார் அதற்குடன்பட்டுப், புத்தர்களோடு வாதஞ்செய்து, அவர்களுடைய குதர்க்கவுரைகளினாலே கோபங்கொண்டு, அவர்களை ஊமைகளாக்கினார். அதுகண்ட புத்தராஜன் பிறவி தொடுத்து ஊமையாயிருந்த தன் மகளுடைய ஊமையைத் தீர்த்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அவள்மேற் கிருபாநோக்கஞ் செய்து ஊமையை நீக்கிப், புத்தர்கள் முன் வினவிய வினாக்

சொல்லி, 'இவற்றின் பொருளை அருளிச் செய்யவேண்டும்' என்று வேண்டினார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் 'நடேச பெருமானுடைய சந்நிதியிலே பொருள் சொல்லுகின்றோம்' என்று அவர்களுடன் சென்று கனகசபையை அடைந்து, 'இப்பாடல்களின் பொருள் இந்தக் கடவுளே' என்று சுட்டிக் காட்டி, அவர்கள் எல்லாருங் காணும்படி சிற்சபையுட் புகுந்து, சிவத்தோடு இரண்டறக் கலந்தார். அதனைக் கண்ட சிதம்பரத்திலுள்ளவர்களும் மற்றையோர்களும் பேரானந்த மடைந்தார்கள். தேவர்கள் கற்பகப்பூமழை பொழிந்தார்கள்.

கணபதி துணை.

# நீதிவெண்பா

## மூலமும் உரையும்.

### காப்பு.

மூதுணர்ந்தோ ரோதுசில மூதுரையைப் பேதையேன்
நீதிவெண்பா வாக நிகழ்த்துவேன்—ஆதிபரன்
வாமான் கருணை மணியுதரம் பூத்தமுதற்
கோமான் பெருங்கருணை கொண்டு.

இதன்பொருள். பேதையேன்-அறிவில்லாதவனாகிய யான்,—ஆதிபரன் - முதற் கடவுளாகிய சிவபெருமானுடைய—வாமம் மான் - இடப்பாகத்திலே பொருந்திய உமாதேவியார்,—கருணை மணி உதரம் பூத்த - அருளினாலே தமது திருவயிற்றினின்றுந் தோன்றுவித்த,—முதல் கோமான் பெரும் கருணை கொண்டு - மூத்த பிள்ளையாகிய விநாயகக்கடவுளுடைய பெருமையாகிய அருளினால்,—மூதுணர்ந்தோர் ஓது சில மூதுரையை - பேரறிஞர்கள் சொல்லிய சில நீதிமொழிகளை,—நீதிவெண்பா ஆக நிகழ்த்துவேன்- நீதிவெண்பா என்னும் நூலாகப்பாடுவேன். என்றவாறு.

வாமம் என்பது வாம் எனக் கடை குறைந்து நின்றது.

இதனது தாற்பரியம். யான் நீதிவெண்பாவைப் பாடுதற்கு விநாயகக்கடவுள் துணை. என்பதாம்.

தாமரைபொன் முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா—தாமழன்மற்
றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலு மென்.

இ-ள். தாமரை-தாமரையும்,—பொன்-பொன்னும்,—முத்து-முத்தும்,—சவரம்-சாமரையும்,—கோரோசனை-கோரோசனையும், -பால் - (பசுவின்) பாலும்,—பூமருதேன் - பொலிவாகிய தேனும்,—பட்டு - பட்டும்,—புனுகு - புனுகும்,—சவ்வாது - சவ்வாதும்,—ஆம் அழல் - எரிகின்ற நெருப்பும் (ஆகிய இவைகள்),—எங்கே பிறந்தாலும் எள்ளாரே - எந்த இடத்திலே பிறந்தாலும் (ஒருவரும்) இகழார்களல்லவா?—(அவைபோல)—நல்லோர்கள் எங்கே பிறந்தாலும் என் - நல்லவர்கள் எங்கே பிறந்தாலும் இகழப்படமாட்டார். எ - று. மற்று அசை.

இ-ம். நல்லோர் இழிந்த சாதியிற் பிறந்தாராயினும் நல்லவராகவே மதிக்கப்படுவர். எ-ம். (க)

அரிமந் திரம்புகுந்தா லானை மருப்பும்
பெருகொளிசேர் முத்தும் பெறலாம்—நரிநுழையில்
வாலுஞ் சிறிய மயிரெலும்புங் கர்த்தபத்தின்
தோலுமல்லால் வேறுமுண்டோ சொல்.

இ-ள். அரி மந்திரம் புகுந்தால் - சிங்கத்தின் குகையிற் போனால்,—ஆனை மருப்பும்-யானைக்கொம்புகளையும்,—பெருகு ஒளி சேர் முத்தும் பெறலாம் - மிகுந்த ஒளியையுடைய முத்துக்களையும் பெற்றுக்கொள்ளலாம்;—நரி நுழையில்-நரியினுடைய குழியில்,—சிறிய வாலும்-எளிய வால்களும்,—மயிர்-மயிர்களும்,—எலும்பும் - எலும்புகளும்,—கர்த்தபத்தின் தோலும் அல்லால் - கழுதையின் தோல்களுமல்லாமல்,—வேறும் உண்டோ சொல்-வேறு (உயர்ந்த) பொருளும் உண்டோ நீ சொல்வாயாக. எ - று.

இ-ம். பெரியோரை அடுத்தால் உயர்வும், சிறியோரை அடுத்தால் இழிவும் உண்டாம். எ-ம். (உ)

அறிவன் பகையேனு மன்புசேர் நட்பாஞ்
சிறுவன் பகையாஞ் செறிந்த—அறிவுடைய
வென்றி வனசரன்றான் வேதியனைக் காத்தான்முன்
கொன்றதொரு வேந்தைக் குரங்கு.

இ - ள். அறிவன் பகையேனும் - அறிவுள்ளவன் பகைவனானாலும்,—அன்பு சேர் நட்பு ஆம்-அன்புபொருந்திய நட்பைப் பாராட்டுவன்,—சிறுவன் பகை ஆம் - மூடன் (சிநேகனானாலும்). பகையையே பாராட்டுவன்,—முன் - முன்னாளில்,—செறிந்த அறிவு வென்றி உடைய வனசரன் - மிகுந்த அறிவையும் வெற்றியையும் உடைய ஒரு வேடன்,—வேதியனைக் காத்தான் - ஒரு பிராமணனைக் (கொலையினின்று) காப்பாற்றினான்,—குரங்கு ஒரு வேந்தைக் கொன்றது - (அறிவில்லாத ஒரு) குரங்கு ஓர் அரசனைக் கொன்றது. எ - று. தான் அசை.

இ-ம். அறிஞருடைய பகையினும் மூடருடைய சிநேகந் துன்பஞ்செய்யும். எ-ம்.

ஓர் அரசன் ஒரு பிராமணனுக்கு ஒரு மாணிக்க ரத்தினத்தைக் கொடுத்து, 'நீ போகிற வழியில் திருடர்கள் இருக்கவுங் கூடும். ஆதலால் இதைவிழுங்கி ஊருக்குப் போய்க் கக்கி எடுத்துக்கொள்' என்று சொன்னான். அதை அறிந்த ஒரு வேடன் பிராமணனைத் தொடர்ந்து போய்க் காட்டுவழியில் மறித்து, 'உன் வயிற்றிலிருக்கும் மாணிக்கத்தைத் தா' என்று பயமுறுத்தினான். பிராமணன் 'அது என் வயிற்றினுளில்லை உன் வயிற்றினுள்ளே தான் இருக்கின்றது' என்றான். இப்படி இவர்கள் இருவரும வழக்கிட்டுக்கொண்டிருக்கும்போது, அந்த வழியிலே வந்த திருடர்கள் அவ்விருவர் வயிற்றையும் கீறிப் பார்க்கும்படி முயன்றார்கள். வேடன் 'பிராமணன் இறக்கும்படி நேர்ந்ததே' என்று இரங்கி, 'நாங்களிருவரும் விளையாட்டாகப் பேசினோம் உங்களுக்குச் சந்தேகம் உண்டானால் முன்னே என் வயிற்றைச் சோதியுங்கள்' என்றான். திருடர்கள் அப்படியே சோதித்து, வேடனுடைய வயிற்றில் மாணிக்கம் இல்லாமையினாற் பிராமணனை விட்டு விட்டார்கள்.

ஓர் அரசன் தான் வளர்த்த குரங்கின் கையில் வாளைக் கொடுத்து, 'இவ்விடத்தில் யாரையும் வரவொட்டாமற் காத்திரு' என்று

சொல்லி அதைக் காவலாக வைத்து, நித்திரை செய்தான். அரசன் மேலே ஓர் ஈ வந்திருக்கக் கண்டு குரங்கு அதனை வெட்ட, அரசன் இரண்டு துண்டாய் இறந்தான். (௩)

மென்மதுர வாக்கால் விரும்புஞ் சகங்கடின
வன்மொழியி னாலிகழு மண்ணுலகம்—நன்மொழியை
ஓதுகுயி லேதங் குதவியது கர்த்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த தின்று.

இ - ள். சகம் - பூமியிலுள்ளவர்கள்,—மெல் மதுர வாக்கால் விரும்பும் - (ஒருவருடைய) மென்மையாகிய இன்சொல்லைக் கேட்டலினால் விரும்பிப் புகழ்வர்,—மண்ணுலகம்-அப்பூமியிலுள்ளோர்,—கடின வல் மொழியினால் இகழும் - கடுமையாகிய வன்சொல்லைக் கேட்டலினால் (வெறுத்து) இகழ்வர்,—நல் மொழியை ஓது குயில் ஏது உதவியது-நல்லிசையைக் கூவுகின்ற குயில் (உலகத்தாருக்கு) எதனைக் கொடுத்தது?—கர்த்தபம் ஏது அபராதம் செய்தது-(வன்மையாகக்கத்துகின்ற) கழுதை என்ன பிழையைச் செய்தது?—இன்று - (இரண்டும்) இல்லை. எ - று. அங்கு, தான் அசை.

இ-ம். உலகத்தார் இன்சொல்லைக் கேட்டுப் புகழ்வர், வன்சொல்லைக் கேட்டு இகழ்வர். எ-ம். (ச)

பகைசேரு மெண்ணான்கு பற்கொண்டே நன்னா
வகைசேர் சுவையருந்து மாபோற்—றொகைசேர்
பகைவரிட மெய்யன்பு பாவித் தவராற்
சுகமுறுத னல்லோர் தொழில்.

இ - ள். நல் நா - நல்ல நாக்கு,—பகை சேரும் எண்ணான்கு பல் கொண்டே - பகையையுடைய முப்பத்திரண்டு பற்களையும் (துணையாகக்) கொண்டே,—வகைசேர் சுவை அருந்து மாபோல் - பலவகைப்பட்ட உணவுகளை உண்ணுந் தன்மை போல,—நல்லோர் தொழில் - நல்லவர்களுடைய செய்கை,—தொகைசேர் பகைவரிடம் மெய்யன்பு பாவித்து - மிகுந்த பகைவர்களிடத்தில் மெய்யன்பைப் பாராட்டி,—அவரால் சுகம் உறுதல் - அவர்களால் (தாம்) இன்பத்தை அடைதலாம். எ - று.

இ-ம். நல்லோர்கள் பகைவர்களிடத்தும் அன்பு பாராட்டி, அவராற் சுகம் அடைவர். எ-ம்.

நாக்கினிடத்துப் பல்லுக்குள்ள பகைமையாவது அதனைச் சில வேளை கடித்தல். (ரு)

காந்தனில் லாத கனங்குழலாள் பொற்பவமாஞ்
சாந்தகுண மில்லார் தவமவமாம்—ஏந்திழையே
அன்னையில்லாப் பிள்ளை யிருப்ப தவமவமே
துன்னெயிறில் லாரூண் சுவை.

இ-ள். ஏந்து இழையே - ஏந்திய ஆபரணங்களையுடைய பெண்ணே!—காந்தன் இல்லாத கனம் குழலாள் பொற்பு அவம் ஆம் - நாயகனில்லாத பாரமாகிய கூந்தலையுடைய பெண்ணின் அழகு வீணும்.—சாந்த குணம் இல்லார் தவம் அவம் ஆம் - பொறுமைக்குணம் இல்லாதவர்களுடைய தவம் வீணும்.—அன்னை இல்லாப் பிள்ளை இருப்பது அவம் - தாயில்லாப்பிள்ளை இருப்பது வீணும்.—துன் எயிறு இல்லார் ஊண் சுவை அவம்-நெருங்கிய பற்களில்லாதவருடைய போசனச்சுவை வீணும். எ - று. ஏ அசை.

இ-ம். நாயகனில்லாமையினுற் பெண்களுக்கும், பொறுமையில்லாமையினுல் தவஞ்செய்வோர்க்கும், தாயில்லாமையினுற் பிள்ளைகளுக்கும், பல்லில்லாமையினுல் உண்பவர்களுக்கும் இன்பமில்லை. எ-ம். (சு)

வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான்.

இ - ள். வருத்த வளை வேய் - வளைக்க வளைகின்ற (இளைய) மூங்கில்,—அரசர் மாமுடியின் மேல் ஆம் - அரசர்களுடைய பெருமையாகிய முடிக்கு மேலே (சிவிகைக்கொம்பாய்) உயர்வை அடையும்,—வருத்த வளையாத மூங்கில் - வளைக்க வளையாத (முற்றிய) மூங்கில்,—தரித்திரமாய் வேழம்பர் கைப்புகுந்து - தரித்திரப்பட்டுக் கழைக்கூத்தாடிகளுடைய கையிற் போய்,—மேதினி எல்

லாம் திரிந்து - பூமி யெங்கும் உலேந்து,—அவர் அடிக்கீழ் தாழும் — அவர்களுடைய காலின் கீழாகி இழிவை அடையும். எ - று. தம், தான் அசை.

இ-ம். இளமையில் வருத்தப்பட்டுக் கற்றவர் பெருமை யடைவர்; அப்படிக் கல்லாதவர் சிறுமையடைவர். எ-ம். (எ)

நொய்தாந் திரணத்தி னொய்தாகும் வெண்பஞ்சின்
நொய்தா மிரப்போ னுவலுங்கால்—நொய்யசிறு
பஞ்சுதனி னொய்யானேப் பற்ருதோ காற்றணுக
அஞ்சுமவன் கேட்ப தறிந்து.

இ - ள். நுவலுங்கால் - சொல்லுமிடத்து,—இரப்போன்-யாசகன்,—நொய்து ஆம் திரணத்தின் நொய்து ஆகும் வெண்பஞ்சின் - நொய்ம்மையாகிய துரும்பினும் நொய்ம்மையுடைய வெண்பஞ்சினும்,—நொய்து ஆம் - (மிக) நொய்ம்மையுடையவனும்.—காற்று - காற்ருனது,—நொய்ய சிறு பஞ்சுதனின் நொய்யானே பற்ருதோ - நொய்ம்மையாகிய எளிய பஞ்சைப் பார்க்கினும் (மிக) நொய்ம்மையுடையவனுகிய இவனே அடித்துக்கொண்டு போகாதோ (எனின்),—அவன் கேட்பது அறிந்து அணுக அஞ்சும் - அவன் (ஏதேனும்) கேட்பான் என்பதை அறிந்து (அது அவனுக்குக்) கிட்டப்போதற்குப் பயப்படும். எ - று.

இ-ம். இரப்பவர் மிகவும் எளியவர். எ-ம். (அ)

ஒருபோது யோகியே யொண்டளிர்க்கை மாதே
இருபோது போகியே யென்ப—திரிபோது
ரோகியே நான்குபோ துண்பா னுடல்விட்டுப்
போகியே யென்று புகல்.

இ - ள். ஒள் தளிர்க்கை மாதே - ஒள்ளிய தளிர்போலுங் கைகளேயுடைய பெண்ணே,—ஒருபோது யோகி - ஒருபொழுது (உணவு) யோகிக்கும்,—இருபோது போகி-இருபொழுது (உணவு) போகிக்கும் உரியன,—என்ப - என்று அறிஞர் சொல்லுவர்.—திரிபோது உண்பான் ரோகியே - முப்பொழுதுண்பவன் வியாதியாளனே.—நான்கு போது உண்பான் உடல்விட்டுப் போகியே என்று

புகல் - நான்கு பொழுது உண்பவன் இறப்பவனே என்று சொல்வா யாக. எ - று. ஏ அசை.

இ-ம். யோகிக்கு ஒருகால போசனமும் போகிக்கு இரண்டு கால போசனமும் உரியன; மூன்றுகால போசனம் நோயையும் நான்குகால போசனம் மரணத்தையும் செய்யும். எ-ம். (கூ)

கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணுவிழி யேழாகு மீவோர்க்கு—நண்ணும்
அநந்தந் தவத்தா லருண்ஞானம் பெற்றோர்க்
கநந்தம் விழியென் றறி.

இ - ள். யாவர்க்கும் கண் இரண்டே-எல்லாருக்கும் கண்கள் இரண்டே (ஆயினும்),—கற்றோர்க்கு மூன்று விழி - கற்றவர்க்கு மூன்று கண்களாம்.—ஈவோர்க்கு எண்ணு விழி ஏழாகும்-கொடை யாளர்களுக்குக் கணக்கிடப்படுங் கண்கள் ஏழாம்.—நண்ணும் அநந் தம் தவத்தால் - பொருந்திய (பலனைக் கொடுத்த விடத்துப் பசு புண்ணியங்கள் போல) அழியாத சரியை கிரியை யோகங்களால்,— அருள் ஞானம் பெற்றோர்க்கு - திருவடி ஞானத்தைப் பெற்றவர் களுக்கு,—விழி அநந்தம் என்று அறி - கண்கள் அளவில்லாதன என்று அறிவாயாக. எ - று.

இ-ம். மனுடருள்ளே கற்றோரும், அவரினும் ஈகையாளரும், அவரினும் ஞானிகளும் சிறந்தவர். எ-ம்.

கற்றவர்க்குக் கண்கள் இரண்டோடு கல்வியையும், ஈவோர்க்கு நகக்கண்கள் ஐந்தையும், சேர்த்து முறையே கண்கள் மூன்றென வும் ஏழெனவும், ஞானிகள் எல்லாவற்றையும் அறிதலினால் அவர்க ளுக்குக் கண்கள் அநந்தம் எனவும், கூறினர். (கo)

உற்றபெருஞ் சுற்ற முறநன் மனைவியுடன்
பற்றிமிக வாழ்க பசுவின்வால்—பற்றி
நதிகடத்த லன்றியே நாயின்வால் பற்றி
நதிகடத்த லுண்டோ நவில்.

இ - ள். உற்ற பெரும் சுற்றம் உற - பொருந்திய பெரிய உற வினர் சூழ,—நன் மனைவியுடன் பற்றி மிக வாழ்க - நன் மனையா

ளோடு கூடி மிக வாழுக.—பசுவின் வால்பற்றி நதி கடத்தல் அன்றி - பசுவின் வாலைப் பிடித்துக்கொண்டு ஆற்றைத் தாண்டுவ தல்லாமல்,—நாயின் வால் பற்றி நதி கடத்தல் உண்டோ - நாயின் வாலைப் பிடித்துக்கொண்டு ஆற்றைத் தாண்டுவதுண்டோ?—நவில்- நீ சொல்வாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். தன் மனையாளல்லாத மற்றைப் பெண்களோடு கூடி வாழ்தல் துன்பத்துக்கேதுவாகும். எ-ம். (கக)

ஆசைக் கடியா னகிலலோ கத்தினுக்கும்
ஆசற்ற நல்லடியா னாவானே—ஆசை
தனையடிமை கொண்டவனே தப்பா துலகந்
தனையடிமை கொண்டவனே தான்.

இ - ள். ஆசைக்கு அடியானே - ஆசைக்கு அடிமைப்பட்ட வனே,-அகில லோகத்தினுக்கும் ஆசு அற்ற நல் அடியான் ஆவான்- எல்லா வுலகங்களுக்கும் குற்றமற்ற நல்ல அடிமையாவன்.—ஆசை தனை அடிமைகொண்டவனே - ஆசையைத் தனக்கு அடிமையாகக் கொண்டவனே,—உலகந்தனைத் தப்பாது அடிமை கொண்டவன் - உலகத்தைத் தவறாமல் (தனக்கு) அடிமையாகப் பெற்றுக்கொண்ட வன். எ - று. ஏ, தான் அசை.

இ-ம். ஆசையில்லாதவனுக்கு உலகம் வசப்படும். எ-ம். (கஉ)

ஆனந் தணர்மகளி ரன்பாங் குழந்தைவதை
மானந் தரும்பிசி வார்த்தையிவை—மேனிரையே
கூறவரு பாவங் குறையாதொவ் வொன்றுக்கு
நூறதிக மென்றே நுவல்.

இ - ள். ஆன் - பசுவையும்,—அந்தணர் - பிராமணரையும்,— மகளிர் - பெண்களையும்,—அன்பு ஆம் குழந்தை - அன்பையுடைய குழந்தையையும்,—வதை - கொல்லுதலும்,—மானம் தரும் பிசி வார்த்தை இவை-இகழ்ச்சியைத் தருகின்ற பொய்யும் ஆகிய இவை கள்,—மேல் நிரையே கூற வருபாவம் குறையாது - மேலே வரிசை யாகச்சொல்ல வருகின்ற பாவங் குறையாமல்,—ஒவ்வொன்றுக்கு நூறு அதிகம் என்று நுவல் - ஒன்றுக்கொன்று நூறு மடங்கு அதி கம் என்று சொல்வாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். பசுக்களையும் பிராமணர்களையும் பெண்களையும் குழந்தைகளையும் கொல்லுதலும், பொய் கூறுதலும் ஆகிய இவற்றால் வரும் பாவங்கள் ஒன்றுக்கொன்று நூறுமடங்கதிகம். எ-ம். (கஙு)

பெற்றமையு மென்னும் பெரியோரும் பெற்றபொருண்
மற்றமையு மென்றே மகிழ்வேந்து—முற்றியநன்
மானமிலா வில்லாளு மானமுறு வேசியரும்
ஈன முறுவா ரிவர்.

இ-ள். பெற்று அமையும் என்னும் பெரியோரும் - (பொருளாய்) பெற்றுத் திருப்தியடையாத பெரியோர்களும்,—பெற்ற பொருள் மற்று அமையும் என்று மகிழ் வேந்தும் - கிடைத்த பொருள் இனிப் போதும் என்று திருப்தியடையும் அரசனும்,—முற்றிய நல் மானம் இலா இல்லாளும் - மிகுந்த நல்ல நாணம் இல்லாத மனையாளும்,—மானம் உறு வேசியரும் - நாணமடைகின்ற பொதுப்பெண்களும் (ஆகிய),—இவர்-இவர்கள்,—ஈனம் உறுவார்- தாழ்வை அடைவார்கள். எ - று. ஏ அசை.

இ-ம். கிடைத்த பொருளிலே திருப்தியடையாமையினாற் பெரியோர்களுக்கும், அதிலே திருப்தியடைதலால் அரசருக்கும், நாணமில்லாமையினாற் பெண்களுக்கும், அதனையுடைமையால் வேசிகளுக்கும், தாழ்வுண்டாகும். எ-ம். (கச)

கற்றோர் கனமறிவர் கற்றோரே கற்றறியா
மற்றோ ரறியார் வருத்தமுறப்—பெற்றறியா
வந்தி பரிவாய் மகவைப் பெறுந்துயரம்
நொந்தறிகு வாளோ நுவல்.

இ-ள். கற்றோர் கனம் கற்றோரே அறிவர் - படித்தவர்களுடைய பெருமையைப் படித்தவர்களே அறிவார்கள்;—கற்று அறியா மற்றோர் அறியார் - படித்தறியாத மூடர்கள் அறியமாட்டார்கள்.—வருத்தம் உறப் பெற்று அறியா வந்தி-வருத்தமுண்டாகப் (பிள்ளையைப்) பெற்றறியாத மலடியானவள்,—பரிவாய் மகவைப் பெறும் துயரம் நொந்து அறிகுவாளோ - வருத்தப்பட்டுப் பிள்ளையைப் பெறுந்துன்பத்தைத் (தான்) துன்பப்பட்டறிவாளோ?—நுவல் - நீ சொல்வாயாக. எ - று.

இ-ம். கற்றவருடைய பெருமையைக் கற்றவரே அறிவர். எ-ம்.

செய்யு மொருகருமந் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபஞ் சேருமே—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல்.

இ-ள். செய்யும் ஒரு கருமம்-செய்யவேண்டிய ஒரு தொழிலை,- தேர்ந்து புரிவது அன்றி - யோசித்துச் செய்வதல்லாமல்,—செய்யின்-(யோசியாமற்) செய்தால்,—முன்-முன்னாளிலே,—செய்ய ஒரு நல் குடியைக் காத்த - செப்பமாகிய ஒரு நல்ல வீட்டைக் காத்துக் கொண்டிருந்த,—நகுலனைக்கொன்ற-கீரிப்பிள்ளையைக்கொன்ற,— பொன் மறைக்கொடியைச் சேர் துயரம் போல் - அழகிய பிராமணப் பெண்ணைச் சேர்ந்த துன்பத்தைப்போல,—மனத் தாபம் சேரும் - மனத்துயரம் உண்டாகும். எ - று. ஏ அசை.

இ-ம். முன்பு நன்றாக யோசியாமற் செய்யுங் காரியம் பின்பு துன்பத்தைக் கொடுக்கும். எ-ம்.

ஒரு பிராமணஸ்திரீ புத்திரவாஞ்சையினால் ஒரு கீரிப்பிள்ளையை வளர்த்துவரு நாளில், அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அவள் ஒருநாள் அக்குழந்தையைத் தொட்டிலிற் கிடத்திவிட்டு ஸ்நானத்திற்குப் போயினாள். அப்பொழுது ஒரு பாம்பு குழந்தைக்குக் கிட்டப்போகக், கீரிப்பிள்ளை பாம்பைக் கடித்துக் கொன்றுவிட்டு, ஸ்நானஞ்செய்து வந்த பிராமணஸ்திரீக்கு முன் இரத்தம் தோய்ந்த வாயுடன் ஓடிப்போயிற்று. அவள் தன் குழந்தையைக் கீரிப்பிள்ளை கடித்ததாக எண்ணி, அதைக் கொன்றுவிட்டு உள்ளே வந்து தன் குழந்தை உயிரோடிருத்தலையும் பாம்பு துண்டாய்க் கிடத்தலையும் கண்டு, தானும் உயிரைவிட்டாள். (கரு)

நாவி னுனியி னயமிருக்கிற் பூமாதும்
நாவினிய நல்லோரு நண்ணுவார்—நாவினுனி
ஆங்க டினமாகி லத்திருவுஞ் சேராண்முன்
ஆங்கே வருமரண மாம்.

இ - ள். நாவின் நுனியில் நயம் இருக்கில் - நாக்கு நுனியில் இன்சொல்லிருந்தால்,—பூமாதும் நா இனிய நல்லோரும் நண்ணு

வார் - இலக்குமியும் இன்சொல்லையுடைய நல்லோரும் பொருந்து வர்.—நாவின் நுனி கடினம் ஆம் ஆகில் - நாக்கு நுனியிலே வன் சொல்லிருந்தால்,—அத்திரு சேராள் - அந்த இலக்குமி பொருந்த மாட்டாள்.—ஆங்கு மரணமும் வரும் - அப்பொழுதே இறப்பும் வரும்.—முன் - இதனை அறிவாயாக. எ - று. ஏ, ஆம் அசை.

இ-ம். கடுஞ்சொற் சொல்லுவோருக்குத் தரித்திரமும் மரணமும் வரும். எ-ம். (கஎ)

ஈக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம்.

இ - ள். ஈக்கு விடம் தலையில் எய்தும் - ஈக்கு விஷம் தலையிலிருக்கும்,—இரும் தேளுக்கு வாய்த்தவிடம் கொடுக்கில் வாழும் - (கொடுமையிற்) பெரிய தேளுக்குப் பொருந்திய விஷம் அதன் கொடுக்கிலிருக்கும்.—நோக்க அரிய பைங்கண் அரவுக்கு விடம் பல் அளவே - பார்த்தற்கும் அரிய பசுமையாகிய கண்களையுடைய பாம்புக்கு விஷம் பல்லிலிருக்கும்.—துர்ச்சனருக்கு அங்கம் முழுதும் விடமே ஆம் - துட்டர்களுக்கு உடம்பு முழுதும் விஷமேயாயிருக்கும். எ - று. ஏ அசை.

இ-ம். துட்டர்கள் தீமையே உருவமாயிருப்பர். எ-ம். (கஅ)

துர்ச்சனரும் பாம்புந் துலையொக்கி னும்பாம்பு
துர்ச்சனரை யொக்குமோ தோகையே—துர்ச்சனர்தாம்
எந்தவிதத் தாலு மிணங்காரே பாம்புமணி
மந்திரத்தா லாமே வசம்.

இ - ள். தோகையே-மயில்போல்வாளே,—துர்ச்சனரும் பாம்பும் துலை ஒக்கினும்-துட்டரும் பாம்பும் (தீமைசெய்யும்) அளவிலே நிகர்த்தாலும்,—பாம்பு துர்ச்சனரை ஒக்குமோ - பாம்பு துட்டரை ஒப்பாகுமோ—(ஒப்பாகாது - எனெனில்),—துர்ச்சனர் எந்த விதத்தாலும் இணங்கார் - துட்டர் எந்த விதத்தாலும் வசப்படார்,—

பாம்பு மணி மந்திரத்தால் வசம் ஆம் - பாம்பு மணி மந்திரங்களால் வசப்படும். எ - று. தாம், ஏ அசை.

இ-ம். துட்டர் பாம்பினுங் கொடியர். எ-ம். (கக)

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

இ - ள். கொம்பு உளதற்கு ஐந்து (முழம்) - கொம்புள்ள மிருகத்துக்கு ஐந்து முழத் தூரமும்,—குதிரைக்குப் பத்துமுழம் - குதிரைக்குப் பத்துமுழத் தூரமும்,—வெம்பு கரிக்கு ஆயிரம் (முழம்) வேண்டும் - வருத்துகின்ற யானைக்கு ஆயிர முழத்தூரமும் (விலகல்) வேண்டும்.—வம்பு செறி தீங்கினர் தம் கண்ணில் - கொடுமைமிகுந்த துட்டருடைய கண்ணுக்கு,—தெரியாத தூரத்து நீங்குவதே நல்ல நெறி - புலப்படாத தூரத்திற் போவதே நன்மையாம். எ - று. தாம், ஏ அசை.

இ-ம். துட்ட மிருகங்களுக்கு வழிவிலகிப் போதல்வேண்டும்; துட்டர்களுக்கு அவர் கண்ணுக்குந் தெரியாத தூரத்தில் நீங்கிவிடல் வேண்டும். எ-ம். (உ0)

அவ்விய நெஞ்சத் தறிவில்லாத் துர்ச்சனரைச்
செவ்விய ராக்குஞ் செயலுண்டோ—திவ்வியநற்
கந்தம் பலவுங் கலந்தாலு முள்ளியது
கந்தங் கெடுமோ கரை.

இ-ள். அவ்விய நெஞ்சத்து அறிவு இல்லாத் துர்ச்சனரை-அழுக்காறு பொருந்திய மனத்தையுடைய அறிவில்லாத துட்டரை;—செவ்வியர் ஆக்கும் செயல் உண்டோ - நேர்மையுடையவராக்குதற்குரிய செய்கைகள் உளவோ (இல்லை:)—உள்ளியது கந்தம் - உள்ளியினுடைய (துர்க்) கந்தம்,—திவ்விய நல் கந்தம் பலவும் கலந்தாலும் கெடுமோ - பரிசுத்தமாகிய நற்கந்தங்கள் பலவற்றையும் சேர்த்தாலும் நீங்குமோ?—கரை - நீ சொல்வாயாக. எ - று.

இ-ம். துட்டருக்கு நல்லறிவைப் போதித்தாலும், நல்லவராகார். எ-ம். (உக)

துன்னு மிருமலுந் துர்ச்சனரு மொக்குமே
மன்னு மினிமையான் மாறுகிப்—பன்னுங்
கடுவுங் கடுநேர் கடுமொழியுங் கண்டாற்
கடுக வசமா கையால்.

இ - ள். துன்னும் இருமலும் துர்ச்சனரும்-மிகுகின்ற இருமலும் துட்டரும்,—மன்னும் இனிமையால் மாறு ஆகி - நிலையான இனிமையினால் மாறுபட்டு,—பன்னும் கடுவும் கடுநேர் கடு மொழியும் கண்டால் - (முறையே) சொல்லப்படுங் கசப்பையும் நஞ்சு போலுங் கடுஞ் சொல்லையுங் கண்டால்,—கடுக வசம் ஆகையால் - சீக்கிரத்தில் வசப்படுதலால்,—ஒக்கும்-ஒப்பாகும். எ-று. ஏ அசை.

இ-ம். இருமல் தித்திப்பினால் அதிகரித்தலும் கசப்பினால் அடங்குதலும் போலத், துட்டர் இன்சொல்லால் மிஞ்சுதலும் வன்சொல்லால் அஞ்சுதலுமுடையராவர். எ-ம். இனிமை என்றது தித்திப்பையும் இன்சொல்லையும். (உஉ)

செங்கமலப் போதலர்ந்த செவ்விபோ லும்வதனந்
தங்கு மொழிசந் தனம்போலும்—பங்கியெறி
கத்தரியைப் போலுமிளங் காரிகையே வஞ்சமனங்
குத்திரர்பால் மூன்று குணம்.

இ - ள். இளம் காரிகையே-இளமையாகிய பெண்ணே,—குத்திரர் பால் - வஞ்சகர்களுக்கு—வதனம்-முகம்,—அலர்ந்த செவ்வி செம் கமலப் போது போலும் - அலர்ந்த பக்குவத்தையுடைய செந்தாமரைப் பூவைப்போல அழகுள்ளதா யிருக்கும்.—தங்குமொழி - (இனிமை) தங்கிய வார்த்தை,—சந்தனம்போலும் - சந்தனத்தைப் போலக் குளிர்ந்ததாயிருக்கும்.—வஞ்ச மனம் - கபடத்தையுடைய மனம்,—பங்கி எறி கத்தரியைப் போலும்-மயிரை அறுக்கின்ற கத்தரியைப்போலக் கொடிதாயிருக்கும்,—மூன்று குணம் - (இவை அவர்களுக்குரிய) மூன்று குணங்களாம். எ - று.

இ-ம். வஞ்சகர்களுடைய முகமும் சொல்லும் நல்லனபோலக் காணப்பட்டாலும், அவர் மனம் மிகக் கொடியதாயிருக்கும். எ-ம்.

நீசனோ நீச னினையுங்காற் சொற்றவறு
நீசனே நீச னவனையே—நீசப்
புலையனு மென்றுரைக்கும் புல்லியனே மேலாம்
புலையனு மென்றே புகல்.

இ - ள். நினையுங்கால்-யோசிக்கும்பொழுது,—நீசனோ நீசன் - (சாதிப்) புலையனோ புலையன்;—சொல் தவறும் நீசனே நீசன் - சொன்னசொற் றவறுகின்ற புலையனே புலையன்.—அவனையே - (சொற்றவறுபவனை விட்டு) அந்தச் சாதிப் புலையனையே,—நீசப் புலையன் ஆம் என்று உரைக்கும் புல்லியனே - இழிவினையுடைய புலையனும் என்று சொல்லுகின்ற கீழ்மகனே,—மேலாம் புலையன் ஆம் என்று புகல் - பெரும்புலையனுவான் என்று நீ சொல்வாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். சொன்னசொற்றவறுவோன் புலையனிலும் தாழ்ந்தவனுக மதிக்கப்படுவான். எ-ம். (உச)

ஞானமா சார நயவா ரிடைப்புகழும்
ஏனைநால் வேத மிருக்குநெறி—தான்மொழியிற்
பாவநிறை சண்டாளர் பாண்டத்துக் கங்கைநீர்
மேவுநெறி யென்றே விடு.

இ - ள். ஞானம் ஆசாரம் நயவாரிடை - ஞானத்தையும் ஆசாரத்தையும் விரும்பாதவரிடத்தில்,—புகழும் நால் வேதம் ஏனை இருக்கும் நெறி - புகழப்படுகின்ற நான்கு வேதங்களும் மற்றை (ஞானசாஸ்திரங்களும்) இருக்கு முறைமையை—மொழியில் - (எதுபோலும் என்று) சொன்னுல்,—பாவம் நிறை சண்டாளர் பாண்டத்து - பாவம் மிகுந்த நீசர்களுடைய பாத்திரத்தில்,—கங்கை நீர் மேவு நெறி என்றே விடு - கங்கா தீர்த்தம் இருத்தல்போலும் என்றே துணிவாயாக. எ - று. தான் அசை.

இ-ம். நல்லறிவொழுக்கங்கள் இல்லாதவருடைய வேதமுதலிய சாத்திரவுணர்ச்சி பழிக்கப்படும். எ-ம். (உரு)

குணநன் குணராக் கொடியோ ரிடத்திற்
குணநன் குடையார் குறுகார்—குணமுடைமை
நண்ணுச் சமண நகரத்திற் றூசொலிக்கும்
வண்ணானுக் குண்டோ வழக்கு.

இ - ள். குண நன்கு உணராக் கொடியோரிடத்தில் - குண நன்மையை அறியாத துட்டரிடத்தில்,—குண நன்கு உடையார் குறுகார் - குணநன்மையுடையோர் சேரமாட்டார்.—குணம் உடைமை நண்ணுச் சமண நகரத்தில் - (வஸ்திரம் உடுக்குங்) குணமில்லாத சமணர்களிருக்கும் பட்டணத்தில்,—தூசு ஒலிக்கும் வண்ணானுக்கு வழக்கு உண்டோ - வஸ்திரத்தை வெளுக்கின்ற வண்ணானுக்கு வேலையுண்டோ (இல்லை.) எ - று.

இ-ம். துட்டர்களிடத்துத் தமக்கு ஒரு தொழிலும் இல்லாமையால், நல்லோர் அவரை அணுகார். எ-ம். (உசு)

ஆனை மருப்பு மருங்கவரி மான்மயிரும்
கான வரியுகிருங் கற்றோரு—மானே
பிறந்தவிடத் தன்றிப் பிறிதொருதே சத்தே
செறிந்த விடத் தன்றே சிறப்பு.

இ - ள். மானே - பெண்ணே,—ஆனை மருப்பும் - யானைக் கொம்பும்,—அரும் கவரிமான் மயிரும் - அருமையாகிய கவரி மானின் மயிரும்,—கான வரி உகிரும்-காட்டில் வாழும் புலியின் நகமும்,—கற்றோரும் - வித்துவான்களும்,—சிறப்பு - சிறப்பை (அடைதல்),—பிறந்த இடத்து அன்றி - பிறந்த இடத்தில் மாத்திரமல்லாமல்,—பிறிது ஒரு தேசத்தே - வேறொரு தேசத்தின்கண்,—செறிந்த இடத்து அன்றே - சேர்ந்த இடத்திலல்லவா? எ - று.

இ-ம். வித்துவான்களுக்கு எங்குஞ் சிறப்புண்டாம். எ-ம். ()

தலைமயிருங் கூருகிரும் வெண்பல்லுந் தத்த
நிலையுடைய மானவரு நிற்கு—நிலைதவறுத்
தானத்திற் பூச்சியமே சாரு நிலைதவறுந்
தானத்திற் பூச்சியமோ தான்.

இ - ள். தலைமயிரும்-தலைமயிரும்,—கூர் உகிரும் - கூர்மையாகிய நகமும்,—வெண் பல்லும் - வெண்மையாகிய பல்லும்,—தத்தம் நிலையுடைய மானவரும் - தங்கள் தங்கள் நிலை தவறாத மானிகளும்,—நிற்கும் நிலை தவறாத் தானத்தில் பூச்சியமே - நிற்கவேண்டிய நிலைமை தவறாத இடத்தில் பூசிக்கப் படுவனவே—சாரும் நிலை தவறும் தானத்தில் பூச்சியமோ - பொருந்திய நிலைமை தவறுமிடத்திற் பூசிக்கப்படுவனவோ (அல்ல.) எ - று. தான் அசை.

இ-ம். தத்தம் நிலையினின்று தவறுவோர் அவமதிக்கப்படுவர். எ-ம். (உஅ)

வென்றி வரியுகிரும் வெண்கவரி மான்மயிருந்
துன்றுமத யானைச் சுடர்மருப்பு—நின்றநிலை
வேறுபடி னுஞ்சிறப்பா மெய்ஞ்ஞானி நின்றநிலை
வேறுபடி னுஞ்சிறப்பாமே.

இ - ள். வென்றி வரி உகிரும் - வெற்றியையுடைய புலிநகமும்,—வெண்கவரிமான் மயிரும் - வெண்மையாகிய கவரிமானின் மயிரும்,—துன்று மத யானைச் சுடர் மருப்பும் - மிகுந்த மதத்தையுடைய யானையின் ஒளிபொருந்திய கொம்பும்,—நின்ற நிலை வேறுபடினும் சிறப்பு ஆம் - (தாம்முன்) இருந்த இடத்தினின்று வேறுபட்டாலும் சிறப்பை அடையும்—(அவைபோல),—மெய்ஞ்ஞானி - மெய்ஞ்ஞானியானவன்,—நின்ற நிலை வேறு படினும் சிறப்பு ஆம் - தான் நின்ற நிலையினின்றும் வேறுபட்டு எத்தொழிலைச் செய்தாலும் சிறப்பை அடைவன். எ - று. ஏ அசை.

இ-ம். மெய்ஞ்ஞானிகள் எந்த நிலையில் நின்றாலும் மேன்மையடைவர். எ-ம். (உகூ)

அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்.

இ - ள். பேசில் - சொல்லின்,—அன்னை தயையும் - தாயைப் போலும் அன்பும்,—அடியாள் பணியும் - பணிவிடைக்காரியைப்

போலுந் தொண்டும்,—மலர்ப் பொன்னின் அழகும்-செந்தாமரைப் பூவிலிருக்குஞ் சீதேவியைப்போலும் அழகும்,—புவிப்பொறையும் - பூமியைப்போலும் பொறுமையும்,—வன்னமுலை வேசி துயிலும் - அழகிய தனங்களையுடைய வேசியைப் போலும் போகமும்,—விறல் மந்திரி மதியும்-வலிமையையுடைய மந்திரியைப்போலும் புத்தியும் (ஆகிய),—இவை உடையாள் பெண் - இக்குணங்களையுடையவள் மனைவியாதற்குரியவள். எ - று.

இ-ம். மனையாள் தயை முதலிய நற்குணங்களையுடையளா யிருத்தல் வேண்டும். எ-ம். (கூ0)

பெண்ணொருத்தி பேசிற் பெரும்பூமி தானதிரும்
பெண்ணிருவர் பேசில்விழும் வான்மீன்கள்—பெண்மூவர்
பேசி லலைசுவறும் பேதையே பெண்பலர்தாம்
பேசிலுல கென்னாமோ பின்.

இ - ள். பேதையே - பெண்ணே,—பெண் ஒருத்தி பேசில் பெரும் பூமி அதிரும் - ஒரு பெண் பேசினால் பெரிய பூமி அதிரும்,—பெண் இருவர் பேசில் வான் மீன்கள் விழும் - இரண்டு பெண்கள் பேசினால் ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்கள் உதிரும்,—பெண் மூவர் பேசில் அலை சுவறும் - மூன்று பெண்கள் பேசினாற் சமுத்திரம் வற்றும்,—பெண் பலர் பேசில் பின் உலகு என் ஆமோ - பெண்கள் பலர் பேசினால், பின்பு உலகம் என்ன பாடு படுமோ! எ - று. தான், தாம் அசை.

இ-ம். பெண்கள் பலர் கூடி வசனித்தாற் பெருங்கேடு விளையும். எ-ம். (கூக)

என்னே கிரேதத் திரேணுகையே கூற்றுவனுந்
தன்னேர் திரேதத்திற் சானகியே—பின்யுகத்திற்
கூடுந் திரௌபதியே கூற்றாங் கலியுகத்தில்
வீடுதொறுங் கூற்றுவனு மே.

இ - ள். கிரேதத்து இரேணுகையே கூற்றுவன் ஆம்-கிரேதாயுகத்தில் இரேணுகையே யமனும்.—திரேதத்தில் தன் நேர் சானகியே (கூற்றுவன் ஆம்) - திரேதயுகத்தில் தனக்குத்தானே ஒப்பா

கிய சீதையே யமனும்.—பின் யுகத்தில் கூடும் திரௌபதியே கூற்று ஆம் - அதற்கடுத்த துவாபரயுகத்திற் பொருந்திய திரௌபதியே யமனும்.—கலியுகத்தில் வீடுதொறும் கூற்றுவன் ஆம் - கலியுகத்தில் வீடுகள் தோறும் யமனும்.—என்னே - (இஃது) என்ன ஆச்சரியம். எ - று. ஏ அசை.

இ-ம். கலியுகத்திற் பெண்கள் பெரும்பாலும் கொடியராயிருப்பர். எ-ம். (௯உ).

கர்ப்பூரம் போலக் கடலுப் பிருந்தாலுங்
கர்ப்பூர மாமோ கடலுப்புப்—பொற்பூரும்
புண்ணியரைப் போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல்.

இ - ள். கடல் உப்பு - கடலில் உண்டாகும் உப்பானது,—கர்ப்பூரம் போல இருந்தாலும் - (உருவத்தாற்) கர்ப்பூரம்போல இருப்பினும்,—கடல் உப்பு கர்ப்பூரம் ஆமோ - அவ்வுப்புக் கர்ப்பூரம் ஆகுமோ (ஆகாது அதுபோல)—புல்லியர் - பாவிகள்,—பொற்பு ஊரும் புண்ணியரைப் போல இருந்தாலும் - (வேடத்தினல்) அழகு மிகுகின்ற புண்ணியரைப்போல இருப்பினும்,—புண்ணியர் ஆவாரோ - புண்ணியர்களாவரோ,—புகல் - நீ சொல்வாயாக. எ - று. தாம் அசை.

இ-ம். பாவிகள் வேடமாத்திரத்தாற் புண்ணியராகார். எ-ம்.().

சீலமில்லா னேதேனுஞ் செப்பிடினுந் தானந்தக்
கால மிடமறிந்து கட்டுரைத்தே—ஏலவே
செப்புமவ னுந்தானே சிந்தைநோ காதகன்று
தப்புமவ னுத்தமனே தான்.

இ - ள். சீலம் இல்லான் ஏதேனும் செப்பிடினும் - ஒழுக்கமில்லாதவன் யாதாயினும் (தீயதைச்) சொன்னலும்,—தான் அந்தக் காலம் இடம் அறிந்து - தான் அவன் சொல்லிய காலத்தையும் இடத்தையுந் தெரிந்து,—ஏல கட்டுரைத்துச் செப்புமவனும் - அவன் சொல்லியதற் கேற்ப உறுதிமொழிகளைச் சொல்லி (அவனுக்குப்) பதில் கொடுப்போனும்,—தான் சிந்தை நோகாது அகன்று

தப்பு மவன் (உம்) - (அவன் சொல்லிய தீய வார்த்தையால்) தான் மனம் வருந்தாமல் நீங்கி (அவனுக்குத்) தப்பிப்போகின்றவனும் (ஆகிய இந்நற்குணங்களையுடையவன்)—உத்தமனே - மேலான வனே. எ - று. தான், ஏ அசை.

இ-ம். ஒழுக்கமில்லாதவன் சொல்லுந் தீயவார்த்தையால் மனம் வருந்தாமல், அவனுக்கிசைய உறுதிமொழிகளைச் சொல்லி விலகிப் போகின்றவன் மேலானவன். எ-ம். (நூச)

சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்ப ரான்றமைந்த
முற்றுணர்வோ ரொன்று மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தி னுண்டோ வொலி.

இ - ள். சிறு உணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் - அற்ப அறிவினையுடையோர் எப்பொழுதும் படபடத்துப் பேசுவர்,—ஆன்று அமைந்த முற்றுணர்வோர் ஒன்றும் மொழியார் - (கல்வியினால்) நிறைந்து அடங்கிய பேரறிவுடையோர் (படபடத்து) ஒன்றும் பேசார்.—வெற்றி பெறும் வெண்கலத்தின் ஓசை மிகும் - வெற்றியையுடைய வெண்கலத்தில் ஓசை மிக உண்டாகும்,—விரி பசும் பொன் ஒண் கலத்தின் ஒலி உண்டோ - விரிந்த மாற்றுயர்ந்த பொன்னாலாகிய ஒள்ளிய பாத்திரத்தில் (அவ்வளவு) ஓசையுண்டோ (இல்லை.) எ - று. ஏ அசை.

இ-ம். மூடர் படபடத்துப் பேசுவர், அறிஞர் அங்ஙனம் பேசார். எ-ம். (நூரு)

உள்ளபொழு தேது முவந்தளிப்ப தல்லாலோர்
எள்ளளவு மீய விசையுமோ—தெள்ளுதமிழ்ச்
சீரளித்தோ னுண்டநாட் சேர்மேகத் துக்கருந்த
நீரளித்த தோமுந்நீர் நின்று.

இ - ள். உள்ள பொழுது ஏதும் உவந்து அளிப்பது அல்லால் - (தம்மிடத்துப் பொருள்) இருக்கும்பொழுது (தம்மால்) இயன்றதை மகிழ்ந்து தானஞ் செய்வதல்லாமல்,—ஓர் எள் அளவும் ஈய இசையுமோ - (அப்பொருள் இல்லாதபொழுது) ஓர் எள்ளளவாயினும்

தானஞ் செய்யமுடியுமோ (முடியாது)—முந்நீர்-சமுத்திரமானது,—தெள்ளு தமிழ்ச் சீர் அளித்தோன் உண்ட நாள் - தெளிந்த தமிழுக்குச் சிறப்பைக் கொடுத்த அகத்தியமுனிவர் (தன்னைக்) குடித்த காலத்தில்,—நின்று-(வற்றாமல்) நின்று,—சேர் மேகத்துக்கு அருந்த நீர் அளித்ததோ-(தன்னிடத்து) வந்த மேகத்துக்கு உண்ணும்படி ஜலத்தைக் கொடுத்ததோ (இல்லை.) எ - று.

இ-ம். யாவரும் பொருள் உள்ளபொழுதே தானஞ் செய்தல் வேண்டும். எ-ம்.

அகத்தியமுனிவர் தமிழுக்குச் சிறப்புச் செய்தது, அதற்கிலக்கணஞ் செய்தது. (௩௬)

பேதையரைக் கண்டாற் பெரியோர் வழிவிலகி
நீதியொடு போத னெறியன்றே—காதுமத
மாகரத்த யானை வழிவிலகல் புன்மலந்தின்
சூகரத்துக் கஞ்சியோ. சொல்.

இ - ள். பெரியோர் - அறிஞர்கள்,—பேதையரைக் கண்டால்-மூடரைக்கண்டால்,—நீதியொடு வழி விலகிப் போதல் நெறி அன்றே - ஒழுக்கத்தோடு (தாம் அவருக்கு) வழி விட்டு விலகிப் போதல் முறைமையல்லவா.—காது மதம் மாகரத்த யானை - கொல்லுகின்ற மதத்தையும் பெரிய துதிக்கையையும் உடைய யானையானது,—வழி விலகல் - வழி விலகிப்போதல்,—புன் மலம் தின் சூகரத்துக்கு அஞ்சியோ - எளிய மலத்தை உண்கின்ற பன்றிக்குப் பயந்தோ?—சொல் - நீ சொல்வாயாக. எ - று.

இ-ம். மூடர் இழிந்தவராதலால், அறிஞர் அவருக்கு வழி விலகிப்போதல் முறை. எ-ம். (௩௭)

மந்திரமுந் தேவு மருந்துங் குருவருளுந்
தந்திரமு ஞானந் தருமுறையும்—யந்திரமும்
மெய்யென்னில் மெய்யாய் விளங்குமே மேதினியிற்
பொய்யென்னிற் பொய்யாகிப் போம்.

இ - ள். மேதினியில்-பூமியில்,—மந்திரமும்-மந்திரங்களும்,—தேவும் - தெய்வமும்,—மருந்தும் - ஔஷதங்களும்,—குரு அரு

ளும் - ஆசாரியருடைய அநுக்கிரகமும்,—தந்திரமும் - சாத்திரங்களும்,—ஞானம் தரு முறையும் - ஞானோபதேசமும்,—யந்திரமும் - சக்கரங்களும்,—மெய் என்னில் மெய்யாய் விளங்கும் - உண்மையென்று நம்பினால் உண்மையாய்ப் பயனைக் கொடுக்கும்;—பொய் என்னில் பொய் ஆகிப்போம் - பொய்யென்று நம்பாமல் விட்டாற் பயனைக் கொடுக்கமாட்டாவாம். எ - று. ஏ அசை.

இ-ம். மந்திர முதலியவைகள் மெய்யென்று நம்புவோர்க்குப் பயனைக் கொடுக்கும்; நம்பாதவர்க்குப் பயனைக் கொடுக்கமாட்டா. எ-ம். (௩அ)

ஈசனெதிர் நின்றாலு மீசனருள் பெற்றுயர்ந்த
நேசரெதிர் நிற்ப தரிதாமே—தேசுவளர்
செங்கதிர்முன் னின்றாலுஞ் செங்கதிர வன்கிரணந்
தங்குமணா னிற்கரிதே தான்.

இ - ள். தேசு வளர் செங்கதிர் முன் நின்றாலும் - ஒளி வளர்கின்ற செம்மையாகிய கிரணங்களையுடைய சூரியனுக்கு முன்னே (வெய்யிலுக்கு அஞ்சாது) நின்றாலும்,—செம் கதிரவன் கிரணம் தங்கும் மணல் நிற்க அரிது - (அந்தச்) சூரியனுடைய கிரணம் பட்டுச் சூடுகொண்ட மணலில் நிற்க இயலாது (அதுபோல),—ஈசன் எதிர் நின்றாலும்—சிவபெருமானுக்கெதிரே (பகைத்து நின்றாலும்),—ஈசன் அருள் பெற்று உயர்ந்த நேசர் எதிர் நிற்பது அரிது - சிவபெருமானுடைய அருளைப் பெற்று மேன்மையடைந்த அடியாரெதிரே (பகைத்து) நிற்பதரிது. எ - று. ஆம், ஏ, தான் அசை.

இ-ம். சிவபெருமானுடைய அருளைப்பெற்ற மெய்யடியார் பகை சகித்தற் கரியது. எ-ம். (௩௯)

முற்று மிறைசெயலே முற்றிடினுந் தன்னருளைப்
பெற்றவர்தம் பாலே பெரிதாகும்—பற்றுபெருந்
தாபத் திடத்தே தழன்றிடினு நற்சோதி
தீபத் திடத்தே சிறப்பு.

இ - ள். நல் சோதி-நல்ல ஒளியானது,—பற்று பெரும் தாபத் திடத்தே தழன்றிடினும்-பற்றுகின்ற பெரிய காட்டுத்தீயினிடத்தே

பிரகாசித்தாலும்,—சிறப்பு தீபத்திடத்தே - அதற்குச் சிறப்புத் தீபத்தினிடத்தேயாம் (அதுபோல),—இறை செயலே முற்றும் முற்றிடினும் - சிவன் செயலே எங்கும் நிறைந்திருந்தாலும்,—தன் அருளைப் பெற்றவர் தம்பால் பெரிது ஆகும் - தம்முடைய அருளைப் பெற்ற அடியாரிடத்தில் மிகுதியாம். எ - று. ஏ அசை.

இ-ம். சிவன் செயல் அவருடைய அடியாரிடத்தில் மிக விளங்கும். எ-ம். (௪0).

கன்னியரைப் பொன்னாண் கழிந்தோரை மற்றயலார்
பன்னியரை மாயப் பரத்தையரை—முன்னரிய
தாதியரை நல்லோர் தழுவநினை யார்நரகத்
தீதுவரு மென்றே தெரிந்து.

இ - ள். நல்லோர் - அறிஞர்,—நரகத் தீது வரும் என்று தெரிந்து - நரகத்துன்பம் வரும் என்று அறிந்து,—கன்னியரை - கன்னிகைகளையும்,—பொன் நாண் கழிந்தோரை - பொன்னாலாகிய மங்கலியம் நீங்கிய விதவைகளையும்,—அயலார் பன்னியரை - பிறர் மனைவியரையும்,—மாயப் பரத்தையரை-வஞ்சனையுடைய வேசிகளையும்,—முன்ன அரிய தாதியரை - இச்சிக்கத்தகாத தாசிகளையும்,—தழுவ நினையார் - சேர நினைக்கமாட்டார். எ - று. மற்று, ஏ அசை.

இ-ம். அறிவுடையோர் பாவத்துக்குப் பயந்து வியபிசாரஞ் செய்ய நினையார். எ-ம். (௪௧).

தன்னை யளித்தா டமையன் மனைகுருவின்
பன்னி யரசன் பயில்தேவி—தன்மனையைப்
பெற்றா ளிவ்வைவர் பேசி லெவருக்கு
நற்றாய ரென்றே நவில்.

இ - ள். பேசில் - சொல்லில்,—தன்னை அளித்தாள்-தன்னைப் பெற்றவளும்,—தமையன் மனை - தமையன் மனைவியும்,—குருவின் பன்னி - குருபத்தினியும்,—அரசன் பயில் தேவி - அரசன் மனைவியும்,—தன் மனையைப் பெற்றாள் - தன் மனைவியினுடைய தாயும் (ஆகிய),—இவர் ஐவர் - இந்த ஐந்துபேரையும்,—எவருக்கும் நற்றா

யர் என்றே நவில் - எல்லாருக்கும் பெற்ற தாய்மார் என்றே சொல்வாயாக. எ - று.

இ-ம். தமையன் மனைவி, குருபத்தினி, அரசன் மனைவி, மாமி ஆகிய இவர்களைத் தம்மைப் பெற்ற தாயர்களாக மதித்தல் வேண்டும். எ-ம். (சஉ)

வாவியுறை நீரும் வடநிழலும் பாவகமும்
ஏவனைய கண்ணா ரிளமுலையும்—ஓவியமே
மென்சீத காலத்து வெம்மைதரும் வெம்மைதனில்
இன்பாருஞ் சீதளமா மே.

இ - ள். ஓவியமே - சித்திரப்பாவை போன்றவளே,—வாவி உறை நீரும் - தடாகத்திலுள்ள ஜலமும்,—வட நிழலும் - ஆலமர நிழலும்,—பாவு அகமும் - பாவுகற் போட்ட (உள்) வீடும்,—ஏ அனைய கண்ணார் இளமுலையும் - அம்புபோலுங் கண்களையுடைய பெண்களது இளமையாகிய தனமும்,-மென் சீத காலத்து வெம்மை தரும் - மென்மையாகிய சீதளகாலத்தில் வெப்பத்தைக் கொடுக்கும்,—வெம்மை தனில்-உஷ்ணகாலத்தில்,—இன்பு ஆரும் சீதளம் ஆம்-இன்பத்தைச செய்கின்ற சீதளத்தைத் தரும். எ-று. ஏ அசை.

இ-ம். தடாகநீர் முதலியவைகள் சீதளகாலத்தில் உஷ்ணத்தையும், உஷ்ணகாலத்திற் சீதளத்தையும் கொடுக்கும். எ-ம். (சந)

உற்றதொழில் செய்வோர்க் குறுபஞ்ச மில்லையாம்
பற்றுசெபத் தோர்க்கில்லை பாவங்கள்—முற்றும்
மவுனத்தோர்க் கில்லை வருகலகந் துஞ்சாப்
பவனத்தோர்க் கில்லை பயம்.

இ - ள். உற்ற தொழில் செய்வோர்க்கு உறு பஞ்சம் இல்லை - (தமக்கு) இயைந்த தொழிலைச் செய்பவர்களுக்கு வருகின்ற தரித்திரம் இல்லை,—பற்று செபத்தோர்க்கு பாவங்கள் இல்லை - (மன அன்போடு) பொருந்திய செபத்தையுடையவர்களுக்குப் பாவங்கள் இல்லை,—முற்றும் மவுனத்தோர்க்கு வருகலகம் இல்லை - மிகுந்த மௌனமுடையவர்களுக்கு வருகின்ற கலகம் இல்லை,—துஞ்சாப்

பவனத்தோர்க்குப் பயம் இல்லை - நித்திரை செய்யாத விண்ணுலகத்திலிருக்கும் தேவர்களுக்குப் பயம் இல்லை. எ - று. ஆம் அசை.

இ-ம். தொழில் செய்வோர்க்குப் பஞ்சமும், செபஞ் செய்வோர்க்குப் பாவமும், மௌனிகளுக்குக் கலகமும், தேவர்களுக்குப் பயமும் இல்லை. எ-ம். (௪௪)

ஆபத்து வந்தா லரும்பொருடான் வேண்டுமே
ஆபத்தேன் பூமா தருகிருந்தால்—ஆபத்து
வந்தா லவளு மருவாம லெப்பொருளும்
அந்தோ வுடன்போ மறி.

இ - ள். ஆபத்து வந்தால் அரும் பொருள் வேண்டுமே - (ஒருவனுக்கு) ஆபத்து வந்தால் (அதனை நீக்கிக்கொள்ளுதற்குக் கருவியாகிய) அரிய திரவியம் வேண்டுமல்லவா,—பூமாது அருகு இருந்தால் ஆபத்து என் - சீதேவி (அவனுக்குக்) கிட்ட இருந்தால் ஆபத்து என் (வரும்),—ஆபத்து வந்தால் அவளும் மருவாமல் - ஆபத்து வந்தால் அந்தச் சீதேவியும் (அவனிடத்து) இராமல் நீங்குதலால்,—எப்பொருளும் அந்தோ உடன் போம் - (அவனிடத்து முன்னுள்ள) எப்பொருள்களும் ஐயோ (அவளோடு) கூடப் போய் விடும்.—அறி - நீ இதனை அறிவாயாக. எ - று. தான் அசை.

இ-ம். ஒருவனுக்குக் கஷ்டகாலம் வரும்பொழுது செல்வம் அழியத் தரித்திரம் வரும். எ-ம். (௪௫)

இன்ன றரும்பொருளை யீட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—அன்ன
தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பால்
இழத்தலுந் துன்பமே யாம்.

இ - ள். பொருளை ஈட்டுதலும் துன்பமே - பொருளைச் சம்பாதித்தலும் துன்பமே,—பின் அதனைப் பேணுதலும் துன்பமே - பின்பு அதனைப் பாதுகாத்தலும் துன்பமே,—அன்னது அழித்தலும் துன்பமே - அதனைச் செலவழித்தலுந் துன்பமே,—பிறர்பால் இழத்தலுந் துன்பமே ஆம் - பிறரிடத்து (அதனைக் கொடுத்து) இழத்தலுந் துன்பமேயாம்.—அந்தோ இன்னல் தரும் - ஐயோ (பொருள் எப்பொழுதும்) துன்பத்தைத் தரும். எ - று.

இ-ம். பொருளைச் சம்பாதித்தல் காப்பாற்றல் முதலியவற்றி ஞலே துன்பம் உண்டாகும். எ-ம். (சசு)

தானே புரிவினையாற் சாரு மிருபயனுந்
தானே யனுபவித்த றப்பாது—தானூறு
கோடிகற்பஞ் சென்றாலுங் கோதையே செய்தவினை
நாடிநிற்கு மென்றார் நயந்து.

இ - ள். கோதையே - பெண்ணே,—தான் புரி வினையாலே இரு பயனும் சாரும் - (ஒருவனுக்குத்) தான் செய்த இருவினையி ஞல் இன்பத்துன்பங்களாகிய இரண்டும் வரும்,—தானே அனுப வித்தல் தப்பாது-(அவைகளைத்) தானே அனுபவித்தல் தவறாது— செய்த வினை - (ஒருவன்) செய்த இருவினைகளும்,—நூறு கோடி கற்பம் சென்றாலும் - நூறு கோடி கற்பகாலங் கழிந்தாலும்— நயந்து நாடி நிற்கும் என்றார்-(செய்த அவனை) விரும்பித்தேடி நிற் கும் என்று (அறிஞர்) சொன்னார். எ - று. தான் அசை.

இ-ம். இருவினைப் பயன்களாகிய இன்பத்துன்பங்கள் செய்த வனைச் சென்றடைதல் தப்பாது. எ-ம். (சஎ)

தூய வறிவினர்முன் சூழ்துன்ப மில்லையாங்
காயும் விடங்கருடற் கில்லையாம்—ஆயுங்காற்
பன்முகஞ்சேர் தீமுன் பயில்சீத மில்லையாந்
துன்முகனுக் குண்டோ சுகம்.

இ - ள். ஆயுங்கால்-ஆராயுமிடத்து,—காயும் விடம் கருடற்கு இல்லை - கொல்லுகின்ற விஷம் கருடனுக்கு (ஒன்றுஞ் செய்வது) இல்லை (அதுபோல),—தூய அறிவினர் முன் சூழ் துன்பம் இல்லை - சுத்தமாகிய மெய்ஞ்ஞானமுடையவருக்கு வருந்துன்பம் (ஒன்றுஞ் செய்வது) இல்லை,—பல் முகம் சேர் தீமுன் பயில் சீதம் இல்லை - ஏழு நாக்கைளயுடைய அக்கினிக்குப் பொருந்திய குளிர்ச்சி இல்லை (அதுபோல)—துன்முகனுக்குச் சுகம், உண்டோ - துட்டனுக்கு இன்பம் உண்டோ (இல்லை.) எ - று. ஆம் அசை.

இ-ம். ஞானிகளுக்குத் துன்பமும், மூடருக்கு இன்பமும் இல்லை. எ-ம். (சஅ)

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்றிவரோ
டின்புறத்தா னுண்ட லினிதாமே—அன்புறவே
தக்கவரை யின்றித் தனித்துண்ட றுன்கவர்மீன்
கொக்கருந்த லென்றே குறி.

இ - ள். தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் என்ற இவரோடு - பிதிரரும் தெய்வமும் விருந்தினரும் சுற்றத்தாரும் என்று சொல்லப்பட்ட (இவர்களுக்குக் கொடுத்து) இவர்களோடு—தான் இன்பு உற உண்டலே இனிது ஆம் - தானும் இன்பம் மிக உண்ணுதலே நல்லதாம்.—அன்பு உறத் தக்கவரை இன்றித் தனித்து உண்டல் - அன்புண்டாகும்படி தகைமையையுடைய இவர்களுக்குக் கொடாமல் தான் மாத்திரம் உண்ணுதல்,—கொக்கு தான் கவர் மீன் அருந்தல் என்றே குறி - கொக்கானது தான் கவர்ந்த மீனைத் (தனித்திருந்து) உண்ணுதல் (போலும்) என்றே எண்ணுவாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். தென்புலத்தார் முதலாயினோருக்குக் கொடாதுண்ணும் உணவு இழிவுள்ளது. எ-ம். (சக)

இந்திரவி நீள்கிரண மெங்கு நிறைந்தாலும்
இந்திரவி காந்தத் திலகுமே—இந்திரவி
நேத்திரத்தோ னெங்கு நிறைந்தாலு நித்தனருள்
நேத்திரத்தோர் பாலே நிறைவு.

இ - ள். இந்து இரவி நீள் கிரணம் எங்கும் நிறைந்தாலும் - சந்திர சூரியர்களுடைய நீண்ட கிரணங்கள் எவ்விடங்களிலும் நிறைந்திருந்தாலும்,—இந்து இரவி காந்தத்து இலகும் - சந்திரகாந்தம் சூரியகாந்தம் என்னுங் கற்களில் (வெளிப்பட) விளங்கும் (அது போல),—இந்து இரவி நேத்திரத்தோன் எங்கும் நிறைந்தாலும்-சந்திர சூரியர்களைக் கண்களாகவுடைய சிவபெருமான் எங்கும் வியாபித்திருந்தாலும்,-நித்தன் நிறைவு-நித்தியராகிய அக்கடவுள்வெளிப்பட வியாபித்திருத்தல்,—அருள் நேத்திரத்தோர் பாலே - அருட்கண்ணையுடையர்களாகிய ஞானிகளிடத்தே யாம். எ-று. ஏ அசை.

இ-ம். சிவபெருமான் எங்கும் வியாபித்திருப்பினும், ஞானிகளிடத்தில் வெளிப்பட்டு விளங்குவர். எ-ம். (ருO)

தாமோ தரன்முதலோர் சாதனூல் சாற்றுவதும்
பூமேலோர் பொன்றுவதுங் கண்டோமே—நாமுடலை
நேசிப்ப தென்னோ நிலையாகுஞ் சங்கரனைப்
பூசிப்ப தென்றே புகல்.

இ - ள். தாமோதரன் முதலோர் சாதல் நூல் சாற்றுவதும் - விஷ்ணுமுதலாகிய தேவர்கள் இறத்தலை நூல்கள் சொல்லுதலை யும்,—பூமேலோர் பொன்றுவதுங் கண்டோமே - பூமியிலுள்ள மனி தர்கள் இறப்பதையும் (முறையே காதாலும் கண்ணாலும்) அறிந் தோமே.—நாம் உடலை நேசிப்பது என் - நாம் (நிலையில்லா இந்த) உடம்பை விரும்பிப் பாதுகாப்பது என்ன அறியாமை!—சங்கரனைப் பூசிப்பதே நிலை ஆகும் என்று புகல் - சிவபெருமானை அருச்சனை செய்வதே (செய்யத்தக்க) நிலையான சிவபுண்ணியம் என்று சொல் வாயாக. எ - று. ஓ அசை.

இ-ம். நிலையில்லாத உடம்பைப் பாதுகாப்பதை விட்டு நிலை யுள்ள சிவபூசையைச் செய்க. எ-ம். (ருக)

அரசி னிலையதனி னக்கிரத்தி னின்று
விரைய விழுதுளியே போலும்—புரையுடைய
ஆக்கைவிடா முன்ன மரன்பாதம் பூசித்தல்
நோக்கனன் றென்றே நுவல்.

இ - ள். அரசின் இலையதனின் அக்கிரத்தின் நின்று - அரசிலை யினுனியிலிருந்து,—விரைய விழுதுளியே போலும் - (தங்காது) விரைந்து விழுகின்ற திவலையையே யொக்கும்,—புரை உடைய ஆக்கை விடா முன்னம் - (தங்காது விரைந்தழியும்) குற்றத்தை யுடைய உடம்பு நீங்குதற்கு முன்னே,—அரன் பாதம் பூசித்தல் - சிவபெருமானுடைய திருவடிகளைப் பூசனை செய்தலும்,—நோக்கல்- தரிசித்தலும்,—நன்று என்றே நுவல் - நல்லதென்றே சொல்வா யாக. எ - று.

இ-ம். நிலையாத உடம்பு அழியுமுன்னே சிவார்ச்சனை செய்ய வேண்டும். எ-ம். (ருஉ)

சத்தியத்தை வெல்லா தசத்தியந்தா னீள்பொறையை
மெத்திய கோபமது வெல்லாது—பத்திமிகு
புண்ணியத்தைப் பாவமது வெல்லாது போரரக்கர்
கண்ணனைத்தான் வெல்லுவரோ காண்.

இ - ள். போர் அரக்கர் கண்ணனை வெல்லுவரோ - போரைச் செய்கின்ற இராக்ஷதர்கள் விஷ்ணுவை வெல்வார்களோ (வெல்ல மாட்டார்) அதுபோல,—அசத்தியம் சத்தியத்தை வெல்லாது - பொய் மெய்யை வெல்லாது;-மெத்திய கோபமது நீள் பொறையை வெல்லாது - மிகுந்த கோபம் மேலான பொறுமையை வெல்லமாட்டாது;—பாவமது பத்தி மிகு புண்ணியத்தை வெல்லாது - பாவமானது அன்பு மிகுகின்ற புண்ணியத்தை வெல்லமாட்டாது.—காண் - (இதனை நீ) அறிவாயாக. எ - று. தான் அசை.

இ-ம். பொய் மெய்யையும், கோபம் பொறுமையையும், பாவம் புண்ணியத்தையும் வெல்லமாட்டா. எ-ம். (ருங)

பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலினோர்
நற்புதல்வ னைப்பெறுத னன்றாமே—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததினா லேதுபயன்
ஒன்றமையா தோகரிக்கன் றோது.

இ - ள். பொன்கொடியே - பொன்மயமாகிய கொடிபோல் வாளே,—பொற்பு அறிவு இல்லாத பல புத்திரரைப் பேறலின்-அழகைச்செய்யும் அறிவில்லாத பல புத்திரரைப் பெறுவதிலும்,—ஓர் நல் புதல்வனைப் பெறுதல் நன்று ஆம் - ஒரு நல்ல புத்திரனைப் பெறுதல் நல்லதாம்.—பன்றி பல குட்டி பயந்ததினால் பயன் ஏது - பன்றி பல குட்டிகளைப் பெற்றதனாற் பிரயோசனம் யாது,—கரிக் கன்று ஒன்று அமையாதோ - யானைக்கன்று ஒன்று போதாதோ,—ஓது - நீ சொல்வாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். அறிவில்லாத பல புதல்வரைப் பெறுதலினும் அறிவுள்ள ஒரு புதல்வனைப் பெறுதல் நல்லது. எ-ம். (ருச)

அத்திமலரு மருங் காக்கை வெண்ணிறமுங்
கத்துபுனன் மீன்பதமுங் கண்டாலும்—பித்தரே
கானார் தெரியற் கடவுளருங் காண்பரோ
மானார் விழியார் மனம்.

இ - ள். பித்தரே - (பெண்களுடைய மனத்தை அறியலாம் என்கின்ற) அறிவிலிகளே,—அத்தி மலரும் - அத்திப் பூவையும்,—காக்கை அரும் வெண் நிறமும் - காக்கையினிடத்து அருமையாகிய வெள்ளை நிறத்தையும்,—கத்து புனல் மீன் பதமும்-ஒலிக்கின்ற கடலிலே மீனின் அடிச்சுவட்டையும்,—கண்டாலும் - பார்த்தாலும்,—மான் ஆர் விழியார் மனம் - மான்போலும் (மருண்ட) பார்வையையுடைய பெண்களின் மனத்தை,—கான் ஆர் தெரியல் கடவுளரும் காண்பரோ - வாசனைபொருந்திய மாலையையுடைய தேவர்களும் அறிவார்களோ! எ - று.

இ-ம். பெண்களுடைய மனத்தை அறிதல் எவர்க்கும் அரிது. எ-ம். (௫௫)

காளவிடப் பாந்தள் கருடனையுங் கட்டுமோ
வாளெரியைக் கட்டுமோ வன்கயிறு—நீளும்
பவமருளும் பாசம்வெம் பஞ்சேந் திரியஞ்
சிவயோகி யைப்பிணியா வே.

இ - ள். காள விடம் பாந்தள் கருடனையும் கட்டுமோ - கருமையாகிய நஞ்சையுடைய பாம்பு கருடனையும் கட்டுமோ (கட்டாது),—வன் கயிறு வாள் எரியைக் கட்டுமோ - வலிய கயிறு ஒளியையுடைய நெருப்பைக்கட்டுமோ (கட்டாது இவை போல),—நீளும் பவம் அருளும் பாசம் வெம்பஞ்சேந்திரியம் - மிகுகின்ற பாவத்தைக்கொடுக்கும் பாசங்களும் கொடிய ஐம்பொறிகளும்,—சிவயோகியைப் பிணியா-சிவயோகியைத் துன்பஞ் செய்யமாட்டா. எ - று. ஏ அசை.

இ-ம். சிவயோகிகள் பாசங்களினாலும் ஐம்பொறிகளினாலும் துன்பப்படார். எ-ம். (௫௬)

அ

புத்தியொடு முத்திதரும் புண்ணியத்தா லன்றியே
மத்தமிகு பாவத்தால் வாழ்வாமோ—வித்துபயிர்
தாயாகி யேவளர்க்குந் தண்புனலா லல்லாது
தீயால் வளருமோ செப்பு.

இ - ள். வாழ்வு - நல்வாழ்வானது,—புத்தியொடு முத்திதரும் புண்ணியத்தால் அன்றி - போகமோக்ஷங்களைக் கொடுக்கின்ற புண்ணியத்தினல் (உண்டாகும்) அல்லாமல்,—மத்தம் மிகு பாவத்தால் ஆமோ-அறியாமையால் வளர்கின்ற பாவத்தினல் உண்டாகுமோ! வித்து பயிர் - விதைத்துண்டாக்கும் பயிர்,—தாய் ஆகி வளர்க்கும் தண் புனலால் அல்லாது - தாயைப்போலத் (தன்னை) வளர்க்கின்ற குளிர்ச்சியாகிய நீரினல் (வளர்வது) அல்லாமல்,—தீயால் வளருமோ செப்பு - நெருப்பினல் வளருமோ சொல்வாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். இன்பம் புண்ணியத்தினலன்றிப் பாவத்தினலுண்டாகாது. எ-ம். (௬எ)

சிவனே சிவனே சிவனேயென் பார்பின்
சிவனுமையா ளோடுந் திரிவன்—சிவனருளாற்
பெற்றவிளங் கன்றைப் பிரியாமற் பின்னேடிச்
சுற்று பசுப்போற் றொடர்ந்து.

இ - ள். சிவன் - சிவபெருமானனவர்,—சிவன் அருளால்-தம்முடைய அருளினல்,—சிவனே சிவனே சிவனே என்பார் பின் - சிவனே சிவனே சிவனே என்று மூன்றுதரஞ் சொல்லுபவர்களுக்குப் பின்னே,—பெற்ற இளம் கன்றை - (தான்) பெற்ற இளமையாகிய கன்றை,—பிரியாமல் பின் ஓடிச் சுற்று பசுப்போல் - விட்டு நீங்காமற் பின்னே ஓடிச் சுற்றித் திரிகின்ற (தாய்ப்) பசுவைப்போல,—உமையாளோடும் தொடர்ந்து திரிவன்-உமாதேவியாரோடும் இடைவிடாது கூடத்திரிவர். எ - று.

இ-ம். சிவபெருமான் தம்முடைய திருவருளினல் தமது திருநாமத்தை மூன்றுதரம் உச்சரிப்பவரைப் பிரியாமல் இரக்ஷிப்பர். எ-ம். (௬அ)

தாமுங்கொடார் கொடுப்போர் தம்மையுமீ யாதவகை
சேமஞ்செய் வாருஞ் சிலருண்டே—யேமநிழல்
இட்டுமலர் காய்கனிக ளீந்துதவு நன்மரத்தைக்
கட்டுமுடை முள்ளெனவே காண்.

இ - ள். ஏமம் நிழல் இட்டு - இன்பத்தைத் தரும் நிழலைச் செய்து,—மலர் காய் கனிகள் ஈந்து உதவும் நல்மரத்தை - புஷ்பங்களையும் காய்களையும் பழங்களையும் கொடுத்துதவிசெய்கின்ற நல்ல விருக்ஷத்தை,—கட்டும் உடை முள் என - சூழ்ந்த உடைவேல் முள்ளைப்போல,—தாமும் கொடார் - தாமும் (ஒன்றுங்) கொடாராய்,—கொடுப்போர் தம்மையும் ஈயாதவகை சேமம் செய்வாரும் சிலர் உண்டு - கொடுப்போரையும் கொடாத வண்ணந் தடுப்பவருஞ் சிலர் உளர்.—காண் - அறிவாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். தாமுங் கொடாது கொடுக்கின்ற பிறரையுந் தடுக்கும் பாதகர் பயன்படும் விருக்ஷத்தைச் சூழ்ந்த உடைவேல் முள்ளைப் போல்வர். எ-ம். (ருகூ)

ஆயுமலர்த் தேன்வண் டருந்துவது போலிரப்போர்
ஈயு மவர்வருந்தா தேற்றலறந்—தூயவிளம்
பச்சிலையைக் கீடமறப் பற்றி யரிப்பதுபோல்
அச்சமுற வாங்க லகம்.

இ - ள். வண்டு ஆயும் மலர்த் தேன் அருந்துவது போல்-வண்டானது ஆராயப்படுகின்ற (அலரும் பக்குவத்தையுடைய) பூவில் (அதனை வருத்தாது) தேனை உண்ணுவதுபோல,—இரப்போர் - யாசகர்கள்,—ஈயுமவர் வருந்தாது ஏற்றல் அறம் - கொடுப்போர் வருந்தாவண்ணம் (அவர் குறிப்பறிந்து) யாசித்தல் தருமமாம்.—கீடம்-புழுவானது,—தூய இளம் பச்சிலையை பற்றி அற அரிப்பது போல் - சுத்தமாகிய இளைய பச்சிலையை விடாது முழுதும் அரிப்பது போல,—அச்சம் உற வாங்கல் அகம் - (கொடுப்போர்) அச்சப்படும்படி (அவரைத் துன்பஞ்செய்து) வாங்குதல் பாவமாம். எ - று.

இ-ம். தாதாவை வருத்தாது வாங்குவது புண்ணியமும் அவனை வருத்தி வாங்குவது பாவமுமாம். எ-ம். (சுO)

மாதா மரிக்கின் மகனுவி னற்சுவைபோந்
தாதா வெனிற்கல்வி தானகலும்—ஓதினுடன்
வந்தோன் மரித்துவிடில் வாருவ்லி போமனையேல்
அந்தோ விவையாவும் போம்.

இ - ள். ஓதின் - சொல்லில்,—மாதா மரிக்கின் மகன் நாவின் நல் சுவை போம்-தாயிறந்தாற் புத்திரனுக்கு நாவினது நல்ல சுவை கெடும்,—தாதா எனில் கல்வி அகலும் - பிதா இறந்தாற் கல்வி கெடும்,—உடன் வந்தோன் மரித்துவிடில் வாகு வலிபோம் - சகோதரன் இறந்தாற் புயவலி கெடும்,—மனையேல் அந்தோ இவை யாவும் போம் - மனைவி இறந்தால் ஐயோ! (மேற்சொல்லிய) இவைகள் எல்லாம் கெடும். எ - று. தான். அசை.

இ-ம். தாயில்லாத சிறுவனுக்குப் போசன சுகமும், பிதா இல்லாத சிறுவனுக்குக் கல்வியும், சகோதரன் இல்லாதவனுக்குத் தைரியமும், மனைவியில்லாதவனுக்கு எல்லாச் சுகமும், கெடும். எ-ம். ()

ஓதுபொருள் கண்டோர்க் குறுமாசை நீதியிலாப்
பாதகரைக் கண்டோர்க்குப் பாவமாஞ்—சீதமலர்
கண்டோர்க் குறும்வாசங் கற்றமைந்த நற்றவரைக்
கண்டோர்க் குடனுங் கதி.

இ - ள். ஓது பொருள் கண்டோர்க்கு ஆசை உறும் - சொல்லப்படுந் திரவியத்தைப் பார்த்தோர்க்கு (அதில்) ஆசை மிகும்;—நீதி இலாப் பாதகரைக் கண்டோர்க்கு பாவம் ஆம் - ஒழுக்கமில்லாத பாதகர்களைப் பார்த்தவர்களுக்குப் பாவம் உண்டாம்;—சீதம் மலர் கண்டோர்க்கு வாசம் உறும் - குளிர்ச்சியாகிய பூக்களைப் பார்த்தவர்களுக்கு (அவற்றின்) வாசனை உண்டாகும்;—கற்று அமைந்த நல் தவரைக் கண்டோர்க்கு கதி உடன் ஆம் - படித்து அடங்கிய நல்ல தவமுடையோரைத் தரிசித்தவர்க்கு மோக்ஷம் உடனே கிடைக்கும். எ - று.

இ-ம். பாதகரைப் பார்த்தலாற் பாவமும், தவத்தரைத் தரிசித்தலாற் புண்ணியமும் உண்டாகும். எ-ம். (௬௨)

பாவிதனந் தண்டிப்போர் பாலாகு மல்லதருள்
மேவுசிவ னன்பர்பான் மேவாதே—ஓவியமே
நாயின்பா லத்தனையு நாய்தனக்கா மன்றியே
தூயவருக் காகுமோ சொல்.

இ - ள். ஓவியமே - சித்திரப்பாவை போல்வாளே,—பாவி தனம் - பாவியினுடைய திரவியம்,—தண்டிப்போர் பால் ஆகும் அல்லது-தண்டனைசெய்து வாங்குந் துட்டரிடத்துச் சேருமல்லாமல்,- அருள் மேவு சிவன் அன்பர்பால் மேவாது - அருளைப்பொருந்திய சிவனடியாரிடத்துச் சேராது:—நாயின் பால் அத்தனையும் நாய் தனக்கு ஆம் அன்றி - நாயின்பால் முழுதும் நாய்க்கு உதவுமே யன்றி,—தூயவருக்கு ஆகுமோ சொல்-சுசியையுடைய மனிதருக்கு உதவுமோ சொல்வாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். பாவியுடைய திரவியம் துட்டருக்கு மாத்திரம் உபயோகப்படும். எ-ம். (௬௩)

பொன்னுங் கரும்பும் புகழ்பாலுஞ் சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்று நலிந்தாலு முத்தமர்பால்
நற்குணமே தோன்று நயந்து.

இ - ள். பொன்னும் கரும்பும் புகழ் பாலும் சந்தனமும்-பொன்னையும் கரும்பையும் புகழப்படுகின்ற பாலையும் சந்தனத்தையும்,—சின்னம்பட வருத்தம் செய்தாலும் - துன்பப்படும்படி வருத்தினாலும்,—முன் இருந்த நற்குணமே தோன்றும் - (பின்னும் அவைகளிடத்து) முன்னிருந்த (ஒளியும் தித்திப்பும் வாசனையும் ஆகிய) நற்குணங்களே (மிகுந்து) வெளிப்படும்,—(அவைபோல)—உத்தமர் பால் - நல்லோரிடத்து,—நலிந்தாலும் - (அவரை) வருத்தப்படுத்தினாலும்,—நற்குணமே நயந்து தோன்றும் - (முன்னுள்ள) நல்ல குணமே மிகுந்து காணப்படும். எ - று.

இ-ம். நல்லோரை எப்படி வருத்தப்படுத்தினும், அவர் தம்முடைய நற்குணம் வேறுபடார். எ-ம். (௬௪)

வேசியரு நாயும் விதிநூல் வயித்தியரும்
பூசுரருங் கோழிகளும் பொன்னனையாய்—பேசிலொரு
காரணந்தா னின்றியே கண்டவுட னேபகையாங்
காரணந்தா னப்பிறப்பே காண்.

இ - ள். பொன் அனையாய் - சீதேவியை ஒப்பானவளே,—பேசில் - சொன்னால்,—வேசியரும்-பொதுப்பெண்களும்,—நாயும் - நாய்களும்,—விதி நூல் வயித்தியரும் - ஆயுள்வேதத்தை அறிந்த வைத்தியர்களும்,—பூசுரரும் - பிராமணர்களும்,—கோழிகளும் - கோழிகளும்,—ஒரு காரணம் இன்றி கண்ட உடனே பகை ஆம் காரணம் - ஓரேதுவுமின்றித் (தம்முள் ஒருவரையொருவர்) கண்டவுடனே விரோதமாதற்குக் காரணம்,—அப்பிறப்பே-அந்தப் பிறப்பின் குணமே,—காண் - (இதனை நீ) அறிவாயாக. எ - று. தான், ஏ அசை. விதிநூல் - ஆயுள்வேதம்.

இ-ம். ஆன்மாக்களுக்குப் பிறவிக்குணம் இயற்கையாயுள்ளது. எ-ம். (கூ௫)

அன்னமனை யாய்குயிலுக் கானவழ கின்னிசையே
கன்னன்மொழி யார்க்கழகு கற்பாமே—மன்னுகலை
கற்றோர்க் கழகு கருணையே யாசைமயக்
கற்றோர்க் கழகுபொறை யாம்.

இ - ள். அன்னம் அனையாய் - அன்னப்பக்ஷி போல்வாளே,—குயிலுக்கு ஆன அழகு இன் இசையே - குயிலுக்குப் பொருந்திய அழகு இனிய இசையேயாம்,—கன்னல் மொழியார்க்கு அழகு கற்பே ஆம் - கரும்புபோலும் (இனிமையாகிய) சொற்களையுடைய பெண்களுக்கு அழகு கற்பேயாம்,—மன்னுகலை கற்றோர்க்கு அழகு கருணையே - நிலைபெற்ற நூல்களைப் படித்தவர்களுக்கு அழகு அருளேயாம்,—ஆசை மயக்கு அற்றோர்க்கு அழகு பொறை ஆம் - அவாவையும் மயக்கத்தையும் நீங்கிய ஞானிகளுக்கழகு பொறுமையாம். எ - று.

இ-ம். பெண்களுக்குக் கற்பும், படித்தோர்க்கு இரக்கமும், ஞானிகளுக்குப் பொறுமையும், அழகைச்செய்யும். எ-ம். (கூகூ)

இதமகித வார்த்தை யெவர்க்கேனு மேலாம்
இதமெனவே கூறலித மன்றே—இதமுரைத்த
வாக்கினு லேரண்ட மாமுனியுஞ் சோழனொடு
தேக்குநீர் வீழ்ந்தொழிந்தான் சேர்ந்து.

இ - ள். எவர்க்கேனும் - (நல்லவர் தீயவர் ஆகிய) யாவர்க்காயினும்,—மேல் ஆம் இதம் என - மேலாகிய நன்மை என்று,—இதம் அகித வார்த்தை கூறல் இதம் அன்று-(முறையே) இன்பத்துன்பங்களைப் பயக்கின்ற சொற்களைச் சொல்லுதல் நன்மையன்று (எனெனில்).—ஏரண்ட மாமுனியும் - ஏரண்ட மகாமுனிவரும்,—இதம் உரைத்த வாக்கினுல் - (தாம்) இதமாகச் சொல்லிய சொல்லால்,—சோழனொடு சேர்ந்து தேக்கு நீர் வீழ்ந்து ஒழிந்தான் - சோழராசனோடு கூட மிகுந்த ஜலத்தில் வீழ்ந்து இறந்தார் (ஆதலால்.) எ-று.

இ-ம். நல்லவர்க்கு இதவசனமும் தீயவர்க்கு அகிதவசனமும் உறுதியைச் செய்வனவரயினும், அவை எல்லாரிடத்துஞ் சொல்லத் தக்கனவல்ல. எ-ம்.

முன்னொரு காலத்தில், காவேரியாறு திருவலஞ்சுழி என்னுந் தலத்துக்குச் சமீபத்திலே பூமிக்குட் சுழித்துக்கொண்டு போயிற்று. சோழராஜன் அதைக்கண்டு துன்பமடைந்து அதனை ஏரண்ட மாமுனிவருக்குச் சொல்ல, அவர் அந்தச் சுழியில் ஒரு முடித் தலையை அல்லது ஒரு சடைத்தலையைக் கொடுத்தால் ஆறு உள்ளே சுழித்திறங்காமல் மேலே பிரவாகிக்கும் என்றார். அரசன் ஆறு பெருகி உலகம் செழித்தல்வேண்டும் என்னுங் கருணையினுல் அந்தச் சுழியில் விழுந்தான். அதைக்கண்ட அம்முனிவர் நம்முடைய சொல்லினுலல்லவா அரசன் இறந்தான் என்று துக்கித்துத், தாமும் அச்சுழியில் விழுந்து இறந்தார். (கூஎ)

இத்தரையோர் தம்மி லிருவரே மேலானோர்
சித்திரச வாதி சிவயோகி—முத்தனையாய்
நல்குரவு முற்பவமு நாசம் புரிவாரே
அல்லவரே வீரியக் கீடம்.

இ - ள். முத்து அனையாய் - முத்துப்போல்வாளே,—இத்தரையோர் தம்மில் இருவரே மேல் ஆனோர் - இந்தப் பூமியிலுள்ள மனு

டரில் இருவரே மேலானவர்கள் (அவர் யார் யார் எனில்),—சித்தி ரசவாதி சிவயோகி - சித்தியையுடைய ரசவாதியும் சிவயோகியு மாம்—(என்னகாரணத்தினல் மேலானவர் எனின்),—நல்குரவும் உற்பவமும் நாசம்புரிவார் - (இந்த இருவரும் முறையே) தரித்திரத் தையும் பிறவியையும் கெடுப்பவராவர் (அதனல்),—அல்லவரே வீரி யக் கீடம் - இவரல்லாதவர்களே இந்திரியத்தாலான புழுக்கள். எ - று. ஏ அசை.

இ-ம். இரசவாதி செல்வத்தை அடைதலாலும், சிவயோகி மோக்ஷத்தை அடைதலாலும், இவர் இருவரும் மேலானவராக மதிக்கப்படுவர். எ-ம். (௬அ)

அற்றசிவ யோகிக் கருஞ்சின்ன மூன்றுண்டு
பற்றலகை யுன்மத்தர் பாலரியல்—முற்றுரச
வாதிக்குச் சின்னமூன் றுண்டே மகிழ்போகம்
ஈதல் இரவாமை யென்று.

இ - ள். அற்ற சிவயோகிக்கு-(எல்லாப் பற்றுக்களையும்) விட்ட சிவயோகிக்கு,—பற்று அலகை உன்மத்தர் பாலர் இயல் (என்று) - பிசாசரும் உன்மத்தரும் பாலரும் ஆகிய இவர்களுடைய குணங்க ளென்று,—அரும் சின்னம் மூன்று உண்டு - அருமையாகிய அடை யாளங்கள் மூன்று உள்ளன;—முற்று ரசவாதிக்கு - மேலான ரசவா திக்கு,—மகிழ் போகம் ஈதல் இரவாமை என்று - மகிழ்ச்சியை யுடைய அநுபவங்களும் கொடையும் யாசகஞ் செய்யாமையும் என்று,—சின்னம் மூன்று உண்டு - அடையாளங்கள் மூன்றுள் ளன. எ - று. ஏ அசை.

இ-ம். இங்கே சொல்லப்பட்ட மும்மூன்று குணங்களினற் சிவ யோகியையும் ரசவாதியையும் அறிந்துகொள்ளலாம். எ-ம். (௬௯)

வல்லவர்பாற் கல்வி மதமா ணவம்போக்கும்
அல்லவர்பாற் கல்வி யவையாக்கும்—நல்லிடத்தில்
யோகம் பயில்வா ருயர்ந்தோ ரிழிந்தோர்கள்
போகம் பயில்வார் புரிந்து.

இ - ள். வல்லவர் பால் கல்வி மதம் ஆணவம் போக்கும் - மேலோரிடத்துள்ள கல்வி அறிவின்மையையும் அகங்காரத்தையும்

கெடுக்கும்;—அல்லவர் பால் கல்வி அவை ஆக்கும் - கீழோரிடத்துள்ள கல்வி அவைகளை உண்டாக்கும்.—உயர்ந்தோர் நல் இடத்தில் யோகம் பயில்வார் - மேலோர் நல்ல தானத்திலிருந்து யோகப் பயிற்சி செய்வர்.—இழிந்தோர்கள் புரிந்து போகம் பயில்வார் - கீழோர்கள் விரும்பிப் போகங்களை அநுபவிப்பர். எ - று.

இ-ம். மேலோர் கல்வி நற்குணங்களை யுண்டாக்குதலால் அவர் யோகத்தை விரும்புவர்; கீழோர் கல்வி தீக்குணங்களை உண்டாக்குதலால் அவர் போகத்தை விரும்புவர். எ-ம். (எ0)

தீயவர்பாற் கல்வி சிறந்தாலு மற்றவரைத்
தூயவரென் றெண்ணியே துன்னற்க—சேயிழையே
தண்ணொளிய மாணிக்கஞ் சர்ப்பந் தரித்தாலு
நண்ணுவரோ மற்றதனை நாடு.

இ - ள். சேயிழையே - செப்பமாகிய ஆபரணத்தையுடைய பெண்ணே,—தீயவர் பால் கல்வி சிறந்தாலும் - பொல்லாதாரிடத்திற் கல்வி மிக விருந்தாலும்,—அவரைத் தூயவர் என்று எண்ணித் துன்னற்க - அவரை நல்லவர் என்று நினைத்துச் சேராதொழிக,—சர்ப்பம் தண் ஒளிய மாணிக்கம் தரித்தாலும் - (துட்டகுணமுள்ள) பாம்பு குளிர்ச்சியாகிய ஒளியையுடைய (நல்ல) மாணிக்க ரத்தினத்தை வைத்திருந்தாலும்,—அதனை நண்ணுவரோ - (மாணிக்கத்தை விரும்பி) அப்பாம்பை அடைவாரோ,—நாடு - (நீ இதனை) யோசிப்பாயாக. எ - று. ஏ, மற்று அசை.

இ-ம். தீயவர் மிகுந்த கல்வியுடையராயிருந்தாலும், அவரோடு பழகுதல் ஆகாது. எ-ம். (எக)

ஊரூ ரெனும்வனத்தே யொள்வாட்கண் மாதரெனுங்
கூரூர் விடமுட் குழாமுண்டே—சீரூர்
விரத்திவை ராக்ய விவேகத் தொடுதோல்
உரத்தணியத் தையாவென் றோது.

இ - ள். ஊர் ஊர் எனும் வனத்தே - (நாம்) சஞ்சரிக்கின்ற தேசம் என்னுங் காட்டில்,—ஒள் வாள் கண் மாதர் எனும் - ஒள்ளிய வாட்படைபோலுங் கண்களையுடைய பெண்கள் என்று சொல்லப்

படும்,—கூர் ஊசர் விடம் முள்குழாம் உண்டு - கூர்மை மிகுந்த நச்சு முள்ளின் கூட்டங்கள் உள்ளன.—சீர் ஊசர் விரத்தி - சிறப்பு மிகுந்த ஞானியானவன்,—விவேக வைராக்ய தொடுதோல் - விவேகத்தோடு கூடிய நிராசையாகிய செருப்பை,—உரத்து அணிய - மனமாகிய காலில் இட்டுக்கொள்ளுதலால்,—தையா என்று ஓது - (அம்முட்கள் அவனுக்குத்) தைக்க மாட்டா என்று சொல்வாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். ஞானிகள் நிராசையுடையவர்களாதலால், அவர்களுக்குப் பெண்ணாசை யில்லை. எ-ம். (எஉ)

போற்று குருகிளைஞர் பொன்னாசை யோர்க்கில்லை
தோற்றுபசிக் கில்லை சுவைபாகந்—தேற்றுகல்வி
நேசர்க் கிலைசுகமு நித்திரையுங் காமுகர்தம்
ஆசைக் கிலைபயமா னம்.

இ - ள். பொன் ஆசையோர்க்கு - பொருளாசையுடையோர்க்கு,—போற்று குரு கிளைஞர் இல்லை - துதிக்கப்படுகின்ற ஆசாரியரும் சுற்றத்தாரும் இல்லை;—தோற்று பசிக்கு சுவை பாகம் இல்லை - உண்டாகின்ற பசிக்கு ருசியும் சமையற்பக்குவமுமில்லை.—தேற்று கல்வி நேசர்க்கு சுகமும் நித்திரையும் இலை - (மனத்) தெளிவைக் கொடுக்கின்ற கல்வியில் விருப்பமுடையவர்களுக்குச் சுகமும் நித்திரையும் இல்லை,—காமுகர் தம் ஆசைக்கு பயம் மானம் இலை - தூர்த்தர்களுடைய பெண்ணாசைக்கு அச்சமும் அவமானமும் இல்லை. எ-று.

இ-ம். உலோபிகளுக்குக் குருவும் சுற்றமும், பசியுடையோர்க்குச் சுவையும் பாகமும், கல்வியில் விருப்பமுடையோர்க்குச் சுகமும் நித்திரையும், காமுகர்களுக்குப் பயமும் அவமானமும் இல்லை. எ-ம்.

நன்றறியாத் தீயோர்க் கிடங்கொடுத்த நல்லோர்க்குந்
துன்று கிளைக்குந் துயர்சேருங்—குன்றிடத்திற்
பின்னிரவில் வந்தகரும் பிள்ளைக் கிடங்கொடுத்த
அன்னமுதற் பட்டதுபோ லாம்

இ - ள். நன்று அறியாத் தீயோர்க்கு இடம் கொடுத்த நல்லோர்க்கும் - உபகாரத்தை நினையாத துட்டருக்கு இடங்கொடுத்த

நல்லவர்களுக்கும்,—துன்று கிளைக்கும் துயர் சேரும் - நெருங்கிய (அவருடைய) சுற்றத்தார்க்கும் துன்பம் உண்டாம். (அது எது போலும் எனில்),—முதல் - முன்னளில்,—குன்றிடத்தில் இரவில் வந்த கரும்பிள்ளைக்கு இடங்கொடுத்த அன்னம் - மலையிலே இராத்திரியில் வந்தகாகத்துக்கு (இருக்க) இடங்கொடுத்த அன்னப்பக்ஷியானது,—பின் பட்டது போல் ஆம் - பின் (அதனல்) அடைந்த துன்பத்தைப் போலாம். எ - று.

இ-ம். உபகாரத்தை நினையாத . தீட்டருக்கு இடங்கொடுத்த நல்லோர் அவராலே தங்கிளையோடு துன்பத்தை அடைவர். எ-ம்.

எவராலும் ஏறமுடியாத ஒரு பெரிய மலைக்குகையில் ஓர் அரச அன்னம் அன்னப்பட்சிகளோடு வாசஞ்செய்து கொண்டிருக்கும் போது, ஒருநாளிரவு பெருமழையினல் வருந்திய ஒரு காக்கை தான் இருக்க இடங்கேட்டது. மந்திரியாகிய அன்னம் காக்கைக்கு இடங்கொடுக்கலாகாதென்று சொல்லவும், அரசவன்னம் அதன் சொல்லைக்கேளாமற் காக்கைக்கு இடங்கொடுத்தது. காக்கை அன்றிரவில் அங்கே தங்கி எச்சமிட, அவ்வெச்சத்திலிருந்து ஆலம் வித்து முளைத்தெழுந்து, பெரிய விருக்ஷமாகி, விழுதுகளை விட்டது. ஒரு வேடன் விழுதுகளைப் பற்றிக்கொண்டு அம்மலையிலேறிக் கண்ணிவைத்து அன்னங்களைப் பிடித்தான். (எச)

மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும்—அனமே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளு மொன்றே
கனமொன்று மேலவர்தங் கண்.

இ - ள். அனமே - அன்னம்போல்வாளே,—வினை வேறுபட்டவர் பால் - அநீதியாகிய செயல்களையுடைய கீழோரிடத்து,—மனம் வேறு சொல் வேறு மன்னு தொழில் வேறு மேவும் - மனம்வேறும் வாக்குவேறும் பொருந்திய செய்கை வேறுமாயிருக்கும்.—கனம் ஒன்று மேலவர் தம் கண் - கனம் பொருந்திய மேலோரிடத்தில்,— மனம் ஒன்று சொல் ஒன்று வான்பொருளும் ஒன்றே - மனமும் ஒன்று வாக்கும் ஒன்று பெருமையாகிய செயலும் ஒன்றேயாம். எ - று.

இ-ம். கீழோருக்கு மனஞ்சொற் செயல்கள் வேறுபட்டும், நல்லோருக்கு அவை ஒற்றுமைப்பட்டு மிருக்கும். எ-ம். (எரு)

கண்ணுக் கினிய சபைக்குமணி கற்றோனே
விண்ணுக் கினியமணி வெய்யோனே—வண்ணநறுஞ்
சந்த முலையாள் சயனத் தினியமணி
மைந்தன் மனைக்கு மணி.

இ-ள். சபைக்கு கண்ணுக்கு இனிய மணி கற்றோனே-சபைக்குக் கண்ணுக்கினியதாகிய இரத்தினம் வித்துவானே.-விண்ணுக்கு இனியமணி வெய்யோனே-ஆகாயத்துக்கு இனிதாகிய இரத்தினம் சூரியனே,—சயனத்து இனியமணி வண்ணநறும் சந்த முலையாள் - சயனத்துக்கு இனிய இரத்தினம் அழகிய நறுமணம் பொருந்திய சந்தனத்தை அணிகின்ற தனங்களையுடைய மனைவியாம்,—மனைக்கு மணி மைந்தன் - வீட்டுக்கு இரத்தினம் சிறுவனும். எ - று.

இ-ம். சபைக்கு வித்துவான்களும், ஆகாசத்துக்குச் சூரியனும், சயனத்துக்கு மனைவியும், வீட்டுக்குப் புதல்வனும் அழகைச் செய்வர். எ-ம். (எசு)

பாலினீர் தீயணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையு மேன்மைபோல்—நூலினெறி
உற்றோ ரிடுக்க ணுயிர்கொடுத்து மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து.

இ - ள். பாலின் நீர் தீ அணுக - பாலோடுகூடிய நீரை நெருப்பு அணுகிச் சுட,—பால் வெகுண்டு தீப்புகிந்து-பாலானது (பொறாது) பொங்கி நெருப்பினுட் புகுந்து (அதனை அவித்து),—மேலும் நீர் கண்டு அமையும் மேன்மை போல் - பின்னும் நீரைக்கண்டு (தான்) அடங்கும் மேன்மையைப்போல,—நூலின் நெறி உற்றோர் - நூல் விதிப்படி நடக்கின்ற பெரியோர்கள்,—இடுக்கண்-(தம்மை அடுத்த பிறருக்கு வந்த) ஆபத்தை,—மற்றோர் புகல - பிற நல்லோர் (தம்மைப்) புகழ,—மதித்து உயிர் கொடுத்தும் மாற்றுவர் - (நமக்குறுதி இதுவென்று) நினைத்துத் (தம்முடைய) உயிரைக் கொடுத்தும் நீக்குவர். எ - று. ஏ அசை.

இ-ம். மேலோர்கள் தம்முயிரைக் கொடுத்தும், தம்மை அடுத்த நல்லோர்க்கு வந்த ஆபத்தை நீக்குவர். எ-ம். (எள)

அந்தோ புரமெரித்த வண்ணலடி யார்பொருள்கள்
செந்தீ யினுங்கொடிய தீகண்டாய்—செந்தீயை
நீங்கிற் சுடாதே நெடுந்தூரம் போனாலும்
ஏங்கச் சுடுமே யிது.

இ - ள். புரம் எரித்த அண்ணல் அடியார் பொருள்கள் - முப்புரங்களை எரித்த சிவபெருமானுடைய அடியார்களுடைய திரவியங்கள்,—செம் தீயினும் கொடிய தீ கண்டாய் - சிவப்பாகிய அக்கினியிலும் பார்க்கக் கொடிய அக்கினி என்று அறிவாயாக.—செம் தீயை நீங்கில் சுடாது-செம்மையாகிய நெருப்பை நீங்கினால் (அது) சுடாது.—அந்தோ - ஐயோ! இது - (சிவனடியார் திரவியமாகிய) இந்நெருப்பு,—நெடும் தூரம் போனாலும் ஏங்கச் சுடுமே - அதிக தூரம் போனாலும் ஏங்கும்படி சுடுமே. எ - று. ஏ அசை.

இ-ம். நீங்கினாற் சுடாத நெருப்பைப் பார்க்கிலும், நீங்கினாலுஞ் சுடுஞ் சிவனடியார் திரவியாபகாரம் கொடியது. எ-ம். (எஅ)

நிந்தையிலாத் தூயவரு நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் றன்பா லருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார்.

இ - ள். நிந்தை இலாத் தூயவரும் நிந்தையரைச் சேரில் - இகழப்படாத மேலோரும் இகழப்படுங் கீழோரைச் சேர்ந்தால்,—அவர் நிந்தையது தம்மிடத்தே நிற்கும் - அவருக்குரிய இகழ்ச்சி தம்மிடத்தும் நிலைபெறும்:—நிந்தை மிகு தால நிழல் கீழ் இருந்து ஆன்பால் அருந்திடினும் - இழிவு மிகுந்த பனையினிழலிலிருந்து பசுவின்பாலைக் குடித்தாலும்,—அது பால் எனச் சொல்லுவரோ - அதனைப் பாலென்று சொல்லுவார்களோ!—பார்-(இதனை) ஆலோசிப்பாயாக. எ - று. ஏ அசை; தன் சாரியை.

இ-ம். கீழோருடைய சகவாசத்தால் மேலோர் இகழப்படுவர். எ-ம். (எகூ)

கன்மமே பூரித்த காயத்தோர் தஞ்செவியிற்
றன்மநூல் புக்காலுந் தங்காதே—சன்மமெலும்
புண்டு சமிக்குநா யூணாவி னெய்யதனை
உண்டு சமிக்குமோ வோது.

இ - ள். கன்மமே பூரித்த காயத்தோர் செவியில் - பாவமே நிறையப்பெற்ற சரீரத்தையுடைய பொல்லாதோருடைய காதில்,—தன்ம நூல் புக்காலும் தங்காது - தருமசாஸ்திரம் உபதேசிக்கப்பட்டாலும் (மனத்தில்) தங்காது,—சன்மம் எலும்பு உண்டு சமிக்கும் நாய் - தோலையும் எலும்பையும் உண்டு திருப்தியடையும் நாயானது,—ஆவின் நெய் ஊண் அதனை உண்டு சமிக்குமோ - பசுநெய் கலந்த உணவை உண்டு திருப்தியடையுமோ!—ஒது - சொல்வாயாக. எ - று. தம் சாரியை; ஏ அசை. சர்மம் சன்மம் என்றும், க்ஷமித்தல் சமித்தல் என்றும், ஆயின. சர்மம் - தோல். க்ஷமித்தல்-பொறுத்தல், அஃதாவது இங்கே திருப்தியடைதல்.

இ-ம். பாவிகளுக்குத் தர்மசாஸ்திரத்தை உபதேசித்தாலும், அது அவர் மனத்திலே தங்காது. எ-ம். (அ0)

பெண்ணுதவுங் காலை பிதாவிரும்பும் வித்தையே
எண்ணி றனம்விரும்பு மீன்றதாய்—நண்ணிடையிற்
கூரியநற் சுற்றங் குலம்விரும்புங் காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்.

இ - ள். பெண் உதவுங் காலை - பெண்ணை விவாகஞ்செய்து கொடுக்கும் பொழுது,—பிதா வித்தை விரும்பும் - (அவளுடைய) தகப்பன் (கணவனுடைய) கல்வியை விரும்புவான்.—ஈன்றதாய் எண் இல் தனம் விரும்பும் - பெற்றதாய் அளவிறந்த திரவியத்தை விரும்புவாள்.—இடையில் நண் கூரிய நல் சுற்றம் குலம் விரும்பும்-(இவர்களுக்கு) இடையிற் பொருந்திய மிகுந்த நல்ல சுற்றத்தார் குலத்தை விரும்புவர்.—பெண்-(அப்)பெண்ணானவள்,—காந்தனது பேரழகு விரும்பும் - நாயகனுடைய பேரழகை விரும்புவாள். எ-று. ஏ, தான் அசை.

இ-ம். ஒரு பெண்ணை விவாகஞ்செய்து கொடுக்கும்போது, பிதா நாயகனுடைய கல்வியையும், தாய் செல்வத்தையும், சுற்றத்தார் குலத்தையும், பெண் அழகையும் விரும்புவது இயற்கை. எ-ம்.

காந்துநறும் புண்ணைக் கலந்தீ விரும்புமே
வேந்தர் தனமே விரும்புவார்—சாந்தநூல்
கல்லார் பகைசேர் கலகம் விரும்புவார்
நல்லார் விரும்புவார் நட்பு.

இ - ள். ஈ காந்தும் நறும் புண்ணை கலந்து விரும்பும் - ஈயா னது காந்துகின்ற மணத்தையுடைய புண்ணைச் சேர்ந்து (அதனை) விரும்பும்.—வேந்தர் தனமே விரும்புவார் - அரசர் செல்வத்தையே விரும்புவார்.—சாந்த நூல் கல்லார் பகை சேர் கலகம் விரும்புவார் - அடக்கத்தைக் கொடுக்கும் நூல்களைப் படியாத மூடர் பகையை உண்டாக்குகின்ற கலகத்தை விரும்புவார்.—நல்லார் நட்பு விரும்பு வார் - நல்லவர் சிநேகத்தை விரும்புவார். எ - று. ஏ அசை.

இ-ம். அரசர் செல்வத்தையும், மூடர் கலகத்தையும், நல்லோர் சிநேகத்தையும் விரும்புவர். எ-ம். (அஉ)

கற்றைக் குழலார் கவினெல்லா மோர்மகவைப்
பெற்றக் கணமே பிரியுமே—கற்றருளை
வேட்ட பெரியோர் பெருமையெலாம் வேறொன்றைக்
கேட்ட பொழுதே கெடும்.

இ - ள். கற்றைக் குழலார் கவின் எல்லாம் - கூட்டமாகிய கூந்தலையுடைய பெண்களுடைய அழகு முழுதும்,—ஓர் மகவைப் பெற்ற அக்கணமே பிரியும் - ஒரு குழந்தையைப் பெற்ற அப்பொ ழுதே நீங்கும்—(அதுபோல),—கற்று அருளை வேட்ட பெரியோர் பெருமை எலாம் - (ஞானநூல்களைப்) படித்துக் (கடவுளுடைய) திருவருளை விரும்பிய ஞானிகளுடைய பெருமை முழுதும்,— வேறு ஒன்றைக் கேட்ட பொழுதே கெடும் - (அவ்வருளல்லாத) வேறொன்றைக் கேட்டவுடனே அழியும். எ - று. ஏ அசை.

இ-ம். விஷயப்பற்றுடைய ஞானிகள் இழிவை அடைவர். எ-ம். (அரு)

சீலங் குலமடியா டீண்டிற் கெடுங்கணிகை
ஆலிங் கனந்தனநா சம்மாகும்—நூலிழந்த
வல்லிதழு வக்குறையும் வாழ்நாள் பிறர்தாரம்
புல்லினர்க்கெல் லாநலமும் போம்.

இ - ள். அடியாள் தீண்டில் சீலம் குலம் கெடும் - தாசியைச் சேர்ந்தால் ஒழுக்கமும் சாதியும் கெடும்.—கணிகை ஆலிங்கனம் தன நாசம் ஆகும் - பொதுப்பெண்ணைச் சேர்ந்தாற் பொருள் அழியும்.—நூல் இழந்த வல்லி தழுவ வாழ்நாள் குறையும் - திருமங்கலியம் நீங்கிய விதவையைச் சேர்ந்தால் ஆயுசு குறையும்.—பிறர் தாரம் புல்லினர்க்கு எல்லா நலமும் போம் - பிறர் மனைவியரைச் சேர்ந்தவர்க்கு எல்லா நன்மையும் கெடும். எ - று.

இ-ம். தாசியை விரும்புவோருக்கு ஒழுக்கமும் குலமும், வேசியை விரும்புவோருக்குத் திரவியமும், விதவையை விரும்புவோர்க்கு ஆயுசும், பிறன் மனையாளை விரும்புவோர்க்கு எல்லாநலமும் அழியும். எ-ம். (அச)

சத்தியமெக் காலுஞ் சனவிருத்த மாகுமே
எத்தியபொய் யார்க்கு மிதமாகும்—நத்தியபால்
வீடுதொறுஞ் சென்று விலையா மதுவிருந்த
வீடுதனி லேவிலையா மே.

இ - ள். நத்திய பால் வீடு தொறும் சென்று விலையாம் - (உடம்பை) வளர்க்கின்ற பால் வீடுதோறும் போய் விலைப்படும்:—சத்தியம் எக்காலும் சன விருத்தம் ஆகும் - (உயர்வாகிய) உண்மை எப்பொழுதும் (இழிந்த) சனங்களுக்கு வெறுப்பைத் தருவதாயிருக்கும்.—மது இருந்த வீடுதனில் விலை ஆம்-(இழிந்த) கள்ளுந் தானிருந்த வீட்டில் விலைப்படும்:—எத்திய பொய்யார்க்கும் இதம் ஆகும்-மயக்குகின்ற (இழிவாகிய) பொய் (அந்தச்) சனங்கள் எல்லாருக்கும் விருப்பத்தைத் தருவதாயிருக்கும். எ - று. ஏ அசை.

இ-ம். இழிசனங்கள் வெறுத்தலால் மெய்க்கு இழிவும் அவர் விரும்புதலாற் பொய்க்கு உயர்வும் இல்லை. எ-ம். (அரு)

நல்லொழுக்க மில்லா ரிடஞ்சேர்ந்த நல்லோர்க்கு
நல்லொழுக்க மில்லாச்சொ னண்ணுமே—கொல்லும்விடப்
பாம்பெனவுன் ஞரோ பழுதையே யானாலுந்
தூம்பமரும் புற்றடுத்தாற் சொல்.

இ - ள். நல் ஒழுக்கம் இல்லார் இடம் சேர்ந்த நல்லோர்க்கும்-தீயொழுக்கமுள்ளவருடைய இடத்தை அடைந்த நல்லொழுக்க

முள்ளவர்களுக்கும்,—நல் ஒழுக்கம் இல்லாச் சொல் நண்ணும்-இழி வாகிய சொல் உண்டாகும்,—தூம்பு அமரும் புற்று அடுத்தால் - துவாரத்தையுடைய புற்றுக்குச் சமீபத்திற் கிடந்தால்,—பழுதையே ஆனாலும் - வைக்கோற் புரியேயாயினும்,—கொல்லும் விடப்பாம்பு என உன்னேரோ - (அதனை) கொல்லுகின்ற நஞ்சையுடைய பாம்பு என்று நினையாரோ,—சொல் - நீ சொல்வாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். தீயொழுக்கமுடையோருடைய இடத்தைச் சேர்ந்த நல்லொழுக்கமுடையோரையும் உலகத்தார் தீயொழுக்கமுடையவ ராகச் சொல்வர். எ-ம். (அசு)

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு.

இ - ள். கற்றவரை மற்றவரை-படித்தவரையும் படியாதவரை யும்,—வாக்கு நயத்தால் அன்றி-(அவர்களுடைய) சொல்லின் நயத் தினாலன்றி,—ஆக்கை நயத்தால் அறியல் ஆகாது - வடிவழகினால் அறியக்கூடாது:—காக்கையொடு நீலச் சிறுகுயிலை - காகத்தையும் கருநிறத்தையுடைய சிறிய குயிலையும்,—நீடு இசையால் அன்றி - (அவைகளினுடைய) நீண்ட குரலால் (அறிதல்) அல்லாமல்,— கோலத்து அறிவருமோ - உருவத்தினால் அறிதல் கூடுமோ?— கூறு - நீ சொல்வாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். இவர் படித்தவர் இவர் படியாதவர் என்பதை அவரவர் சொல்லாலன்றி வடிவத்தாலறிதல் கூடாது. எ-ம். (அஎ)

ஆசையெனும் பாசத்தா லாடவர்தஞ் சிந்தைதனை
வீசுமனை யார்ந்தறியில் வீழ்த்தியே—மாசுபுரி
மாயா மனைவியரா மக்கண் மகவென்னும்
நாயாற் கடிப்பித்த னடு.

இ - ள். மாசு புரி மாயா மனைவியர் - குற்றத்தைச் செய்கின்ற கெடாத மனைவியராகிய வேடர்,—ஆடவர் தம் சிந்தைதனை - ஆட வர்களுடைய மனமாகிய விலங்கை,—ஆசை எனும் பாசத்தால் -

ஆசை என்கின்ற கயிற்றினால்,—வீசும் மனை ஆம் தறியில் வீழ்த்தி- உலையச்செய்கின்ற இல்வாழ்க்கையாகிய தூணிற் கட்டி,—மக்கள் மகவு என்னும் நாயால் கடிப்பித்தல் - ஆண்மக்கள் பெண்மக்கள் என்கின்ற நாய்களாற் கடிப்பித்தலை,—நாடு - நீ நினைப்பாயாக—ஆ- இஃதென்ன கொடுமை! எ - று. ஏ அசை.

இ-ம். ஒருவன் இல்லாச்சிரமத்தில் துர்க்குணமுடைய மனைவி மக்களால் வருந்துதல், விலங்கு வேடரிடத்தில் அகப்பட்டு நாய் களாற் கடிக்கப்படுதல் போலும். எ-ம். (அஅ)

தானறிந்தோ ருக்குதவி தன்னா லமையுமெனில்
தானுவந் தீத றலையாமே—ஆனதனாற்
சொன்னாற் புரிதலிடை சொல்லியும்பன் னாண்மறுத்துப்
பின்னாட் புரிவதுவே பின்.

இ - ள். தான் அறிந்தோருக்கு - தான் பழகிய ஒருவருக்கு,— உதவி தன்னால் அமையும் எனில்-உதவி (செய்யத்) தன்னால் இயலு மாயின்,—தான் உவந்து ஈதல் தலை ஆம் - (அவர் கேட்குமுன்) தான் (அவருடைய குறிப்பையறிந்து அவ்வுதவியை) மகிழ்ந்து செய்தல் முதலாம்;—ஆனதனால்-ஆதலினால்,—சொன்னால் புரிதல் இடை - (அவர்) கேட்டபின் செய்தல் இடையாம்.—சொல்லியும் - (அவர்) கேட்டும்,—பல் நாள் மறுத்து - பல நாட் (செய்யாது) மறுத்து,—நாள் புரிவது பின் - அதன் பின்பு செய்வது கடையாம். எ - று. ஏ அசை.

இ-ம். கேளாமற் செய்தல், கேட்டபின் செய்தல், கேட்ட பின் னும் மறுத்துச்செய்தல் என்னும் மூவகை உதவியும் முறையே முதல் இடை கடை என்று சொல்லப்படும். எ-ம். (அகூ)

உற்ற மறையகத்தி னுய்க்குமவ னுத்தமனே
மற்றம் மறைபகர்வோன் மத்திமனே—முற்றிழையே
அத்த முறலாற் புகல்வா னதமனென
வித்தகரா லோதும் விரித்து.

இ - ள். முற்று இழையே - (தொழில்) முற்றிய ஆபரணத்தை யுடையவளே,—உற்ற மறை அகத்தில் உய்க்குமவன் உத்தமன் -

(தன் செவியிற்) பொருந்திய இரகசியத்தை (ஒருவருக்கும் வெளியிடாமல் தன்) மனத்தில் அடக்கிவைத்திருப்பவன் உத்தமன்,—அமறை பகர்வோன் மத்திமன் - அந்த ரகசியத்தைப் (பிறர்க்குச்) சொல்லுவோன் மத்திமன்,—அத்தம் உறலால் புகல்வான் அதமன் என - பொருளைப் பெறுதலினால் (அவ்விரகசியத்தைச்) சொல்லுவோன் அதமன் என்று,—வித்தக நூல் விரித்து ஓதும் - நல்லறிவைப் போதிக்கின்ற நூல்கள் விரித்துச் சொல்லும். எ - று. ஏ, மற்று அசை.

இ-ம். இரகசியத்தைச் சொல்லாதவர் உத்தமர்; சொல்லுவோர் மத்திமர்; பொருள் வாங்கிக்கொண்டு சொல்லுவோர் அதமர். எ-ம்.

உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
ஆங்கமுகு போல்வா ரதம ரவர்களே
தேங்கதலி யும்போல்வார் தேர்ந்து.

இ - ள். உத்தமர் தேர்ந்து ஈயுமிடத்து ஓங்கு பனைபோல்வர்- உத்தமர் (பிறருடைய குறிப்பை) அறிந்து கொடுக்குமிடத்து உயர்ந்த பனையைப் போல்வர்.—மத்திமர் தெங்குதனை மானுவர் - மத்திமர் தென்னமரத்தைப் போல்வார்.—அதமர் முத்து அலரும் கமுகு போல்வார்-அதமர்கள் முத்துப்போல அலருகின்ற கமுகைப்போல்வர்.—அவர்களே தேம் கதலியும் போல்வார் - அந்த அதமர்களே தித்திப்பாகிய வாழையையும் போல்வர். எ-று. தாம், ஏ, ஆம் அசை.

இ-ம். கொடையாளர் கொடுக்குந் தன்மைகளினால் உத்தமர் மத்திமர் அதமர் என மூவகைப்படுவர். எ-ம்.

பனை தனக்கொருவர் நீர் விட்டு வளர்க்காமலிருக்கப் பயனைக் கொடுத்தல்போல உத்தமர் தம்மை ஒருவர் கேளாமலிருக்கக் குறிப்பறிந்து கொடுத்தலினாலும், தென்னை சிலகாலம் நீர் விட்டு வளர்க்கப் பயனைக் கொடுத்தல்போல மத்திமர் தம்மை ஒருமுறை கேட்டவுடன் கொடுத்தலினாலும், வாழையும், கமுகும் அடிக்கடி நீர்விட்டு வளர்க்கப் பயனைக் கொடுத்தல்போல அதமர் பலமுறை கேட்டபின் கொடுத்தலினாலும், இம்மரங்கள் மூவகைக் கொடையாளர்களுக்கும் உவமானமாயின. (கக)

எல்லோர் தமக்கு மினிதுதவ லன்றியே
நல்லோர் தமக்குதவி நாடாரே—வல்லதரு
நாமநிதி மேக நயந்துதவ லன்றியே
தாமுதவி நாடுமோ சாற்று.

இ - ள். நல்லோர் - மேலோர்,—எல்லோர் தமக்கும் இனிது உதவல் அன்றி - (தாம்) எல்லாருக்கும் மகிழ்ச்சியோடு கொடுப்பதல்லாமல்,—தமக்கு உதவி நாடார் - (அவர்களிடத்துத்) தமக்குப் பிரதியுபகாரத்தை விரும்பார்:—வல்லதரு நாமநிதி மேகம் - (கொடையில்) வல்ல கற்பகவிருக்ஷமும் பெருமையையுடைய சங்கநிதி பதும நிதிகளும் மேகங்களும்,—நயந்து உதவல் அன்றி-(தாம் பிறருக்கு) விரும்பிக் கொடுப்பதல்லாமல்,—தாம் உதவி நாடுமோ-தாம் (அவர்களிடத்துப்) பிரதியுபகாரத்தை விரும்புமோ?—சாற்று-நீ சொல்வாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். மேலோர்பிரதியுபகாரத்தை விரும்பாதுகொடுப்பர். எ-ம்.

வெய்யோன் கிரண மிகச்சுடுமே வெய்யவனிற்
செய்யோன் கிரணமிகத் தீதாமே—வெய்யகதிர்
எல்லோன் கிரணத் தெரியினினு மெண்ணமில்லார்
சொல்லே மிகவுஞ் சுடும்.

இ - ள். வெய்யோன் கிரணம் மிகச் சுடும் - சூரியகிரணம் மிகச்சுடும்,—செய்யோன் கிரணம் வெய்யவனில் மிக தீது ஆம் - அக்கினியின் காந்தி சூரியகிரணத்திலும் மிகக்கொடியதாயிருக்கும்,—வெய்ய கதிர் எல்லோன் கிரணத்து எரியினிலும் - வெம்மையாகிய ஒளியையுடைய சூரியகிரணத்திலும் அக்கினியிலும் பார்க்க,-எண்ணம் இல்லார் சொல்லே மிகவும் சுடும் - நல்லறிவில்லாத மூடருடைய (தீய) சொல்லே மிகவும் சுடும். எ - று. ஏ அசை.

இ-ம். துட்டருடைய தீச்சொற்கள் நெருப்பினுங் கொடியன. எ-ம். (கூ௩)

திங்க ளமிர்த கிரணமிகச் சீதளமே
திங்களினுஞ் சந்தனமே சீதளமாம்—இங்கிவற்றின்
அன்பறிவு சாந்த மருளுடையார் நல்வசனம்
இன்பமிகுஞ் சீதளமா மே.

இ - ள். திங்கள் அமிர்த கிரணம் மிகச் சீதளம் - சந்திரனுடைய அமிர்தகிரணம் மிகவுங் குளிர்ந்தது;—சந்தனமே திங்களினும் சீதளம் ஆம்-சந்தனமே சந்திரனிலும் குளிர்ந்ததாம்;—அன்பு அறிவு சாந்தம் அருள் உடையார் நல்வசனம் - அன்பும் அறிவும் பொறுமையும் அருளும் உடையோருடைய இனிய வார்த்தை,—இவற்றின் இன்பம் மிகும் சீதளம் ஆம் - இந்த இரண்டைப் பார்க்கிலும் இன்பத்தை மிகச் செய்கின்ற குளிர்ச்சியுள்ளதாம். எ - று. ஏ, இங்கு அசை.

இ-ம். அன்பு முதலிய நற்குணங்களுடையோருடைய இன்சொற்கள் மிகுந்த இன்பத்தைக் கொடுக்கும். எ-ம். (கஉச)

சீராம்வெண் ணீற்றுத் திரிபுண் டரம்விடுத்தே
பேரான முத்தி பெறவிரும்பல்—ஆரமிர்த
சஞ்சீ வினைவிடுத்தே சாகா திருப்பதற்கு
நஞ்சேசு புசித்ததுபோ னாடு.

இ - ள். சீர் ஆம் வெண்ணீற்றுத் திரிபுண்டரம் விடுத்து - ஐசுவரியமாகிய வெண்மையையுடைய விபூதியினாலே திரிபுண்டரந் தரியாது (வேறொன்றைத் தரித்து),—பேர் ஆன முத்திபெற விரும்பல் - மேன்மையாகிய மோக்ஷத்தை அடையும்படி (ஒருவன்) ஆசைப்படுதல்,—சாகாதிருப்பதற்கு - சாகாதிருத்தற்கு,—ஆர் அமிர்த சஞ்சீவினை விடுத்து - அருமையாகிய அமுதசஞ்சீவினை உண்ணாமல்,—நஞ்சே புசித்ததுபோல் நாடு - நஞ்சையே உண்ணுவது போலும் என்றறிவாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். முத்தியை விரும்புவோர் விபூதியினாலே திரிபுண்டரந் தரித்தல்வேண்டும். எ-ம். (கஉ௫)

செந்தா மரையிரவி சேருதயம் பார்க்குமே
சந்திரோ தயம்பார்க்குந் தண்குமுதங்—கந்தமிகும்
பூவலரப் பார்க்கும் பொறிவண் டரனன்பர்
தேவரவைப் பார்ப்பர் தெளிந்து.

இ - ள். செந்தாமரை சேர் இரவி உதயம் பார்க்கும் - செந்தாமரை வருகின்ற சூரியனுடைய உதயத்தைப் பார்க்கும்,--தண் குமு

தம் சந்திரோதயம் பார்க்கும்-குளிர்ச்சியாகிய ஆம்பல் சந்திரோதயத்தைப் பார்க்கும்,—பொறி வண்டு கந்தம் மிகும் பூ அலரப் பார்க்கும் - புள்ளியையுடைய வண்டு வாசனை மிகுகின்ற பூக்கள் அலர (அவற்றைப்) பார்க்கும்,—அரன் அன்பர் தெளிந்து தே வரவைப் பார்ப்பர்-சிவனடியார்கள் (கேட்டல்·சிந்தித்தல்களால்) தெளிந்து, சிவபெருமான் (தமது தியானத்தில்) எழுந்தருளி வருதலைத் தரிசிப்பர். எ - று. ஏ அசை.

இ-ம். மெய்ஞ்ஞானிகள் சிவப்பேற்றை விரும்புவர். எ-ம். (கசு)

வில்லமறுகுக் கொவ்வா மென்மலர்க ணால்வரெனும்
நல்லவன்பர் சொற்கொவ்வா நான்மறைகள்-மெல்லிநல்லாய்
ஆமந் திரமெவையு மைந்தெழுத்தை யொவ்வாவே
சோமசுந்த ரற்கென்றே சொல்.

இ - ள். மெல்லி நல்லாய் - மெல்லிய இயல்பினையுடைய பெண்ணே,—சோமசுந்தரற்கு-உமாதேவியாரோடு கூடிய பேரழகராகிய சிவபெருமானுக்கு,—மெல் மலர்கள் வில்லம் அறுகுக்கு ஒவ்வா - மென்மையாகிய புஷ்பங்கள் வில்வத்துக்கும் அறுகுக்கும் ஒப்பாகா.—நான் மறைகள் - (தாம் அருளிச்செய்த) நான்கு வேதங்களும்,—நால்வர் எனும் நல்ல அன்பர் சொற்கு ஒவ்வா-(திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் முதலிய) நால்வர் என்கின்ற மெய்யடியார்கள் அருளிச்செய்த தேவார திருவாசகங்களுக்கு ஒப்பாகா;—ஆம் மந்திரம் எவையும் ஐந்தெழுத்தை ஒவ்வா - (சுத்தமாயையில்) உண்டாகிய மந்திரங்கள் எல்லாம் (தமது திருவுருவாகிய) ஸ்ரீபஞ்சாக்ஷரத்துக்கு ஒப்பாகா,—என்று சொல் - என்று சொல்வாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். சிவபெருமான் வில்வத்திலும் அறுகிலும் தேவார திருவாசகங்களிலும் ஸ்ரீபஞ்சாக்ஷரத்திலும் அதிக பிரீதியுடையவர். எ-ம்.()

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினுநூல்
வல்லா னொருவனையே மானுவரோ—அல்லாரும்
எண்ணிலா வான்மீ னிலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு.

இ - ள். கல்லார் பலர் கூடிக் காதலித்து வாழினும் - படியாத மூடர் பலர்கூடி (ஒருவரையொருவர்) விரும்பி வாழ்ந்தாலும்,—நூல் வல்லான் ஒருவனையே மானுவரோ - கல்வியில் வல்ல ஒருவனையே ஒப்பாவரோ?—வானகத்து-ஆகாயத்தில்,—அல் ஆரும் எண் இலா வான்மீன் இலகிடினும்-இரவில் நிறைந்த அளவில்லாத நக்ஷத்திரங்கள் விளங்கினாலும்,—ஓர் வெண் நிலா ஆமோ - ஒரு வெண்மையாகிய சந்திரனுக்கு ஒப்பாகுமோ,—விளம்பு - நீ சொல்வாயாக. எ-று.

இ-ம். மூடர் பலர் கூடினாலும் ஒரு வித்துவானுக்கொப்பாகார். எ-ம். (கூ௮)

சந்தனத்தைச் சேர்தருவுந் தக்க மணங்கமழுஞ்
சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற—அந்தவனந்
தானுமச் சந்தனமுந் தன்னினமு மாள்வதன்றித்
தானுங் கெடச்சுடுமே தான்.

இ - ள். சந்தனத்தைச் சேர் தருவும் தக்க மணம் கமழும்-சந்தனமரத்தைச் சேர்ந்த (மற்றை) மரங்களும் தகுதியாகிய (அச்சந்தன) மணம் கமழப் பெறும்,—சந்தனத்தைச் சார்வேய் - சந்தன மரத்தை அடுத்த மூங்கிலானது,—தழல் பற்ற - நெருப்புப் பற்றிக் கொள்ள (அதனால்),—அந்த வனம் தானும்-(தனக்கிடமாகிய) அந்தக்காடும்,—அச் சந்தனமும் - அந்தச் சந்தனமரமும்,—தன் இனமும் மாள்வது அன்றி - தன் சாதியாகிய மூங்கில்களும் எரிவது அல்லாமல்,—தானும் கெடச்சுடுமே - தானும் அழியும்படி சுடுமே. எ - று. தான் அசை.

இ-ம். பெரியோரை அடுத்த சிலர் அவராற் பெருமையடைவர்; சிலர் அவரைக் கெடுப்பதன்றித் தாமுந் தம்மினத்தோடு கெடுவர். எ-ம். (கூகூ)

கங்கைநதி பாவஞ் சசிதாபங் கற்பகந்தான்
மங்க லுறும்வறுமை மாற்றுமே—துங்கமிகும்
இக்குணமோர் மூன்றும் பெரியோ ரிடஞ்சேரில்
அக்கணமே போமென் றறி.

இ-ள். கங்கை நதி பாவம் - கங்கை நதி பாவத்தையும்,—சசி தாபம் - சந்திரன் வெப்பத்தையும்,—கற்பகம் மங்கல் உறும் வறுமை மாற்றும் - கற்பகவிருக்ஷம் (எல்லா நலங்களையும்) கெடும்படி செய்கின்ற வறுமையையும் போக்கும்,—பெரியோரிடம் சேரில் - பெரியோரிடத்திற் சேர்ந்தால்,—இக்குணம் ஓர் மூன்றும் அக்கணமே போம் - இந்தக் குணம் மூன்றும் அப்பொழுதே நீங்கும்;—(அதுமாத்திரமா!)—துங்கம் மிகும் என்று அறி - (பலவகை) உயர்வும் மிகவுண்டாகும் என்று அறிவாயாக. எ - று. தான், ஏ அசை.

இ-ம். பெரியோரை அடுத்தவருக்குப் பாவமும் தாபமும் வறுமையும் நீங்குதலன்றி, மேன்மையுண்டாம். எ-ம். (க00)

நீதிவெண்பாவுரை முற்றிற்று.

---

மூன்றும்பாலபாடம் முற்றுப்பெற்றது.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

# பின்னவெண்கள்.

| | | |
|---|---|---|
| வஈ | முந்திரி | $\frac{1}{320}$ |
| ஈ | அரைக்காணி | $\frac{1}{160}$ |
| உ | காணி | $\frac{1}{80}$ |
| உஈ | காணியரைக்காணி | $\frac{3}{160}$ |
| அ | அரைமா | $\frac{1}{40}$ |
| அஈ | அரைமாவரைக்காணி | $\frac{5}{160}$ |
| ஐ | முக்காணி | $\frac{3}{80}$ |
| ஐஈ | முக்காணியரைக்காணி | $\frac{7}{160}$ |
| ப | ஒருமா | $\frac{1}{20}$ |
| பஉ | மாகாணி அல்லது வீசம் | $\frac{1}{16}$ |
| பஅ | ஒருமாவரை | $\frac{3}{40}$ |
| பஐ | ஒருமாமுக்காணி | $\frac{7}{80}$ |
| ஃ | இரண்டுமா | $\frac{1}{10}$ |
| ஃஉ | இரண்டுமாக்காணி | $\frac{9}{80}$ |
| ஃஅ | இரண்டுமாவரை அல்லது அரைக்கால் | $\frac{1}{8}$ |
| ஃஐ | இரண்டுமாமுக்காணி | $\frac{11}{80}$ |
| ந | மூன்றுமா | $\frac{3}{20}$ |
| நஉ | மூன்றுமாக்காணி | $\frac{13}{80}$ |

| | | |
|---|---|---|
| ஙிசு | மூன்றுமாவரை | $\frac{7}{40}$ |
| ஙிஜு | மூன்றுமாமுக்காணி அல்லது மூன்றுவீசம் | $\frac{3}{16}$ |
| ஃ | நாலுமா | $\frac{1}{5}$ |
| ஃ ஜ | நாலுமாக்காணி | $\frac{17}{80}$ |
| ஃ சு | நாலுமாவரை | $\frac{9}{40}$ |
| ஃ ஜு | நாலுமாமுக்காணி | $\frac{19}{80}$ |
| வ | கால் | $\frac{1}{4}$ |
| வபஜ | காலேமாகாணி அல்லது காலேவீசம் | $\frac{5}{16}$ |
| வஹ | காலேயரைக்கால் | $\frac{3}{8}$ |
| வஙி | காலேமூன்றுவீசம் | $\frac{7}{16}$ |
| ௨ | அரை | $\frac{1}{2}$ |
| ௨பஜ | அரையேவீசம் | $\frac{9}{16}$ |
| ௨ஹ | அரையேயரைக்கால் | $\frac{5}{8}$ |
| ௨ஙி | அரையேமூன்றுவீசம் | $\frac{11}{16}$ |
| ஔ | முக்கால் | $\frac{3}{4}$ |
| ஔபஜ | முக்காலேவீசம் | $\frac{13}{16}$ |
| ஔஹ | முக்காலேயரைக்கால் | $\frac{7}{8}$ |
| ஔஙி | முக்காலேமூன்றுவீசம் | $\frac{15}{16}$ |
| க | ஒன்று | 1 |

# எண்சுவடி.

(௧)

| | |
|---|---|
| ௧ | ௧ |
| ௰ | ௰ |
| ௨ | ௨ |
| ௨௰ | ௨௰ |
| ௩ | ௩ |
| ௩௰ | ௩௰ |
| ௪ | ௪ |
| ௪௰ | ௪௰ |
| ௫ | ௫ |
| ௫௰ | ௫௰ |
| ௬ | ௬ |
| ௬௰ | ௬௰ |
| ௭ | ௭ |
| ௭௰ | ௭௰ |
| ௮ | ௮ |
| ௮௰ | ௮௰ |
| ௯ | ௯ |
| ௯௰ | ௯௰ |
| ௱ | ௱ |

(௨)

| | |
|---|---|
| ௧ | ௨ |
| ௰ | ௨௰ |
| ௨ | ௪ |
| ௨௰ | ௪௰ |
| ௩ | ௬ |
| ௩௰ | ௬௰ |
| ௪ | ௮ |
| ௪௰ | ௮௰ |
| ௫ | ௰ |
| ௫௰ | ௱ |
| ௬ | ௰௨ |
| ௬௰ | ௱௨௰ |

(௨)

| | |
|---|---|
| ௭ | ௰௪ |
| ௭௰ | ௱௪௰ |
| ௮ | ௰௬ |
| ௮௰ | ௱௬௰ |
| ௯ | ௰௮ |
| ௯௰ | ௱௮௰ |
| ௱ | ௨௱ |

(௩)

| | |
|---|---|
| ௧ | ௩ |
| ௰ | ௩௰ |
| ௨ | ௬ |
| ௨௰ | ௬௰ |
| ௩ | ௯ |
| ௩௰ | ௯௰ |
| ௪ | ௰௨ |
| ௪௰ | ௱௨௰ |
| ௫ | ௰௫ |
| ௫௰ | ௱௫௰ |
| ௬ | ௰௮ |
| ௬௰ | ௱௮௰ |
| ௭ | ௨௰௧ |
| ௭௰ | ௨௱௰ |
| ௮ | ௨௰௪ |
| ௮௰ | ௨௱௪௰ |
| ௯ | ௨௰௭ |
| ௯௰ | ௨௱௭௰ |
| ௱ | ௩௱ |

(௪)

| | |
|---|---|
| ௧ | ௪ |
| ௰ | ௪௰ |
| ௨ | ௮ |

(௪)

| | |
|---|---|
| ௨௰ | ௮௰ |
| ௩ | ௰௨ |
| ௩௰ | ௱௨௰ |
| ௪ | ௰௬ |
| ௪௰ | ௱௬௰ |
| ௫ | ௨௰ |
| ௫௰ | ௨௱ |
| ௬ | ௨௰௪ |
| ௬௰ | ௨௱௪௰ |
| ௭ | ௨௰௮ |
| ௭௰ | ௨௱௮௰ |
| ௮ | ௩௰௨ |
| ௮௰ | ௩௱௨௰ |
| ௯ | ௩௰௬ |
| ௯௰ | ௩௱௬௰ |
| ௱ | ௪௱ |

(௫)

| | |
|---|---|
| ௧ | ௫ |
| ௰ | ௫௰ |
| ௨ | ௰ |
| ௨௰ | ௱ |
| ௩ | ௰௫ |
| ௩௰ | ௱௫௰ |
| ௪ | ௨௰ |
| ௪௰ | ௨௱ |
| ௫ | ௨௰௫ |
| ௫௰ | ௨௱௫௰ |
| ௬ | ௩௰ |
| ௬௰ | ௩௱ |
| ௭ | ௩௰௫ |
| ௭௰ | ௩௱௫௰ |
| ௮ | ௪௰ |

(௫)

| | |
|---|---|
| ௮௰ | ௪௱ |
| ௯ | ௪௰௫ |
| ௯௰ | ௪௱௫௰ |
| ௱ | ௫௱ |

(௬)

| | |
|---|---|
| ௧ | ௬ |
| ௰ | ௬௰ |
| ௨ | ௰௨ |
| ௨௰ | ௱௨௰ |
| ௩ | ௰௮ |
| ௩௰ | ௱௮௰ |
| ௪ | ௨௰௪ |
| ௪௰ | ௨௱௪௰ |
| ௫ | ௩௰ |
| ௫௰ | ௩௱ |
| ௬ | ௩௰௬ |
| ௬௰ | ௩௱௬௰ |
| ௭ | ௪௰௨ |
| ௭௰ | ௪௱௨௰ |
| ௮ | ௪௰௮ |
| ௮௰ | ௪௱௮௰ |
| ௯ | ௫௰௪ |
| ௯௰ | ௫௱௪௰ |
| ௱ | ௬௱ |

(௭)

| | |
|---|---|
| ௧ | ௭ |
| ௰ | ௭௰ |
| ௨ | ௰௪ |
| ௨௰ | ௱௪௰ |
| ௩ | ௨௰௧ |
| ௩௰ | ௨௱௰ |
| ௪ | ௨௰௮ |
| ௪௰ | ௨௱௮௰ |
| ௫ | ௩௰௫ |
| ௫௰ | ௩௱௫௰ |
| ௬ | ௪௰௨ |
| ௬௰ | ௪௱௨௰ |
| ௭ | ௪௰௯ |
| ௭௰ | ௪௱௯௰ |
| ௮ | ௫௰௬ |
| ௮௰ | ௫௱௬௰ |
| ௯ | ௬௰௩ |
| ௯௰ | ௬௱௩௰ |
| ௱ | ௭௱ |

(௮)

| | |
|---|---|
| ௧ | ௮ |
| ௰ | ௮௰ |
| ௨ | ௰௬ |
| ௨௰ | ௱௬௰ |
| ௩ | ௨௰௪ |
| ௩௰ | ௨௱௪௰ |
| ௪ | ௩௰௨ |
| ௪௰ | ௩௱௨௰ |
| ௫ | ௪௰ |
| ௫௰ | ௪௱ |
| ௬ | ௪௰௮ |
| ௬௰ | ௪௱௮௰ |
| ௭ | ௫௰௬ |
| ௭௰ | ௫௱௬௰ |
| ௮ | ௬௰௪ |
| ௮௰ | ௬௱௪௰ |
| ௯ | ௭௰௨ |
| ௯௰ | ௭௱௨௰ |
| ௱ | ௮௱ |

(௯)

| | |
|---|---|
| ௧ | ௯ |
| ௰ | ௯௰ |
| ௨ | ௧௮ |
| ௨௰ | ௱௮௰ |
| ௩ | ௨௰௭ |

(௯)

| | |
|---|---|
| ௩௰ | ௨௱௭௰ |
| ௪ | ௩௰௬ |
| ௪௰ | ௩௱௬௰ |
| ௫ | ௪௰௫ |
| ௫௰ | ௪௱௫௰ |
| ௬ | ௫௰௪ |
| ௬௰ | ௫௱௪௰ |
| ௭ | ௬௰௩ |
| ௭௰ | ௬௱௩௰ |
| ௮ | ௭௰௨ |
| ௮௰ | ௭௱௨௰ |
| ௯ | ௮௰௧ |
| ௯௰ | ௮௱௰ |
| ௱ | ௯௱ |

(௰)

| | |
|---|---|
| ௧ | ௰ |
| ௰ | ௱ |
| ௱ | ௲ |
| ௨ | ௨௰ |
| ௨௰ | ௨௱ |
| ௨௱ | ௨௲ |
| ௩ | ௩௰ |
| ௩௰ | ௩௱ |
| ௩௱ | ௩௲ |
| ௪ | ௪௰ |
| ௪௰ | ௪௱ |
| ௪௱ | ௪௲ |
| ௫ | ௫௰ |
| ௫௰ | ௫௱ |
| ௫௱ | ௫௲ |
| ௬ | ௬௰ |
| ௬௰ | ௬௱ |
| ௬௱ | ௬௲ |
| ௭ | ௭௰ |
| ௭௰ | ௭௱ |
| ௭௱ | ௭௲ |
| ௮ | ௮௰ |

| (ய) | | (ய) | | (ய) | |
|---|---|---|---|---|---|
| அய | அா | கூா | கூது | ாது | யாது [அல் |
| அா | அஞ | து | யது | லது பத்துலக்ஷம். | |
| கூ | கூய | யது | ாது | யாது | கோடி. |
| கூய | கூா | [அல்லது லக்ஷம். | | | |

# குறுந்தொகை ஏற்றம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வது உ கொண்டது | ல | ல ாஉய ,, | ஜ | ஜு உய ,, | ஜ |
| வது ச ,, | ஃ | ல ாசுய ,, | க | ப ரு கொண்டது. | வ |
| வது அ ,, | சு | | | ப ய ,, | ஒ |
| வது யஉ ,, | து | ஃ உ கொண்டது. | சு | ப யரு ,, | ஜ |
| வது யசு ,, | ப | ஃ ந ,, | ஜ | ப உய ,, | க |
| வது உய ,, | பஃ | ஃ ச ,, | ப | பஃ உ கொண்டது. | ஹு |
| வது சய ,, | ஹு | ஃ ரு ,, | பஃ | | |
| வது சுய ,, | ஸ் | ஃ ய ,, | ஹு | பஃ ந ,, | ஸ் |
| வது அய ,, | வ | ஃ உய ,, | வ | பஃ ச ,, | வ |
| வது ாசுய ,, | ஒ | ஃ சய ,, | ஒ | பஃ அ ,, | ஒ |
| வது உாசய ,, | ஜ | ஃ சுய ,, | ஜ | பஃ யஉ ,, | ஜ |
| வது நாஉய ,, | க | ஃ அய ,, | க | பஃ யசு ,, | க |
| ல உ கொண்டது. | ஃ | சு உ கொண்டது. | ப | ஹு உ கொண்டது. | வ |
| ல ச ,, | சு | சு ரு ,, | ஹு | | |
| ல ரு ,, | சுல | சு ய ,, | வ | ஹு ச ,, | ஒ |
| ல சு ,, | து | சு உய ,, | ஒ | ஹு சு ,, | ஜ |
| ல அ ,, | ப | சு நய ,, | ஜ | ஹு அ ,, | க |
| ல ய ,, | பஃ | சு சய ,, | க | ஸ் உ கொண்டது. | வஹு |
| ல உய ,, | ஹு | ஜு ரு கொண்டது. | ஸ் | | |
| ல நய ,, | ஸ் | | | ஸ் ந ,, | ஒபஃ |
| ல சய ,, | வ | ஜு ய ,, | வஹு | ஸ் ச ,, | ஜ |
| ல அய ,, | ஒ | து யஞ ,, | ஒபஃ | | |

# குறுந்தொகை எண்சுவடி.

| மாகாணிவாய். (பஃ) | | (பஃ | | (பஃ) | |
|---|---|---|---|---|---|
| | | ா | சுவ | உா | யஉஒ |
| க | பஃ | உ | ஹு | ந | ஙஜு |
| ய | ஒஹு | உய | கவ | நய | கஜுஹு |

(பஃ)

| | |
|---|---|
| ஙா | கஅஜ |
| ச | வ |
| சய | உஒ |
| சா | உரு |
| ரு | வய |
| ருய | ஙஹ |
| ருா | ஙகவ |
| சு | வஹ |
| சுய | ஙஜ |
| சுா | ஙஎஒ |
| எ | வஃது |
| எய | சவஹ |
| எா | சஙஜ |
| அ | ஒ |
| அய | ரு |
| அா | ருய |
| கூ | ஒபஃ |
| கூய | ருஒஹ |
| கூா | ருசுவ |
| தூ | சுஉஒ |

அரைக்கால்வாய்.
(ஹ)

| | |
|---|---|
| க | ஹ |
| ய | கவ |
| ா | கஉஒ |
| உ | வ |
| உய | உஒ |
| உா | உரு |
| ங | வஹ |
| ஙய | ஙஜ |
| ஙா | ஙஎஒ |
| ச | ஒ |
| சய | ரு |
| சா | ருய |
| ரு | ஒஹ |
| ருய | சுவ |

(ஹ)

| | |
|---|---|
| ருா | சுஉஒ |
| சு | ஜ |
| சுய | எஒ |
| சுா | எரு |
| எ | ஜஹ |
| எய | அஜ |
| எா | அஎஒ |
| அ | க |
| அய | ய |
| அா | ா |
| கூ | கஹ |
| கூய | யகவ |
| கூா | ாயஉஒ |
| தூ | ாஉரு |

மும்மாமுக்காணி
(ஃது) வாய்.

| | |
|---|---|
| க | ஃது |
| ய | கஜஹ |
| ா | கஅஜ |
| உ | வஹ |
| உய | ஙஜ |
| உா | ஙஎஒ |
| ங | ஒபஃ |
| ஙய | ருஒஹ |
| ஙா | ருசுவ |
| ச | ஜ |
| சய | எஒ |
| சா | எரு |
| ரு | ஜஃது |
| ருய | கூவஹ |
| ருா | கூஙஜ |
| சு | கஹ |
| சுய | யகவ |
| சுா | ாயஉஒ |
| எ | கவபஃ |
| எய | யஙஹ |

(ஃஜ)

| | |
|---|---|
| எா | ாஙகவ |
| அ | கஒ |
| அய | கரு |
| அா | ாருய |
| கூ | கஒஃஜ |
| கூய | யசுஜஹ |
| கூா | ாசுஅஜ |
| தூ | ாஅஎஒ |

கால்வாய்.
(வ)

| | |
|---|---|
| க | வ |
| ய | உஒ |
| ா | உரு |
| உ | ஒ |
| உய | ரு |
| உா | ருய |
| ங | ஜ |
| ஙய | எஒ |
| ஙா | எரு |
| ச | க |
| சய | ய |
| சா | ா |
| ரு | கவ |
| ருய | யஉஒ |
| ருா | ாஉரு |
| சு | கஒ |
| சுய | யரு |
| சுா | ாருய |
| எ | கஜ |
| எய | யஎஒ |
| எா | ாஎரு |
| அ | உ |
| அய | உய |
| அா | உா |
| கூ | உவ |
| கூய | உஉஒ |

(வ)

கா | உஉ௫ | கா | ௩௰ | ௩௰ | உஉ௫

ஜ | உ௫ம | எ | ௩௭ | ச | ௩

எம | ௩௫ | சம | ௩ம

## அரைவாய்.

(ஏ)

எா | ௩௫ம | சா | ௩௰

அ | ச | ௫ | ௩

அம | சம | ௫ம | ௩எ

அா | சா | ௫ா | ௩எ௫

க | ச௭ | கா | ச௭

கம | ச௫ | காம | ச௫

கா | ச௫ம | கா | ச௫ம

ஜ | ௫ா | எ | ௫வ

எம | ௫உ

## முக்கால்வாய்.

(ஜ)

எா | ௫உ௫

அ

க | ஜ | அம

ம | எ௭ | அா

ா | எ௫ | க

உ | க௭ | கம | கா எ

உம | க௫ | கா | கா எ௫

உா | க௫ம | ஜ | எ௫ம

௩ | உவ

௩ம | உஉ௭